# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்:32

சுடர் 33 கதிர் 45 மார்கழி 26ஆம் நாள் புதன்கிழமை 10 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2048


## லொறியுடன் ஹைஏஸ் மோதி
# கொக்காவிலில் கோர விபத்து
## நால்வர் பரிதாபச் சாவு

கிளிநொச்சி. ஜனவரி 10
வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியுடன் ஹைஏஸ் வாகனம் மோதியது. ஹையேஸ் வாகனத்தில் பயணித்த 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார். இந்தக் கோரவிபத்துகிளிநொச்சி, கொக்காவில் சந்திக்கு அருகில் (55ஆவது மைல்கல்) நேற்று இரவு 8.30 மணியளவில் நடந்துள்ளது. >> 06



விபத்துக்குள்ளான ஹைஏஸ்

## தடம்புரண்ட ஜேசிபியின் கீழ் சிக்கி மாணவன் சாவு
### முழங்காவிலில் கோரச் சம்பவம்

கிளிநொச்சி. ஜன.10
வேகமாகப் பயணித்த ஜேசிபி வாகனம் திடீரெனத் தடம்புரண்டது. அதில் நசியுண்ட மாணவன் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். >> 26



### நீர்வேலி விபத்து:
## சிறுமியின் பேரனும் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம். ஜன.10
கடந்த 2 ஆம் திகதி நீர்வேலியில் நடந்த விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த இருவரில் >> 06

## பசுவை இறைச்சிக்குக் கொன்று கன்றை வீதியில் வீசிய கொடூரம்



யாழ்ப்பாணம். ஜன. 10
கன்று ஈனும் நிலையிலிருந்த பசுவைக் கொன்று இறைச்சியாக்கியவர்கள் பசுவின் வயிற்றில் இருந்த கன்றுக்குட்டியைக் கழிவுகளுடன் வீசி விட் >> 06

### மத்திய வங்கி பிணைமுறி மோசடி
## விசாரணை அறிக்கையால் மன்றில் வாதப் பிரதிவாதம்

கொழும்பு. ஜன. 10
மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை தொடர்பிலும், சிறப்பு நாடாளுமன்ற அமர்வு சம்பந்தமாகவும் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரி >> 06

### மலசலகூடம் கட்டிய
## நிதியை வழங்காததால் திண்டாட்டத்தில் மக்கள்

வடமாகாண சபை அமர்வில் உறுப்பினர் தியாகராசா காட்டம் >> 06

## ஆளணிப் பிரச்சினையை தீர்க்க முடியாதிருப்பது ஏன்?

வடக்கு எம்.பிக்கள், அமைச்சரிடம் வடக்கு சுகாதார அமைச்சர் கேள்வி >> 06

## சர்வேஸ்வரனை தெரிந்தது முதலமைச்சர் செய்த தவறு

வட மாகாண சபை உறுப்பினர் தியாகராசா கடும் குற்றச்சாட்டு >> 06




## அட்டமி, நவமி பிரச்சினையையும் ஆராய்ந்தது மாகாண சபை!!

யாழ்ப்பாணம். ஜன. 10
வடக்கு மாகாண சபையின் அமர்வை அட்டமி நவமியில் ஆரம்பித்தமை சரியா? தவறா? என்று நேற்று ஆராய்ந்தது வடக்கு மாகாண சபை. அது தொடர்பாக இறுதிவரை முடிவெடுக்கப்படவில்லை.
வடக்கு மாகாண சபையின் நடப் >> 06

## 10,000 பக்தர்கள் கச்சதீவுக்கு

யாழ்ப்பாணம். ஜன.10
கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23,24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதில் இலங்கையில் இருந்து 10 ஆயிரம் பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என்று யாழ்ப்பாண மாவட்ட செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் நடைபெற்று வருகின்றன என்றும் அவர் >> 06

## மைத்திரி – ரவி திடீர் சந்திப்பு

கொழும்பு. ஜன. 10
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்குமிடையில் முக்கிய சந்திப்பொன்று நடந்துள்ளது.
மத்திய வங்கி பிணை >> 25

## பதவிக் காலம் எதுவரை? விளக்கம் கோரும் மைத்திரி

கொழும்பு. ஜன. 10
2021ஆம் ஆண்டுவரை அரச தலைவராகப் பதவி வகிக்க முடியுமா என்பது தொடர்பான வியாக்கியானத்தை எதிர்வ >> 06

### 11 தமிழர்கள் கடத்தப்பட்ட வழக்கு:
## தசநாயக்க உட்பட அறுவருக்குப் பிணை

கொழும்பு. ஜன. 10
2008ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மாணவர்கள் ஐவர் உட்பட 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கடற்படையின் முன் >> 25


ஆச்சரியம் அறிவீர்களா..?

132 பக்கங்களுடன் 100 இற்கும் மேற்பட்ட எழுத்தாளர்களை உள்ளடக்கியதாகத் தயாராகிக் கொண்டிருக்கிறது

தவறவிடாதீர்கள்! தவறிழைக்காதீர்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

உதயனின் பொங்கல் மலர் -2018



# அடக்குமுறை ஆட்சியை நடத்தினார் மகிந்த ராஜபக்ச

### நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் குற்றச்சாட்டு

மட்டக்களப்பு,ஜன.10

கை கட்டி மௌனித்து முட்டுக்காலில் வைக்கக்கூடிய சமூகத்தை கிழக்கு மாகாணத்தில் உருவாக்க வேண்டும், அவர்கள் வாய்திறந்து பேச கூடாது, அவ்வாறு பேசினால் தண்டனை கொடுக்கப்பட வேண்டும் என்ற எழுத்தப்படாத சட்டம் மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இருந்தது இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகம் கடந்த 7ஆம் திகதி திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் பல புத்திஜீவிகள் ஊடகவியாளர்கள். கல்விமான்கள் வேட்டையாடப்பட்டார்கள். அவர்களை வேட்டையாடிய வேட்டைக்காரர்கள் யார்?

இவர்களது பிரதிநதிகள் வாக்குகேட்டு வந்தால் நீங்கள் கடத்தியவர்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களை நேரில் கொண்டுவந்தால் உங்களுக்கு ஆதரவு வழங்குவோம் என கூறுங்கள். தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடுகின்றவர்கள் சோரம் போகாத கட்சியிலுள்ளவர்கள். கொள்கையுடன் செயற்படுபவர்கள். இலஞ்ச ஊழலில் அகப்படாதவர்கள் மக்களின் உரிமைக்கான போராட்டத்தை அபிவிருத்தியையும் ஒன்றாக மேற்கொள்ள வேண்டும். என்றார். (ந-ரி4)

## அரசமைப்பில் சமஷ்டியை உருவாக்கவே முயல்கின்றோம்

### தமிழரசுக் கட்சி செயலாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.10

வடக்கு கிழக்கில் வாழ்கின்ற தமிழ் மக்கள் உலக நாடுகளில் உள்ள சிறுபான்மை மக்களைப் போன்று தங்களைத் தாங்களே ஆளுகின்ற ஆட்சி உரிமை பெற்றவர்களாக வாழ வேண்டும் என்பதற்காக அரசமைப்பில் சமஷ்டி என்கின்ற கூட்டாட்சி ஏற்படுத்துவதற்காக தொடர்ச்சியான செயற்பாடுகளில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

ஏறாவூரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சி சபைத் தேர்தல் அலுவலகம் கடந்த 7ஆம் திகதி திறக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

அனைத்து நாடுகளிலும் சுதந்திரமடைந்த பின்பு சொந்த நாட்டிலே சுயமரியாதையுடனும் கௌரவத்துடனும் வாழக்கூடிய நிலை ஏற்பட்டது. எமது நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து ஒவ்வொரு சட்டங்கள் உருவாகி தமிழருடை கழுத்தை நெரித்து தமிழர்களுடைய வாழ்வை மூச்சுத் திணரச் செய்தது.

எங்களுடைய வழிபாட்டு தலங்களை அவர்களுடையதாக அடையாளம் காட்டி எங்களுடைய மதத்துக்கு இன்னல்கள் விளைவித்தார்கள் இவ்வாறு எமது மொழி இனம் பண்பாடு கலைகலாசாரம் முழுவதையும் தங்கள் மயப்படுத்தி இந்த நாட்டில் இருக்கின்ற தமிழர்கள் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என எங்களுக்கு முத்திரை குத்தினார்கள். என்றார். (ந-ரி4)

## பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கவே தேர்தலில் போட்டியிடுகின்றோம்

### அரவிந்தகுமார் எம்.பி. தெரிவிப்பு

பதுளை.ஜன.10

சமூகப் பிரதிநிதித்துவங்களை தக்க வைத்துக் கொள்வதற்கும் அதிகரித்துக் கொள்வதற்கும் தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் சாணக்கியத்துடன் போட்டியிடுகின்றதென பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் தெரிவித்தார். பதுளையில் அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

மலையகத்தின் முப்பெரும் அமைப்புக்கள் ஒன்றிணைந்து தமிழ் முற்போக்கு கூட்டணியாக தேர்தலில் போட்டியிட்ட போதிலும் மூன்று அமைப்புக்களில் புரிந்துணர்வுகள் விட்டுக்கொடுப்புக்களோடு எவ்வித பாகுபாடு பாரபட்சங்களுமின்றி போட்டியிடுகின்றோம். நுவரெலியா மாவட்டத்தில் இரண்டாக இருந்த பிரதேச சபைகளை ஆறு பிரதேச சபைகளாக அதிகரித்தமை போன்று பதுளை மாவட்டத்திலும் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் பகுதிகளில் மேலும் பிரதேச சபைகளை அதிகரிக்கவும் தமிழ் முற்போக்கு கூட்டணி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. என்றார். (ந.ரி4)

## ஜனநாயக தேர்தல் முறையை சரியாக பயன்படுத்த வேண்டும்

### த.தே.கூ. வேட்பாளர் சரவணமுத்து தெரிவிப்பு

மட்டக்களப்பு.ஜன.10

கடந்த காலங்களில் நடைபெற்றதேர்தல்களில் ஆயுதக்குழுக்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது இன்று அந்நிலை மாறி ஜனநாயகமான தேர்தல் நடைபெற இருக்கின்றது.

இந்தத் தேர்தலை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். என்று துறைநீலாவணையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிடும் வேட்பாளர் க.சரவணமுத்து தெரிவித்தார். துறைநீலாவணையில் கடந்த 6 ஆம் திகதி நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்ததார்.

அவர் தெரிவித்ததாவது:

பிரதேச சபை மூலம் எமது கிராமத்துக்கு சரியான அபிவிருத்தி நடைபெறாமல் இருக்கின்றது கடந்த தேர்தல் விகிதாசார முறைப்படி நடைபெற்றது அதில் ஆயுதக்குழுக்களின் ஆதிக்கம் அதிகம் இருந்தது. இன்று அவ்வாறான சிக்கல் எதுவும் இல்லை. தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட்டு வட்டார மறையிலும் விகிதாசார முறையிலும் உறுப்பினர்கள் தெரிவாக உள்ளனர் இத்தத் தேர்தலில் சட்டத்துக்கு முரணாக எதனையும் செய்யமுடியாது. சட்டம் கடுமையாக்கப்பட்டு இருக்கின்றது எமது ஆதரவாளர்கள் அனைவரும் சட்டத்தை மதித்து எமது தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது. முன்பு நடைபெற்று முடிந்த நாடாளுமன்றம் மாகாணசபைத் தேர்தல்களில் 60 வீதத்திற்குக் குறைவான மக்களே வாக்களித்து இருக்கின்றனர் இதனை மாற்றி எமது மக்கள் அதிகமாக வாக்களிப்பதற்கான ஒழுங்குகளைச்செய்யவேண்டும். என்றார். (ந-ரி4)

## வினைத்திறன் உடையோரை தேர்தலில் தெரியுங்கள்

### சந்திரகுமார் தெரிவிப்பு

கிளிநொச்சி. ஜன.10

உள்ளூராட்சி தேர்தலில் மக்கள்தங்களின்பிரதிநிதிகளாக வினைதிறனும், ஒழுக்கமும் உள்ள பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும். அதுவே அளிக்கபோகும் வாக்கை அர்த்தமுள்ளதாக்கும். இவ்வாறு சமத்துவமும் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் அமைப்பாளர் மு.சந்திரகுமார் தெரிவித்தார் கிளிநொச்சியில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

உள்ளூராட்சி சபை மக்களுக்கான அரசியல் உரிமையை பெற்றுத்தருகின்ற களமல்ல. உள்ளூராட்சி சபைகள் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை முழுமை செய்கின்ற அமைப்பு.

கடந்த காலங்களில் பிரதேச சபைகளின் ஆட்சி அதிகாரங்களுக்கு மக்களால் தெரிவு செய்து அனுப்பட்டவர்கள் அங்கு வினைதிறனுடன் செயற்படவில்லை. நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வரும் விடயம் தேர்தல்களில் மக்கள் வெல்ல வேண்டும் என்பதே. மக்களுக்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றக் கூடிய, ஒழுக்கமுள்ள, நல்ல பிரதிநிதிகளை தெரிவு செய்ய வேண்டும், கட்சிகளுக்கு அப்பால் பிரதேசங்களில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களை பார்த்து வாக்களிக்க வேண்டும்-என்றார். (ந-ரி4,35)

## கிடைத்த வளமான எதிர்காலத்தை சரியாக பயன்படுத்த வேண்டும்

### டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

முல்லைத்தீவு.ஜன.10

வளமான எதிர்காலமொன்றை அமைப்பதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ள நிலையில் அதனை சரியான முறையில் பயன்படுத்தினால் தீர்க்கப்படக் கூடிய பல பிரச்சினைகளுக்கு இலகுவில் தீர்வுகளைக் காணமுடியும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

முல்லைத்தீவில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

வடக்கு மாகாண சபையூடாக கடந்த நான்கு வருடங்களை தமக்கான சந்தர்ப்பமாக கிடைக்கப் பெற்றும் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதனையும் செய்யாது மக்களை ஏமாற்றிவிட்டனர். வடக்கு மாகாணசபையின் அதிகாரத்திற்குட்பட்ட வீதிகள் உள்ளிட்ட உட்கட்டுமாணங்கள் எவற்றிற்கும் இதுவரையில் எவ்விதமான தீர்வுகளும் இதுவரையில் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

மக்களின் தேவைகளை அறிந்து அவர்களுக்கு சேவையாற்றுவதே எமது நோக்கமாக உள்ளது -என்றார். (ந.ரி4)

## கூட்டமைப்பு சோரம்போகாது

### கூறுகிறார் மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன்

புதுக்குடியிருப்பு.ஜன.10

கூட்டமைப்பு எப்போதுமே அரசிற்கோ அரச கட்சிகளுக்கோ சோரம்போகாது என்பதை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்கக்கூடிய ஒரே ஒருகட்சி இன்று தமிழ்தேசியக்கூட்டமைப்புத்தான்.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரன் தெரிவித்தார். புதுக்குடியிருப்பில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் போட்டியிடுகின்றன தேசிய கட்சிகள் சுயேட்சைக் குழுக்களால் எந்தவொரு பயனும் இல்லை. தங்களுடைய சுய லாபங்களுக்காகவும் பதவிகளை பெற்றுக்கொள்வதற்காகவும் தமிழர்களின் வாக்குகளை சிதறடித்து தமிழர்களின் எதிர்கால தீர்வுக்கு ஒரு முட்டுக்கட்டை போடுவதற்காகவும் இவர்கள் அரசுடன் இணைந்து செயற்படுகிறார்கள்.

தமிழ் மக்களுக்காக குரல்கொடுக்கக் கூடியது. தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தான். தமிழ்மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதில் எப்போதும் கூட்டமைப்பு உறுதியாக இருக்கும். கூட்டமைப்பு எப்போதுமே அரசுக்கோ அரச கட்சிகளுக்கோ சோரம்போகாது என்பதை மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். என்றார். (ந.ரி4.ரி3)



# சிங்கள மொழி பேசும் நண்பர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

தென்மராட்சி,ஜன.10

தென்னிலங்கையிலிருந்து சிங்கள மொழி பேசும் நண்பர்கள் இங்கே வந்திருப்பது நாம் அனைவரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற செய்தியை சொல்வதற்காகவே. இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே தெரிவித்தார்.



தென்னிலங்கையிலிருந்து வர்த்தக பெருமகன் சஞ்சீவ ஜெயவர்த்தன மற்றும் நண்பர்கள் மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலய மாணவர்களுக்கு சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிங்கள மொழி பேசும் நண்பர்கள் உங்களுக்காக பல இலட்சம் ரூபா செலவளித்து இங்கு வந்திருப்பது. நாம் எல்லோரும் ஒற்றுமையாக இந்த நாட்டில் வாழ வேண்டும் என்ற செய்தியை சொல்வதற்காகவே. அவர்கள் அன்பு இரக்கம் கருணை உள்ளிட்டவைகளை மனங்களில் கொண்டு இங்கே உங்களுக்கு உதவி செய்ய வந்திருக்கின்றார்கள்.

உங்களிடமிருந்து எதனையும் அவர்கள் எதிர்பார்த்து இந்த உதவிகளை செய்யவில்லை. போரால் பின்னடிக்கப்பட்ட இந்த மாணவர்கள் தமது கல்வியில் உயர் நிலையை அடைய வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கோடு இந்த கற்றல் உபகரணங்களை அங்கிருந்து கொண்டு வந்து உங்களுக்கு வழங்கியிருக்கின்றார்கள்.

கொழும்புக்கு அண்மையில் மற்றும் வெளிநாடு என எல்லா இடங்களிலும் பெரிய உயர் பதவிகளை வகிப்பவர்கள் தமிழர்களே. பொறியல் துறையிலும் மருத்துவத்துறையிலும் யாழ்ப்பாணத் தமிழர்களே சிறந்து விளங்குகின்றார்கள்.

நீங்கள் அவர்கள் போன்று பெரிய ஆளாக வருகின்றபோது இத, இன, குலம் மொழி பார்க்காது நாட்டில் வாழும் தமிழ் சிங்கள முஸ்லீம் மக்கள் அனைவருக்கும் உங்களது கடமையை வேறுபாடு இன்றி ஆற்ற வேண்டும் என்றே நான் எதிர்பார்கின்றேன். என்றார். பாடசாலை அதிபர் திரு.வை.ஜெயகாந்தன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட மாகாண ஆளுநர் மாணவர்களுக்கான கற்றல் பொதிகளை வழங்கினார்.

இதில், ஆளுநரின் உதவிச் செயலர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம். அந்தரங்க செயலர் ஜே.எம்.சோமசிறி மக்கள் தொடர்பு அதிகாரி நிசாந்த அல்விஷ் மற்றும் தென்மராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், உதவிக் கல்வி பணிப்பாளர் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (ரி2,8,9)

## நெல்லியடியில் சைக்கிள் திருட்டு

நெல்லியடி,ஜன.10

பூட்டாமல் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் நேற்று நெல்லியடிப் பகுதியில் நேற்றுத் திருடப்பட்டடுள்ளது.

பொருள்கள் வாங்குவதற்காக கடைக்குச் சென்றவர் சைக்கிளை பூட்டாம்ல் நிறுத்திவிட்டுச் சென்றுள்ளார் அவர் திரும்பி வந்து பார்த்தபோது சைக்கிள் திருடப்பட்ட தாக நெல்லியடிப் பொலிஸில் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர். (ரி2,26)

## சாதனை மாணவர்களுக்கு அரச தலைவர் பாராட்டு

கொழும்பு,ஜன.10

2017 க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் அகில இலங்கை ரீதியில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்ட மாத்தறை, சுஜாதா வித்தியாலயம் மற்றும் மாத்தறை மஹிந்த ராஜபக்ச வித்தியாலயத்தின் மாணவ மாணவியர் அரச தலைவர் மைத்ரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது மாணவர்களின் திறமைகளை பாராட்டிய அரச தலைவர், தனது வாழ்த்துக்களைத் தெரிவித்ததுடன், அவர்களது எதிர்கால கல்வி நடவடிக்கைகள் வெற்றியடையவும் ஆசீர்வாதம் வழங்கினார்.

மாத்தறை சுஜாதா வித்தியாலயத்தில் இம்முறை க.பொ.த. உயர்தர பரீட்சைக்குத் தோற்றிய உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்ற திலினி சந்துனிக்கா பலிஹக்கார, வர்த்தக பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற எஸ்.ஏ. துலானி ரசந்திக்கா,கலைப்பிரிவில் அகில இலங்கை ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்ற உசினி ஷிஹாரா சூரிய ஆரச்சி ஆகிய மாணவிகளும் மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தில் இம்முறை உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்ற பாரமி பிரசாதி ரன்சிறினி ஹெட்டியாரச்சி மற்றும் உயிரியல் தொழில்நுட்ப பாடப் பிரிவில் மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்ற பி.ஏ. ஹசித் புன்சர ஆகியோரும் அரச தலைவரை சந்தித்தனர்.

இதன்போது அரச தலைவர், மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார்.

குறித்த பாடசாலைகளில் சேவையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்களின் சேவையையும் அரச தலைவர் பாராட்டினார்.

அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன மற்றும் குறித்த மாணவர்களின் பெற்றோர் உள்ளிட்ட குழுவினரும் இதில் கலந்து கொண்டனர். (ரி2)



## குளவிக் கொட்டி ஐவர் பாதிப்பு

ஹற்றன்,ஜன.10

மஸ்கெலியா தோட்டத்தில் குளவி கொட்டுக்கு இலக்கான ஐவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்த சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நான்கு பெண்களும், ஆணொருவரும் மஸ்கெலியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பறவை ஒன்று தேன் குடிப்பதற்காக குளவி கூட்டினை தாக்கியதால் கலைந்த குளவிகள் தேயிலைக் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது தாக்கியுள்ளது. (ற-ரி2)

## தொடருந்திலிருந்து வீழ்ந்த முதியவர் மருத்துவமனையில்

சாவகச்சேரி ஜன.10

தொடருந்து நிறுத்தப்பட்ட முன்னர் இறங்கிய முதியவர் தவறி தண்டவாளத்தில் வீழ்ந்ததில் கையும் காலும் சில்லுக்குள் அகப்பட்டு சிதைந் தன.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை சாவகச்சேரி சங்கத்தானை தொடருந்து நிலையத்தில் இடம்பெற்றது.

ஹோரணையைச் சேர்ந்த 73 வயதான முதியவரே காயமடைந்தவராவார்.

தொடருந்து நிலையத்தில் தொடருந்து நிறுத்த முன்னர் குறித்த முதியவர் இறங்க முற்பட்டுள்ளார். இதன்போதே தவறி தண்டவாளத்தினுள் வீழ்ந்துள்ளார். கையும் காலும் தண்டவாளத்தில் தொடருந்து சில்லுக்குள் சிக்கி சிதைவடைந்தன என நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர். காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-2,9)

## கட்டுநாயக்கவில் 35 பேர் கைது; 52,500 அபராதம்

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் சந்தேகத்துக்கிடமாக சுற்றித் திரிந்த 35 பேருக்கு மினுவங்கொடை நீதவான் நீதிமன்றம் நேற்று அபராதம் விதித்துள்ளது.

இவர்கள் பல சமயங்களில் விமான நிலைய வளாகத்தில் தேவையின்றிச் சுற்றித் திரிந்த குற்றத்தில் கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணை மூலம் விடுவிக்கப்பட்டவர்கள்.

இவர்கள் அனைவருக்கும் விடுக்கப்பட்டிருந்த அழைப்பாணையின் பேரிலேயே நேற்று இந்த 35 பேரும் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர். அவர்களுக்கு தலா 1,500 ரூபா வீதம் 52500 ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதே குற்றத்தின் பேரில், அழைப்பாணை விடுக்கப்பட்டும் நீதிமன்றுக்குச் சமூகமளிக்காத மேலும் ஐந்து பேருக்கு பிடியாணை வழங்கப்பட்டுள்ளது. (ரி-2)

## கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை

கொழும்பு,ஜன.10

கடுவெல கொரதொட பிரதேசத்தில் நேற்றுக் காலை நபரொருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொரதொட மொரகெடிய பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய ஒருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் சகோதரியின் முன்னாள் கணவரால் இக் கொலை சம்பவம் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.


சம்பவம் தொடர்பில் சந்தேகநபரை தேடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரி-2)

## சுண்ணாம்புக் கற்கள் ஏற்றியவர் பிணையில் செல்ல அனுமதி

இளவாலை,ஜன.10

அனுமதிப் பத்திரமின்றி சுண்ணாம்புக் கற்கள் ஏற்றியவர் கைது செய்யப்பட்டு நேற்றுப் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

விளான் பகுதியில் வைத்து இளவாலையைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவர் சுண்ணாம்புக் கற்கள் ஏற்றிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டார். காங்கேசன்துறை சிறப்புக் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இளைவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். (ரி2,26)






# வவு. பஸ் நிலையம் திறந்து வைத்தமைக்கு நன்றி தெரிவிப்பு

*முதலமைச்சருக்கு யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவரால்*

யாழ்ப்பாணம், ஜன.10

வவுனியா புதிய பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்டமைக்கு வடக்கு மாகாண முதலமைச்சருக்கு யாழ்ப்பாண பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் கம்பனிகளின் இணையத் தலைவர் நன்றி தெரிவித்துள்ளார்

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது:

பல மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்டிருந்த வவுனியா புதிய பஸ் நிலையம் திறந்து வைக்கப்பட்ட நிலையில் ஒரு வருடகாலமாக இயங்காது இருந்தது.

இந்தநிலையில் கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் முதலமைச்சர் குறுகிய காலத்தில் தனியார் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை ஆகிய இருதரப்பினரும் ஒரே இடத்தில் இருந்து சேவை புரிவதற்கு ஒழுங்கமைத்து தந்தமைக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

நான்கு நாள்கள் இலங்கை போக்குவரத்துச் சபை பணிப் புறக்கணிப்பு செய்த போது எமது அனைத்து சங்கங்களைச் சார்ந்த பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள், நிர்வாக உறுப்பினர்கள், ஊழியர்கள் அனைவரும் எமது சேவையில் சளைக்காமல் பயணிகள் சேவையை பயணிகளுக்கு எவ்வித இடையூறும் இல்லாமல் திறம்பட நடத்தியிருந்தனர்.

பாடசாலை மாணவர்களுக்கு பயணக்கட்டணம் அறவிடாது அவர்களுக்கான பயணத்துக்கு முன்னுரிமை வழங்கியிருந்தனர்.

அத்துடன் மற்றும் சகல சேவைகளும் சில நிமிட இடைவெளியில் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு சேவையை வழங்கியமைக்காகவும் எமது ஸ்தாபனத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதோடு இதற்கு ஒத்துழைப்பு வழங்கிய மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம் என்றுள்ளது.

*அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட*

# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.10

இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்களின் விளக்கமறியல் எதிர்வரும் 23ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு, கச்சதீவு போன்ற கடல்பகுதிகளில் வைத்து இலங்கை கடற்படையினரால் கடந்த வருட இறுதிப் பகுதிகளில் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களின் வழக்கு விசாரணை நேற்றையதினம் ஊர்காவற்துறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே ஆஜர்ப்படுத்தப்பட்ட 54 இந்திய மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்துறை நீதிவான் எம்.ரியால் உத்தரவிட்டார். (எ-8)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாணம், ஜன.9

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் ஆசிரியர் தின விழா அண்மையில் நடைபெற்றது. மாணவர் முதல்வர் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தங்கப்பொன் கனகசபாபதி கலந்து சிறப்பித்தார் என பாடசாலை அதிபர் தெரிவித்துள்ளார்.



# மானிப்பாயில் 120 வீதிகளுக்கு மும்மொழிகளில் பெயர்ப்பலகை

யாழ்ப்பாணம், ஜன.10

மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட 600 வீதிகளில் 120 வீதிகளுக்கு முதற்கட்டமாக மும்மொழிகளில் வீதிப் பெயர்ப்பலகை வைக்கப்பட்டுள்ளது. மானிப்பாய் பிரதேச சபை செயலாளர் கு. சற்குணராசா இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை 25 கிராம அலுவலர் பிரிவினையும் மாதகல், பண்டத்தரிப்பு, மானிப்பாய், ஆனைக்கோட்டை ஆகிய நான்கு உபஅலுவலகங்களைக் கொண்ட பிரதேசம் ஆகும். இப்பிரதேசம்; 600க்கும் மேற்பட்ட வீதிகளை கொண்டது. பெயர் பொறிக்காத வீதிகளுக்கும் படிப்படியாக பெயர்ப்பலகை இடப்படும்.

இதேவேளை பிரான்பற்றில் தம்பித்துரை வீதிக்கு பதிலாக சுடலை வீதி என்றும், முல்லையடி வீதி என்பதற்கு பதிலாக சென்மேரிஷ் வீதி எனவும் பொறிக்கப்பட்டுள்ளது. எனவே பெயர் மாறியுள்ள வீதிகளுக்கு பதிலாக அதன் உண்மையான பெயர் இடப்படும் என்றார். (எ-50)



சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தினரால் வருடந்தோறும் திருவெம்பாவை இறுதி நாள் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த வருடமும் சங்கானை மாவடி ஞான வைரவர் ஆலயத்திலிருந்து மாணிக்க வாசகர் சுவாமிகளின் திருவுருவம் அலங்கார சோடனைகளுடனும், பக்த அடியார்களுடனும் அதிகாலை ஊர்ப்பவனி அண்மையில் சென்றது. அதைப்படத்தில் காணலாம்.

## மேடைப் பாடல்களின் அளிக்கை

யாழ்ப்பாணம் ஜன 10

யாழ்ப்பாண நாடக வரலாற்றை ஆவணப்படுத்தும் முகமாக யாழ்ப்பாண பல்கலைக் கழத்தின் நாடக மேடைப்பாடல்களின் அளிக்கை இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இதில் பிரபல இசைக்கலைஞரான முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணன் (கண்ணன் மாஸ்ரர்) தொண்ணூறுகளில் இசை அமைத்த பாடல்கள் அளிக்கை செய்யப்படவுள்ளன. நாடக ஆர்வலர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நுண்கலைத் துறை தலைவர் தா.சதானந்தன் தெரிவித்தார். (எ-4)

## சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம்.ஜன.10

யாழ்ப்பாணம் சுதுமலை அம்பாள் கோவிலின் முன் நிறுத்திவிட்டுச் சென்ற சைக்கிள் திருட்டு. மானிப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர் கடந்த சனிக்கிழமை சுதுமலை அம்பாள் கோவிலுக்குச் சைக்கிளில் சென்றுள்ளார். சைக்கிளை ஆலயத்தின் தெற்குப் புறமாக வெளியே விட்டு பூட்டிவிட்டு ஆலயத்தைத் தரிசிக்கச் சென்றுள்ளார். பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது சைக்கிள் காணாமல் போனமை தெரியவந்துள்ளது.

ஆலயச் சுற்றாடல் எங்கு தேடியும் சைக்கிள் கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. (எ-115)

*தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள்*

# ஓய்வுதியப்படிவம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்துக

சாவகச்சேரி,ஜன.10

தென்மராட்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஓய்வூதியர்கள் தமது ஓய்வுதியத்திற்கான வாழ்நிலை சான்றிதழை அந்தந்தப் பிரிவுக் கிராம அலுவலரிடம் ஒப்படைத்து படிவம் வழங்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினர் அறிவித்துள்ளனர்.

இந்தவருடத்துக்கான வாழ்நிலை சான்றிதழ் படிவத்துடன் புதுவருட மற்றும் தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் வருடத்துக்கான ஓய்வூதிய தினங்கள் பற்றிய விவரங்களையும் ஓய்வூதியர்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர். படிவங்களைப் பூர்த்தி செய்த ஓய்வூதியர்கள் படிவத்தை பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து விட்டுச் செல்கின்றனர். ஓய்வூதியரின் வாழ்நிலை பற்றிய சான்றிதழை அந்தந்தப் பிரிவு கிராம அலுவலரிடம் ஒப்படைத்து பதிவு செய்த பின்னர் படிவத்தடன் இணைக்கப்பட்டுள்ள அடிக்கட்டையில் கிராம அலுவலர் படிவம் பெற்றதை உறுதிப்படுத்தும் படிவமும் இணைக்கப்பட்டுள்ளதால் ஓய்வூதியர்கள் படிவத்தினை கிராம அலுவலரிடம் கையளித்து பற்றுச்சீட்டினைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளனர்.

ஓய்வூதியர்களின் வாழ்நிலை சான்றிதழில் ஓய்வூதியர் தமது தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் அலைபேசி இலக்கம் ஆகியவற்றை அவசியம் பதிவு செய்யுமாறும் வருங்காலத்தில் ஓய்வூதியம் தொடர்பான விவரங்கள் அலைபேசி மூலம் அறிவிக்கவுள்ளனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையினரால் ஓய்வூதியர்களின் முகவரிக்கு வாழ்நிலைச் சான்றிதழ் படிவம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும் ஓய்வூதியர்கள் படிவத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தப் பகுதி கிராம அலுவலரிடம் கையளிக்குமாறும் குறித்த தினத்துக்குள் சான்றிதழைச் சமர்ப்பிக்கத் தவறுவோருக்கு ஏப்ரல் மாதம் தொடக்கம் ஓய்வூதியம் வழங்கப்படமாட்டாது எனவும் அறிவித்துள்ளனர். (எ-9)

*யாழ்ப்பாணத்திலிருந்து*

# சிதம்பரத்துக்கு செல்ல 140பேர் நேற்றுப் பதிவு

யாழ்ப்பாணம்.ஜன.10

இந்தியாவின் சிதம்பர ஆலயத்துக்கு செல்வதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இதுவரைக்கும் 140 பேர் பதிவு செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிதம்பர ஆலயத்துக்குச் கப்பல் மூலம் செல்ல விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று நேற்றுமுன்தினம் தெரிவிக்கப்பட்டது. வடக்கு மாகாண ஆளுநர் அலுவலத்தின் இந்து கலாசார திணைக்கள அதிகாரிகளிடம் பதிவுகளை மேற்கொள்ள முடியும். யாழ்ப்பாணத்தில் இருந்து செல்வோர் காங்கேசன் துறைமுகத்தில் இருந்து சென்னைக்குச் சென்று பின்னர் சென்னையில் இருந்து பேருந்தின் மூலம் சிதம்பரம் அழைத்துச் செல்லப்படுவர். பதிவு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சிதம்பரம் செல்வதற்கான காலம், பயணத்துக்கான தொகை என்பன தீர்மானிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

### போதனாசிரியர்களுக்கு விண்ணப்பம் கோரல்

வடக்கு மாகாண கல்வித் திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினர் பாடசாலைக் கல்வியை முழுமை செய்தவர்களுக்கு வருடாந்தம் நடத்தும் முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளில் இம்முறை வருமானம் தரும் கற்கை நெறிகளை வலய ரீதியில் பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கவுள்ளனர்.

இதற்காக பன்னாட்டுத் தரம் வாய்ந்த கற்கை நெறிகளைக் கற்பிக்கக் கூடிய போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அந்தவகையில் தென்மராட்சிக் கல்வி வலய முறைசாராப் பிரிவினால் ஆரம்பிக்கப்படவுள்ள ஆயுள்வேத மூலிகை உற்பத்திப் பொருள்கள், மட்பாண்டக் கைத்தொழில், தென்னந்தும்பு கைத்தொழில், தோற்பொருள்கள் உற்பத்தி, கடற்சிப்பிகள், கடதாசி, இரத்தினக்கல் கழிவுத்துகள்களிலிருந்து புத்தாக்கப் பொருள்கள் உற்பத்தி போன்ற பயிற்சி நெறிகளுக்கு தகைமை வாய்ந்த போதனாசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங் களை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன்னர் வலய முகாமைத்துவப் பிரிவில் ஒப்படைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (எ-9)

# வன்புணர உதவியவருக்கு 5 வருட கடுழியச் சிறை

## 4 வருடங்களின் பின் மாட்டினார்

யாழ்ப்பாணம், ஜன. 10

பதின்ம வயதுப் பெண்ணைக் கடத்திச் சென்று வன்புணர உடந்தையாக இருந்தவர் தப்பியோடிய நிலையில், மன்னாரில் கைது செய்யப்பட்டார். அவருக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்று 5 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்தது. நேற்று சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 2007ஆம் ஆண்டு சிறுமி வீட்டுக்குள் நுழைந்து சிறுமி கடத்திச் செல்லப்பட்டு வன்புணரப்பட்டார். இந்தக் குற்றச்சாட்டில் அதே பிரிவைச் சேர்ந்த 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் விளக்கமறியலில் இருந்தபோது சுகவீனம் காரணமாக இரண்டாவது சந்தேகநபர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது தப்பியோடியிருந்தார். அவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது. அந்தச் சந்தேகநபர் கைது செய்யப்படவில்லை.

வன்புணர்வு வழக்கு விசாரணைக்காக யாழ்ப்பாண மேல்நீதிமன்றுக்குச் சட்டமா அதிபர் திணைக்களத்தால் தொடுக்கப்பட்டிருந்தது. அந்த வழக்கு விசாரணை இரண்டாவது சந்தேகநபர் இல்லாமலேயே இடம்பெற்றது. தப்பித்துச் சென்ற நபர் வன்புணர்வுக்கு உடந்தையாக இருந்தார் என்றும் முதலாவது சந்தேகநபர் வன்புணர்ந்தார் என்றும் குற்றம் நிரூபிக்கப்பட்டது.

வன்புணர்ந்தவருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறை விதிக்கப்பட்டது. உடந்தையாக இருந்தவருக்கு 5 வருடங்கள் கடூழியச் சிறை விதிக்கப்பட்டது. ஆனால் அவர் தீர்ப்பளிக்கப்படும்போதும் தலைமறைவான நிலையிலேயே காணப்பட்டார். இந்த நிலையில் கோப்பாய் பொலிஸார் குறித்த சந்தேகநபரை மன்னாரில் வைத்துக் கடந்த 4 ஆம் திகதி கைது செய்திருந்தனர். அவர் மேல்நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவர் மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் சார்பில் முற்பட்ட சட்டத்தரணி குறித்த எதிரிக்கு எதிரான வழக்கு விசாரணையை மீள நடத்த வேண்டும் என்று கோரினார். தப்பியோடியமை மற்றும் சரணடையாமை என்பன அவரது நல்லெண்ணத்தை ஏற்படுத்தவில்லை என்றுகூறி, மீள் விசாரணைக்கு அரச சட்டத்தரணி நிசாந் நாகரட்ணம் ஆட்சேபனை தெரிவித்தார்.

அதனையடுத்து அவருக்கு எதிராக முன்னர் விதிக்கப்பட்ட 5 வருட கடூழியச்சிறைத் தண்டனையை நடைமுறைப்படுத்துவதாகக்கூறி நீதிபதி தீர்ப்பளித்தார். (4)



நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரிக்கு பிரான்ஸ் நாட்டில் வாழும் பழைய மாணவியொருவர் இளந்தளிர் உதவும் கரங்கள் அமைப்பின் நீர்வேலி இணைப்பாளர் இ.குணநாதன் ஊடாக கணினித் தொகுதியொன்றை நிகழ்வில் அதிபர் கு.இரவிச்சந்திரனிடம் வழங்கி வைத்தார். அதன்போது எடுக்கப்பட்ட படம்.

# யாழில் செய்திப் பணிப்பாளரை தாக்கியவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.10

யாழ்ப்பாணத்தில் தொலைக்காட்சி ஒளிபரப்பு கலையகத்துக்குள் கத்தி, பொல்லுடன் அத்துமீறி நுழைந்து அந்த நிறுவனத்தின் செய்திப் பணிப்பாளரைத் தாக்கியவயோதிபரை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தொலைக்காட்சி ஒளிபரப்புக் கலையகத்துக்கு நேற்று மாலை வயோதிபர் ஒருவர் அத்துமீறி நுழைந்தார். அவரது கைகளில் வெட்டுக்கத்தி மற்றும் பொல்லு என்பன இருந்தன. கலையகத்தின் வரவேற்பு அறைக்குள் நுழைந்த அவர் அங்கு பணியிலிருந்த செய்திப் பணிப்பாளர் தயா மாஸ்டர் என அழைக்கப்படும் வே.தயாநிதியை தாக்கினார். பின்னர் அவர் அங்கிருந்து தப்பித்துச் சென்றார். அவரைப் பொலிஸார் கைது செய்தனர். சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றன.

"முதியவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் போன்றே வாக்குமூலம் வழங்கினார். தனது மூளைக்குள் இரும்புத் தகட்டைச் சொருகி டான் நிறுவனத்தினர் தன்னிடமுள்ளவற்றை பெறுகின்றனர். என்னிடம் கைபேசியில்லை, எனது மூளைக்குள் மெமரிக்காட் உள்ளது. அது தேவையான போது கைபேசியாகப்பயன்படுத்துவேன்" என்று மனநிலை பாதிக்கப்பட்டவராக அவர் விசாரணையின்போது நடந்துகொண்டார். 20 வருடங்களுக்கு மேலாக அவர் ஐரோப்பிய நாடுகளில் பணியாற்றிவிட்டு நாடு திரும்பியுள்ளார். தற்போது யாழ்ப்பாணம் முதன்மை வீதியுள்ள அந்தியகாலச் சேவை நிறுவனத்தில் பணியாற்றுகிறார்" என்று பொலிஸார் கூறினர்.

முதியவரை யாழ்ப்பாணம் நீதிவான் முன்னிலையில் நேற்று முன்னிரவு பொலிஸார் முற்படுத்தினர். அவர் மனநிலை பாதிக்கப்பட்டவர் போன்று நடந்துகொள்கிறார் என நீதிவானிடம் பொலிஸார் விண்ணப்பம் செய்தனர்.

"முதியவரின் செயற்பாடுகள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். வழக்கு விசாரணை எதிர்வரும் 16ஆம் திகதி செவ்வாய்கிழமை நீதிமன்றில் இடம்பெறும். அன்றைய தினம்வரை சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்படுகிறார்" என்று யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (21,37,26)

## யாழில் கடந்த ஆண்டு

# 5,906 வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு மருந்து ஏற்றப்பட்டது

யாழ்ப்பாணம் ஜன 10

யாழ்.மாநகர பிரதேசத்தில் கடந்த ஆண்டில் 5ஆயிரத்து 906 வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய் தடுப்பான ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது.

அதனை விட 270 வரையான கட்டாக்காலி பெண் நாய்கள் பிடிக்கப்பட்டு அவற்றுக்கு கருத்தடைக்கான சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என மாநகர மருத்துவ அதிகாரிப் பணிமனை தெரிவித்தது. (எ-17)

## ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில்

# விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.10

836 மில்லிக் கிராம் ஹெரோயினை விற்பனை செய்யும் நோக்கில் உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுமார் 15 மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபரை யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் நேற்று பிணையில் விடுவித்தது.


மல்லாகம் நீதிவான் மன்ற எல்லைக்குட்பட்ட சுன்னாகத்தில் போதைப் பொருளான ஹெரோயினை விற்பனை செய்த குற்றச்சாட்டில் குடும்பத்தலைவரான செல்வநாயகம் சத்தியசாயிபாபா கைது செய்யப்பட்டார். அவர் கடந்த ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி தொடக்கம் மல்லாகம் நீதிவான் மன்றால் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சந்தேகநபர் சார்பில் அவரது மனைவி யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்தார். அதன் மீதான விசாரணைகள் இடம்பெற்று வந்தன. பிணை விண்ணப்பம் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அரச சட்டவாதி நாகரட்ணம் நிசாந்த, சந்தேகநபரை பிணையில் விடுவிக்க ஆட்சேபனை இல்லை என மன்றிடம் விண்ணப்பம் செய்தார்.

'சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா பணத்தை மல்லாகம் நீதிவான் மன்றில் வைப்பிலிடவேண்டும். 2 இலட்சம் ரூபா பெறுமதியை உறுதிப்படுத்தக்கூடிய இருவர் பிணை முறியில் கையொப்பமிடவேண்டும். சந்தேகநபரின் கடவுச் சீட்டு மல்லாகம் நீதிமன்றப் பதிவாளரிடம் கையளிக்கப்படவேண்டும். மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர் கையொப்பமிடவேண்டும் ஆகிய நிபந்தனைகள் மன்றால் விதிக்கப்படுகிறது' என்று யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் பிணை விண்ணப்பம் மீதான கட்டளையை வழங்கினார். (எ-37)

# கரணவாயில் நேற்றுப் பற்றி எரிந்தது வீடு



யாழ்ப்பாணம், ஜன. 10

வடமராட்சி கரணவாய் கலட்டிப் பகுதியில் ஆள்கள் வசிக்காத வீடொன்று திடீரெனத் தீ பற்றி எரிந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் 6 மணியளவில் நடைபெற்றது.

நேற்று மின்சாரம் வடமராட்சி பகுதியில் சீரற்றுக் காணப்பட்டது. இதனால் பல இடங்களிலும் மின் விளக்குகள் செயலிழந்தன. மின் ஒழுக்குக் காரணமாக வீடு எரிந்திருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேசமயம் ஆள்கள் வசிக்காத வீட்டில் சில துஷ்பிரயோகங்கள் இடம் பெறுவதாகவும் சிலர் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் அதன் பின்னரே மேலதிக தகவல்கள் தெரியவரும் என்றும் நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (4,422)

## ஆளணிப்...

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் இருக்கின்றனர். அமைச்சர் ஒருவரும் வன்னியில் இருக்கின்றார். ஏன் அவர்களால் எமது மாகாணத்தின் மருத்துவ ஆளணிப் பிரச்சனையைத் தீர்க்க முடியவில்லை?. மாகாண சுகாதார அமைச்சர் குணசீலனுக்காக அதைச் செய்யமாட்டோம் என்று அவர்கள் கருதினால் நான் பதவியிலிருந்து விலகிக் கொள்கிறேன். எனது இடத்துக்கு வேறு ஒருவர் வருவார். அவருக்கு ஒத்துழைப்பை வழங்கி ஆளணிப் பிரச்சினையைத் தீர்க்க முயலுங்கள்.

இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ஜீ.குணசீலன்.

வடக்கு மாகாண சபையின் 115 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத் தலைவர் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் மருத்துவர்களது ஆளணி தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

வடக்கு மாகாணத்தில் மருத்துவ ஆளணிப் பற்றாக்குறை இருக்கின்றது. அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். அதற்கு இரு முக்கிய காரணங்கள் உள்ளன. மருத்துவ சங்கங்களின் தலையீடு, கொழும்பு சுகாதார அமைச்சின் கொள்கைகள் என்பனவே பிரச்சினையாகவுள்ளன.

பொதுவாக ஒரு சிகிச்சைப் பிரிவில் இரண்டு மருத்துவ நிபுணர்கள் இருக்க வேண்டும். அவ்வாறான நிலை இங்கு இல்லை. வேறு மாகாணங்களில் அறுவைச் சிகிச்சைப் பிரிவுகளே இல்லாத இடங்களில் அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அண்மையில் கூட வடக்கு மாகாண மருத்துவர்களின் ஆளணி தொடர்பாக முதல்வருடன் கதைத்துள்ளேன். அவரும் அரச தலைவருடன் கதைக்க முடிவு செய்துள்ளார். அதற்கான திகதி கிடைக்கும் வரை காத்திருக்கின்றார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் கூட ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில்கூட அவரிடமும் வலியுறுத்தியுள்ளோம்.

எமது மாகாணத்தில் எத்தனையோ நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். வன்னியில் அமைச்சர் ஒருவரும் இருக்கின்றார். ஏன் அவர்கள் எமக்குப் பக்கபலமாக இருந்து இந்தப் பிரச்சினையைத் தீர்க்க முனைகின்றார்கள் இல்லை?.

சுகாதார அமைச்சர் குணசீலனுக்கு நாம் உதவி செய்ய மாட்டோம் என்று கருதினால் கூறுங்கள் நான் பதவியைத் துறக்கிறேன். எனது இடத்துக்கு வருபவருக்குப் பக்க பலமாக இருந்து எமது பிரதேசங்களின் மருத்துவ ஆளணிப் பிரச்சினையைத் தீர்த்து வையுங்கள். எமது மாகாண சபைக்குப் பக்கபலமாக இருங்கள் என்று கோருகின்றேன்.

வடக்கு மாகாணத்தில் மருத்துவர்களுக்குப் பற்றாக்குறை உள்ளது. ஆளணியைப் பெற்றுத்தாருங்கள் என்று ஆளுநரிடம் கேட்டேன். உங்களுடைய தமிழ் மருத்துவர்கள் எல்லாம் கொழும்பில் விரும்பிப் பணியாற்றுகின்றார்கள். இந்த நிலையில் கொழும்பில் இருப்பவர்கள் மட்டும் எவ்வாறு இங்கு வந்து பணியாற்றுவார்கள்? என்று ஆளுநர் பதில் கேள்வி எழுப்புகிறார். அதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை -என்றார். (ற-4,8)

## நிதியை...

யாழ்ப்பாணம், ஜன.10

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மலசலகூட வசதி ஏற்படுத்தித் தருகின்றோம் என்று கூறி மக்கள் நிதியில் அவற்றைக் கட்டுவித்த மாகாண சமூக சேவைகள் அமைச்சு, அந்த நிதியை மக்களுக்கு வழங்காது இழுத்தடிக்கின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் தியாகராஜா குற்றஞ்சாட்டினார்.

வடக்கு மாகாண சபையில் "5ஆவது அமர்வு நேற்றுக் கைதடியிலுள்ள மாகாண சபைச் செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"வடக்கு மாகாணத்தில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், அங்கவீனமடைந்தவர்களுக்கும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான திட்டம் சமூக சேவைகள் அமைச்சால் நடைமுறைப்படுத்தப்பட்டது. பயனாளிகள் அவர்களது நிதியில் மலசலகூடங்களைக் கட்டினர். அந்தக் கொடுப்பனவு அவர்களுக்கு வழங்கி முடிக்கப்படவில்லை. இதனால் பலர் கடனாளியாகியுள்ளனர். நீண்டகாலம் இது தொடர்வதால் அவர்கள் தவறான முடிவெடுக்கும் நிலைக்கும் கூடத் தள்ளப்பட்டுள்ளனர்." என்று தியாகராஜா குறிப்பிட்டார்.

"இந்தக் கொடுப்பனவை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதை வழங்கும் பொறுப்பு எமக்கு அப்பாற்பட்டுக் காணப்படுகின்றது. கட்டுநிதிகள் அரசால் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. கொடுப்பனவு வழங்குவதற்கான வவுச்சர்கள் உள்ளபோதும் நிதி இல்லாததால் அவற்றை வழங்க முடியவில்லை. எமக்கு 10 மில்லியன் ரூபா தேவையாகவுள்ளது." என்று பதிலளித்தார் மாகாண சமூக சேவைகள் அமைச்சர் அனந்தி சசிதரன். (ற-4,8)

## சர்வேஸ்வரனை...

யாழ்ப்பாணம், ஜன. 10

தேர்தலில் வாக்களிக்கும்போது கட்சிகளைப் பார்க்காதீர்கள் ஆள்களைப் பார்த்து வாக்களியுங்கள் என்று கூறிவரும் முதலமைச்சர் மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரனைத் தெரிவு செய்த விடயத்தில் மிகப் பெரிய தவறிழைத்துவிட்டார்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் உறுப்பினர் தியாகராசா.

வடக்கு மாகாண சபையின் 115 ஆவது அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. அதிலேயே தியாகராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது:

கடந்த வருடத்தில் எனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து கல்வி அமைச்சுக்கு ஊடாக ஒரு வேலைத்திட்டம் ஒன்றை முன்மொழிந்து அதை உரிய காலத்திலேயே கொடுத்திருந்தேன். ஆனால் கல்வி அமைச்சர் என்னுடைய திட்டத்தை வேண்டுமென்றே நிறுத்தி வைத்துள்ளார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எனக்குப் பல முறை கடிதங்களை அனுப்பியுள்ளார். எனது வேலைத்திட்டத்தை உடனடியாக முடிவுறுத்துமாறு செயலாளர் அறிவுறுத்தியும் எதுவும் இடம்பெறவில்லை. 9 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பணம் இடைவழியில் நிற்கின்றது. வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் இந்த செயற்பாட்டால் வவுனியா மாவட்டத்தில் எனது மானமே போகின்றது. இதை முதலமைச்சர் கவனத்தில் எடுக்க வேண்டும்.

வடக்கு மாகாண முதலமைச்சர் தேர்தலில் வாக்களிக்கும்போது கட்சிகளை பார்க்காதீர்கள், ஆள்களைப் பார்த்து வாக்களியுங்கள் என்று கூறி வருகின்றார். ஆனால் மாகாணக் கல்வி அமைச்சரை நியமிக்கும் விடயத்தில் தலைமைச்சர் மிகப் பெரிய தவறை இழைத்து விட்டார். என்றார்.

எனது அமைச்சின் ஊடான அனைத்து வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் வருட இறுதிக்கு முன்னர் சில கூட்டங்களை நடத்தி, முடிவுறாத வேலைகளைத் துரித கதியில் முடிக்குமாறு அறிவுறுத்தியிருந்தேன். அதனாலேயே எனது செயலரும் கடிதம் எழுதினார். திட்டமிட்டு நான் எந்த திட்டங்களையும் நிறுத்தவில்லை" என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் பதிலளித்தார்.

அதேவேளை, "இந்த நிதி செலவழிக்கப்படாது இருந்தமையால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்குக் கற்றல் உபகரணங்களை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது" என்று அவைத் தலைவர் தெரிவித்தார். (ற-4,8)

## அட்டமி...

பாண்டுக்கான முதலாம் அமர்வு கைதடியிலுள்ள பேரவைச் செயலகத்தில் அவைத்தலைவர் தலைமையில் நேற்று நடைபெற்றது. அமர்வு ஆரம்பிக்கும்போது முதலமைச்சர், அமைச்சர்கள் உட்படச் சில உறுப்பினர்களே அவையில் இருந்தனர். அவை ஆரம்பமாகியதும் அவைத்தலைவர் அனைத்து உறுப்பினர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்தார். அதன் பின்னர் அவைத்தலைவர் அறிவித்தல் அறிவிக்கப்பட்டது. பின்னர் ஒரு சில உறுப்பினர்கள் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் என்றுகூறிச் சில விடயங்களைக் கூறினார்கள். வடக்கு மாகாண சபை உறுப்பினர் தவநாதன் மாகாண சபையின் நிதி திரும்பி செல்வது தொடர்பான கருத்துக்களைக் கூறிக்கொண்டு, "அட்டமி நவமியில் அமர்வைத் தொடங்கியுள்ளீர்கள், என்ன நடக்கப்போகுதோ!" என்று கூறி அமர்ந்தார்.

பலரும் அது தொடர்பில் முணுமுணுத்தனர். அப்போது அவைத்தலைவர் "அட்டமி நவமி போன்றவற்றை சகோதர மதத்தவர்கள் பார்ப்பதில்லை. சிலர் அட்டமி நவமிகளில் நல்ல விடயங்களையும் செய்கின்றனர். நாடாளுமன்றமும் அட்டமி நவமியில் கூட்டப்படுவது வழமைதான். அதனைப் பற்றி அலட்டிக் கொள்ளத் தேவையில்லை. உங்களுடைய பிரச்சினைகளை விட்டுவிட்டு பொதுப் பிரச்சினைக்குள் வாருங்கள்".என்றார்.

பின்னர் சபையில் சில விடயங்கள் ஆரய்யப்பட்டன. எனினும் அட்டமி நவமி முணுமுணுப்புகள் ஓயவில்லை. இவ்வாறாக வழமையாக ஆராயப்படும் விடயங்களைப் போல அல்லாது ஒரு சில விடயங்கள் மட்டும் ஆராயப்பட்டு மாகாண சபை அமர்வு முற்பகலுடன் ஒத்தி வைக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையின் ஒரு அமர்வுக்கு 5 இலட்சம் ரூபா வரையில் செலவிடப்படுகின்றது. (ற-4,8)

## சிறுமியின்...

ஒருவர் உயிரிழந்தார்.

முச்சக்கர வண்டியும் ஹைஏஸ் வானும் நேருக்குநேர்மோதிவிபத்துக்குள்ளாகியிருந்தன. அதில் 6 வயதுச் சிறுமி உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

படுகாயமடைந்த சிறுமியின் பேரன் முறையான ஜெயபாலன் அக்குனஸ் துரைசிங்கம் (வயது65) என்பவர் நேற்றுக் காலை உயிரிழந்தார். (ற-67)

## கொக்காவிலில்...

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம், நெல்லியடி நோக்கிப் பயணித்த ஹையேஸ் வாகனமே விபத்துக்குள்ளாகியது. பழுதடைந்து வீதியோரம் நிறுத்தப்பட்டிருந்த பாரவூர்தியில் ஹையேஸ் வாகனம் மோதியுள்ளது. ஹையேஸ் வாகனம் முற்றாகச் சிதைந்தது. படுகாயமடைந்தவர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். காயமடைந்தவர் துவாரகன் (வயது18) என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

விபத்துத் தொடர்பில் கிளிநொச்சி மற்றும் மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டன. அவர்கள் சம்பவ இடத்துக்குச் சென்று உடல்களை மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பினர். விசாரணைகளையும் மேற்கொண்டனர். (ற-21,6,103,72,74,35)

## பசுவை...

டுச் சென்றனர். அந்தக் கன்றுக் குட்டியும் உயிரிழந்தது. இந்தச் சம்பவத்தால் நாவாந்துறை மக்கள் கொதிப்படைந்தனர். அந்தப் பகுதியில் சற்றுக் குழப்பமும் ஏற்பட்டது.

யாழ்ப்பாணம் நாவாந்துறைச் சந்தையை அண்மித்து நேற்று மாலை கன்றுக்குட்டி உயிரற்ற நிலையில் வீசப்பட்டிருந்தது. கடத்தப்பட்ட பசு கொல்லப்பட்டு இறைச்சியாக்கப்பட்டு அதன் வயிற்றிலிருந்த வளர்ச்சியடைந்திருந்த கன்று வீசப்பட்டிருக்கலாம் என்று மக்கள் தெரிவித்தனர்.

சந்தைக்கு அருகிலுள்ள குப்பைகள் போடுமிடத்தில் எண்ணைபரல் ஒன்றுக்குள் பசுவின் தோல், எலும்பு உள்ளிட்ட கழிவுகளையும் அதனுடன் விட்டுச் சென்றனர். பசுவின் காதில் அடையாளமாக இடப்படும் இலக்கத் தகடு என்பன போடப்பட்டிருந்தன. கழிவுகளை உரைப்பையில் மூட்டையாகக் கட்டிப்போட்டு விட்டுச் சென்றுள்ளனர். தெருநாய்கள் அவற்றை உரைப்பையில் இருந்து வெளியே இழுத்தெடுத்துள்ளன.

மக்கள் உரைப்பை மூட்டையை திறந்து பார்த்துள்ளனர். அப்போது கன்றுக்குட்டியுடன் சேர்த்து வெட்டப்பட்ட மாட்டின் இறைச்சிக் கழிவுகள் இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

"நாவாந்துறை பகுதியில் மாட்டு இறைச்சிக் கடைகளை நடத்துபவர்களில் யாராவது இந்தச் செயலைச் செய்திருக்கலாம் என்று நாங்கள் சந்தேகிக்கிறோம்" என்று அங்கு நின்றிருந்தவர்கள் குற்றஞ்சாட்டினர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மற்றும் சுகாதார பரிசோதகர்கள் விசாரணை மேற்கொண்டனர்.

குறித்த பசு கால்நடைத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளமை அதன் காதில் இணைக்கப்பட்டிருந்த இலக்கத்தின் மூலமாக உறுதிப்படுத்த முடிந்தது. (ற-4,8)

## விசாரணை...

வாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

கூட்டரசின் அமைச்சரவைக் கூட்டம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முற்பகல் நடைபெற்றது. அமைச்சரவைப் பத்திரங்கள் முன்வைக்கப்பட்டு, அவை தொடர்பில் கருத்துகள் பெறப்பட்ட பின்னர் இறுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதன்பின்னர் பிணைமுறி மோசடி விசாரணை அறிக்கை குறித்து பேசப்பட்டுள்ளது.

'பிணைமுறி மோசடி விசாரணை அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் கோரப்பட்டுள்ளது. அதற்கான திகதியும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், விசாரணை அறிக்கை இன்னும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. ஆராயாமல் எப்படி விவாதம் நடத்தமுடியும்?' என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் இதன் போது கேள்வி எழுப்பியுள்ளனர்.

அதற்குப் பதிலளித்துள்ள சபை முதல்வரும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, மக்கள் விடுதலை முன்னணியும், சுதந்திரக் கட்சியும் விடுத்த கோரிக்கையின் பிரகாரமே நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது. விவாதம் கோருவதற்கு முன்னர் இதைப் பற்றி அறிந்திருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். இந்த விவகாரம் தொடர்பில் இரு கட்சி அமைச்சர்களுக்கும் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன. (ற-5)

## பதவி...

ரும் 14ஆம் திகதிக்குள் தனக்கு அறிவிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றத்திடம் கோரியுள்ளார். அரசமைப்பின் 19ஆம் திருத்தத்துக்கமைய 2020ஆம் ஆண்டு பதவிக்காலம் நிறைவடையவுள்ள நிலையிலேயே அரச தலைவர் மைத்திரி வியாக்கியானத்தைக் கோரியுள்ளார்.

2015ஆம் ஆண்டு ஜனவரி 9ஆம் திகதியன்று அரசமைப்பின் 32(1) உறுப்புரைக்கமைய பதவியேற்றுக்கொண்ட நான், ஆறு ஆண்டுகளுக்கு அரச தலைவராகப் பதவிவகிக்கத் தடையேதும் காணப்படுகிறதா என்பது தொடர்பான வியாக்கியானத்தையே அரச தலைவர் கோரியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் நாளை வியாழக்கிழமை உயர்நீதிமன்றத்தில் ஆராயப்படவுள்ளது என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் மற்றும் செயலருக்கு உயர்நீதிமன்றப் பதிவாளர் எம்.எம்.ஜயசேகர அறிவித்துள்ளார். தலைமை நீதியரசர் பிரியசாத் டெப், நீதியரசர்களான ஈவா வனசுந்தர, புவனேஹ அலுவிஹார, சிசிர டி அப், கே.ரி.சித்திரசிறி ஆகிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விடயம் நாளை வியாழக்கிழமை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

2015ஆம் ஆண்டு மே மாதம் 15ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கமைய அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் ஐந்து ஆண்டுகளே பணியாற்றமுடியும். (ற-5)

## 10,000...

குறிப்பிட்டார்.

கச்சதீவு திருவிழாவுக்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கச்சதீவில் இந்த முறை இரு நாட்டில் இருந்தும் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் இருந்து 10 ஆயிரம் பக்தர்கள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு ஏற்ற வகையில் விசேட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவிழா ஒழுங்குகளுக்குரிய பிரதான பொறுப்பை கடற்படையினர் ஏற்றுள்ளனர். ஏனைய துறையினர் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதன்படி தத்தமது சேவைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பக்தர்களின் நலன் கருதி நிரந்தர மலசல கூட வசதிகள் மற்றும் மேலதிகமாக தற்காலிக மலசல கூட வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து குறிகட்டுவான் வரையான பேருந்து சேவை அதிகாலை 4 மணியில் இருந்து நண்பகல் 1 மணிவரை நடைபெறும். குறிகட்டுவானில் இருந்து கச்சதீவு வரை காலை 5 மணிக்கு ஆரம்பித்து 2 மணி வரை நடைபெறும். படகுச் சேவைக்கான ஒருவழி கட்டணமாக 300 ரூபா அறவிடப்படவுள்ளது. நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கு ஒரு வழி கட்டணமாக 225 ரூபா அறவிடப்படவுள்ளது.

சேவையில் ஈடுபடும் படகுகள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின்னரே சேவைக்கு அனுமதிக்கப்படவுள்ளன. பயணிகள்பாதுகாப்பு அங்கி அணியவேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு வசதிகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. 200 பொலிஸார் சேவையில் ஈடுபடவுள்ளனர். பயணிகள் படகு சேவை இடம்பெறும் போது கடற்படை ரோந்து நடவடிக்கைகள் நடைபெறும்-என்றார்.

ற-8)

# பிணைமுறி பாணியில் மகிந்தவின் ஊழல்களையும் அம்பலப்படுத்துக!

## அரச தலைவரிடம் ஐ.தே.க. எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஜன. 10
முன்னாள் அரசின் காலத்தில் இடம்பெற்ற பெரிய ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணை செய்திருந்த அரச தலைவர் ஆணைக்குழு, தனது 34 விசாரணை அறிக்கைகளை அரச தலைவரிடம் கையளித்துள்ளது. பிணைமுறி விவகாரம்போன்று இந்த மோசடிகளால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடுகளும் அம்பலப்படுத்தப்படுவதுடன், 34 அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் வலியுறுத்தத் தீர்மானித்துள்ளனர்.

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி அறிக்கை கடந்த 30ஆம் திகதி அரசதலைவரிடம் கையளிக்கப்பட்டிருந்தது. அதேபோல், கடந்த அரசின் காலத்தில் இடம்பெற்ற பெரிய ஊழல், மோசடிகள் தொடர்பிலான 17 அறிக்கைகளையும் அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்திருந்த ஆணைக்குழு அரசதலைவரிடம் கையளித்திருந்தது. ஏற்கனவே, கடந்த ஆண்டு 17 விசாரணை அறிக்கைகளை ஆணைக்குழு அரச தலைவரிடம் கையளித்திருந்தது. பிணைமுறி விவகாரம் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளதால் இது தேர்தல் ஆயுதமாகும் சூழலும் எழுந்துள்ளது. இன்று இது தொடர்பில் விவாதிக்க சிறப்பு நாடாளுமன்ற அமர்வு கூட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில், அரச தலைவரிடம் கையளிக்கப்பட்டுள்ள கடந்த அரசின் 34 ஊழல், மோசடி அறிக்கைகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் என்பதுடன், குறித்த மோசடிகளால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள இழப்பீடுகள் தொடர்பில் அரச தலைவர் நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்று அரச தலைவருக்கு வலியுறுத்த ஐக்கிய தேசியக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர் என்று அந்தக் கட்சியின் தகவலறியும் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (5)



# யாழ்ப்பாணத்தை மீட்டது நான் தான்!

## உரிமை கோருகிறார் சந்திரிகா

கொழும்பு, ஜன. 10
கிளிநொச்சியையும், முல்லைத்தீவையுமே மகிந்த ராஜபக்ச அரசு விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்டது. யாழ்ப்பாணத்தை மீட்டது நான்தான். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.
ஈவெயாங்கொட பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்ற மக்கள் சந்திப்பில் இதனைக் கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போரை வென்றதாகக் கூறுகின்றார்கள். போரின் மூன்றில் இரண்டு பங்கை யார் முடித்தது. யார் யாழ்ப்பாணத்தை புலிகளிடமிருந்து கைப்பற்றியது?
எனது அரசு ஆட்சியை பொறுப்பேற்ற ஓராண்டு காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகள் விரட்டியடிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தை மீட்டோம். வடக்கில் புலிகள் வசமிருந்த மூன்றில் இரண்டு பகுதியை நாம் கைப்பற்றிக்கொண்டோம். கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மட்டுமே எஞ்சியிருந்தது. அவை இரண்டையுமே ராஜபக்ச அரசு கைப்பற்றியது.
நான் செய்த பிழை என்னவென்றால் வானளவு உயரத்திற்கு பல கோடி ரூபா செலவிட்டு போர் வெற்றி தொடர்பில் கட்அவுட்களை அமைத்துக் கொண்டு பரப்புரை செய்யவில்லை. அதனையே சிங்கள பௌத்தர்களின் பண்பு என்று நான் கருதுகின்றேன் -என்றார். (5)

### அட! அப்படியே சங்கதி!!
### கடல்லயே இல்லையாம்!

பிணைமுறி ஆணைக்குழு அறிக்கை கிடைத்தால் அதனை வாசித்துவிட்டு உரிய பதில்களை வழங்கலாமெனக் கருதிய ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அறிக்கையொன்றின் பிரதியைத் தருமாறு கட்சித் தலைவரும் தலைமை அமைச்சருமான ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரினராம்.
அப்போது, எனக்கே அந்த அறிக்கை கிடைக்கவில்லை. நானும் பிரதியொன்றை எடுக்க முயற்சித்துப் பார்க்கிறேன். ஆனால், முடியவில்லை, என்றாராம் ரணில்.
தலைமை அமைச்சருக்கே அதன் பிரதிகளை எடுக்க முடியாவிட்டால் சாதாரண மக்களுக்கு அது எப்படிக் கிடைக்கும் எனக் கவலைப்பட்டனாராம் அந்த ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர்கள்.

### வேற்றுமையில் ஒற்றுமை

# நல்லிணக்க வாரத்தின் நோக்கம் என்கிறார் சிவஞானசோதி

கொழும்பு, ஜன. 10
நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு, மக்களிடையே சகிப்புத் தன்மை, சகோதரத்துவத்தை விருத்தி செய்து, வேற்றுமையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதே நல்லிணக்க வாரத்தின் நோக்கம். இவ்வாறு தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.
இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது,
ஜனவரி 8ஆம் திகதி தொடக்கம் 14 ஆம் திகதி வரையான காலப் பகுதி ஒவ்வொரு வருடமும் 'தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க வாரம்' ஆக பிரகடனப்படுத்தப் பட்டது.
இந்த வாரத்தினுள் நாடு முழுவதும் சில நிகழ்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
தேசிய ஒருமைப்பாட்டின் முக்கியத்துவத்தை பறைசாற்றுகின்ற இந்தத் தேசிய வாரத்தினுள் நாடு முழுவதுமுள்ள அனைத்துப் பாடசாலைகளின் காலைக் கூட்டங்களிலும், வகுப்பறைகளிலும் மாணவர்களால் தேசிய ஒருமைப்பாடு தொடர்பாக உரையாற்றல் மற்றும் தேசிய பிரகடனத்தை வாசித்தல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
அரச அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களால் நல்லிணக்க பிரகடனத்தை வாசித்தல் மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை மாற்றத்தை ஏற்படுத்தும் முகவர்களாக மாற்றுதல் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.
மாவட்ட நல்லிணக்க குழுக்கள் மாவட்ட மட்டங்களில் ஏற்படுகின்ற இன மத முரண்பாடுகளையும் பதற்றங்களையும் தணிப்பதற்காக அமைக்கப்பட்டது. இந்தக் குழுக்களின் அங்கத்தவர்கள் இந்தக் குழுக்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காக பண்டாரநாயக்க பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் கருத்தரங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்தலுடன் தொடர்பான ஆக்கங்களுக்கு விருது வழங்குதல். சமாதான ஊடகவியலை மேம்படுத்தலுடன் தொடர்பான ஆக்கங்களை இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.
தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், தனியார் துறை, சமயத்தலைவர்கள், அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றில் பிரகடனத்தை வாசிப்பதோடு சமாதானம், ஒற்றுமை மற்றும் நிலைபேறான சமாதானம் என்பவற்றை மேம்படுத்துவதற்கும் ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்றுள்ளது. (5)

# ரணில் தலைமை அமைச்சராகத் தெரியவில்லை

## உறவினராகவே தெரிந்தார் என்கிறார் ஐராங்கனி

கொழும்பு, ஜன. 10
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, திருமண நிகழ்வில் மூத்த நடிகை ஐராங்கனி சேரசிங்கவுடன் சேர்ந்து நடனமாடிய காணொலி சமூக ஊடகங்களில் வைரலாகப் பரவி வரும் நிலையில், ரணில் தலைமை அமைச்சராக எனக்குத் தெரியவில்லை. அவர் எனது உறவினராகவே தெரிந்தார் என்று ஐராங்கனி தெரிவித்துள்ளார்.
'சிரிக்கக்கூடிய மற்றும் அழக்கூடிய சாதாரண மனிதனாகவே தலைமை அமைச்சரை நான் காணுகின்றேன். இந்தக் காணொலி தலைமை அமைச்சர் மீது தவறான கருத்தை ஏற்படுத்த வேண்டுமென்று வெளியிடப்பட்டதாக சந்தேகம் ஏற்படுகின்றது.
யாரோ ஒருவர் வந்து நடனம் இடம்பெறுவதாக என்னை அழைத்தார். நான் அங்கு சென்றதும், தலைமை அமைச்சரைக் காட்டி நடனமாடுங்கள் என்று கோரிக்கை விடுத்தார்கள். தலைமை அமைச்சர் வாருங்கள் என்று அழைத்ததும், நான் நடனமாடினேன். சுற்றியுள்ளவர்கள் கேட்கும் போது எவ்வாறு மறுப்பது - என்றார். (5)

# ரவியைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது

## அமைச்சர் மனோ தெரிவிப்பு

எங்கள் கட்சியை கொழும்பிலிருந்து துடைத்து எறியப்போவதாக கூறியுள்ள ரவி கருணாநாயக்கவைப் பார்த்து எனக்கு சிரிப்பு வருகிறது. ரவி கருணாநாயக்க இன்று அமைச்சரவையில் இருந்து துடைத்து எறியப்பட்டு விட்டார். இப்போது இவரது சொந்தக் கட்சியில் இருந்தே படிப்படியாக துடைத்து எறியப்பட்டுக் கொண்டிருக்கிறார். அரசிலிருந்து முழுமையாக தூக்கி எறியப்படும் சூழலையும் எதிர்நோக்குகிறார். இவை அனைத்தும் இவரே தேடிக் கொண்ட வினைகள் என்பது முழுநாடும் அறியும். உப்பை அள்ளி சாப்பிட்ட அவர் இன்று தண்ணீர் குடித்துக்கொண்டு இருக்கிறார். இவற்றுக்கு நான் காரணம் இல்லை. இவ்வாறு அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும்கூறப்பட்டுள்ளதாவது,
என்னையும், என் கட்சியையும் துடைத்து எறியப்போவதாக சொல்லும் ரவியின் கருத்து, இந்த புதிய ஆண்டின் முதல் மகா நகைச் சுவையாக இருக்கிறது. இவரைவிட மிகப் பெரிய கொம்பர்களையெல்லாம் எதிர்கொண்ட எனது வரலாற்றை மறந்துவிட்டு, யாருடன் மோதுகிறோம் என்ற தெளிவில்லாமல் எனக்கு இவர் சவால் விடுகிறார். இவரைப் போன்ற அரசியல் கோமாளிகளின் வெற்று கூச்சல்களையும், கட்டளைகளையும் கேட்டு, பயந்து, வீட்டுக்கு உள்ளேயே முடங்கிவிடும் பழைய தலை முறையை சார்ந்தவன் நானல்ல. நான் தன்மானமுள்ள ஒரு புதிய தலைமுறை தமிழ் இலங்கையன் என்பதையும், இவர் நினைவில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அரசியலில் என்னுடன் விளையாட வேண்டாம் என்று நண்பர் ரவி கருணாநாயக்கவுக்கு கூறுகிறேன் - என்றார். (5)

# களேபரமாகும் கன்னியமர்வு

கொழும்பு, ஜன. 10
2018ஆம் ஆண்டுக்கான கன்னி நாடாளுமன்ற அமர்வு இன்று நடைபெறவுள்ளது. வரவு - செலவுத் திட்ட கூட்டத் தொடருக்குப் பின்னர் இந்த மாதம் 23ஆம் திகதிவரை நாடாளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.
பிணைமுறி மோசடி விசாரணை அறிக்கை தொடர்பில் விவாதம் நடத்துவதற்காக நாடாளுமன்றத்தை உடனடியாக கூட்டுமாறு பிரதான அரசியல் கட்சிகள் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் இன்று நாடாளுமன்றச் சிறப்பு அமர்வை கூட்டுவதற்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தீர்மானித்துள்ளார்.
பிணைமுறி மோசடி விவகாரம் உட்பட சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஆளுங்கட்சிக்கும் எதிரணிக்குமிடையே இன்று கடும் சொற்போர் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (5)

# பெற்றோர் விழிப்படையாதவரை துர்நடத்தையை தடுக்க முடியாது

## திருகோணமலை நீதிவான் ஹம்ஸா தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 10
சிறுவர் துர்நடத்தை தொடர்பில் விழிப்புணர்வுகளும் அதனைத் தடுப்பதற்கான செயற்றிட்டங்களும் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனாலும் துர்நடத்தைச் சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. பெற்றோர் விழிப்படையாதவரை இதனைக் கட்டுப்படுத்த முடியாது. இவ்வாறு திருகோணமலை மாவட்ட நீதிபதி ஹம்ஸா தெரிவித்தார்.

மாணவர் மதிப்புறுத்தல் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
திருகோணமலை மாவட்டத்தில் கடந்த காலங்களில் அதிகளவான சிறுவர் துர்நடத்தை வழக்குகள் நீதிமன்றங்களில் பதிவாகியுள்ளன. சிறிய மற்றும் பெரியளவிலான நடவடிக்கைகளாக இருந்த போதிலும் இதில் ஈடுபடுகின்றவர்கள் பிள்ளைகளின் நெருங்கிய உறவினர்களாகவே இருப்பது தெரியவருகின்றது.
சிறுவர்களை நெருங்கிய உறவினர்களுடன் பழக விடும் போது பெற்றோர் மிகக் கவனமாக இருக்க வேண்டும்.
பாடசாலைகளுக்கும் மேலதிக வகுப்புக்களுக்கும் தங்களது குழந்தைகளை சாரதிகளுடன் அனுப்பி விட்டு பெற்றோர்கள் அதுபற்றி அக்கறையற்று இருக்கின்றனர்;. இங்குதான் அவதானம் தேவை. சிறிய சேட்டைகளில் ஆரம்பமாகி துர்நடத்தை, வன்புணர்வு வரையில் முடிகின்ற சம்பவங்கள் பதிவாகி வருகின்றன.
போதைப் பொருளைப் பாவிக்கின்ற சாரதிகளைப் பற்றி பெற்றோர்கள் அறிய வேண்டும். இந்தச் சாரதிகளுடன் தமது பிள்ளைகள் தனிப்படுத்தப்பட்டுச் செல்லாத நிலையை பெற்றோர் உறுதி செய்ய வேண்டும் - என்றார். (5)

## எஜமானியின் சடலத்துக்கு பாதுகாப்பு வழங்கிய நாய்

கொழும்பு, ஜன. 10
பதுளைப் பகுதியில் நாயொன்றுடன் தனிமையில் வாழ்ந்து வந்த 70 வயது நிரம்பிய லீலாவதி சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தப் பெண்ணின் வீட்டுப்பக்கம் துர்நாற்றம் வீசியதையடுத்து, அயலவர்கள் பதுளைப் பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் தெரிவித்தனர். பொலிஸார் அங்கு விரைந்தனர். வீட்டின் கதவு மூடப்பட்டிருந்தது. கூரை மீது ஏறி ஓடுகளை விலக்கிப் பார்த்தனர். பெண் உயிரிழந்திருந்த நிலையில் அவரது நாய், சடலமருகே சடலத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டறிந்தனர்.
பொலிஸார் பதுளை நீதிவான் ஆனந்தமொரகொடவுக்கு அறிவித்தார்கள். நீதிவானுடன் சென்று, வீட்டுக் கதவை உடைத்தார்கள். வீட்டினுள் உட்புகுந்து பெண்ணின் சடலத்துக்கு அருகிலிருந்த நாயை அகற்ற முற்பட்டனர். நாய் அகலவில்லை. நீண்ட போராட்டத்தின் பின்னர் நாயைப் பாதுகாப்புடன் அகற்றினார்கள்.
சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகளுக்காக மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (5)


## பாடசாலை அனுமதியில் சிறப்புரிமை மனித உரிமை மீறலே

கொழும்பு, ஜன. 10
தேசிய பாடசாலைகளுக்கான மாணவர்களின் அனுமதியில் படையினர், பொலிஸார், மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு இட ஒதுக்கீடு வழங்கி முன்னுரிமை கொடுப்பது மனித உரிமை மீறல் என்று மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.
மனித உரிமைகள்ஆணைக் குழுவின் தலைவர் கலாநிதி தீபிகா உடகம, இந்த சிறப்பு முன்னுரிமைக்கு எதிராக கருத்து வெளியிட்டுள்ளார்.
'படையினர், பொலிஸார், மருத்துவர்களின் பிள்ளைகளுக்கு தேசிய பாடசாலைகளுக்கான அனுமதியின் போது வழங்கப்படும் சிறப்பு முன்னுரிமை, சமூகத்தின் ஏனைய பெற்றோர் மற்றும் பிள்ளைகளின் மனித உரிமைகளை மீறுவதாக உள்ளது. சமூகத்தின் ஒரு பகுதியினருக்கு மாத்திரம் வழங்கப்படும் இந்த முன்னுரிமை, அரசின் அனுசரணையுடன் இடம்பெறும் மனித உரிமை மீறலாகும்' என்றும் குறிப்பிட்டுள்ளார். (5)

> தமிழர்கள், தாங்கள் பயங்கரவாதிகள் அல்ல எனவும், சுதந்திரத்துக் காக மட்டுமே போராடி வருவதாகவும் முழக்கமிட்டுள்ளனர்.

## சுவிஸில் தமிழர்கள் கவனவீர்ப்பு

கொழும்பு, ஜன. 10.
சுவிற்சர்லாந்தில் பயங்கரவாதத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டதாகக் கூறி விசாரணையை எதிர்கொண்டு வரும் 13 தமிழர்களுக்கு ஆதரவாக டிசினோ மாகாணத்தில் கவனவீர்ப்புப் போராட்டம்மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இதில் கலந்துகொண்ட தமிழர்கள், தாங்கள் பயங்கரவாதிகள் அல்ல எனவும், சுதந்திரத்துக்காக மட்டுமே போராடி வருவதாகவும் முழக்கமிட்டுள்ளனர்.
இலங்கையில் மனித நேய நடவடிக்கைகளுக்கு தங்கள் ஆதரவு எப்போதும் உண்டு என்று முழக்கமிட்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், தாங்கள் ஒருபோதும் மாநில சட்டதிட்டத்துக்கு எதிரானவர்கள் அல்ல எனவும் கூறியுள்ளனர்.
பயங்கரவாதத்துக்கு ஆதரவளித்தல், மிரட்டிப் பணம் பறித்தல் உள்ளிட்ட குற்றச்சாட்டுகளுக்காக 13 தமிழர்கள் மீது குற்றவியல் நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்று வருகிறது. இதற்காகவே மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (5)



## மொரகஹகந்த முன்னைய அரசாலேயே தாமதமானது

### மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 10
இன்றைக்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னரே மொரகஹகந்த நீர்த் தேக்கச் செயற்திட்டத்தின் பணியை நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டிருந்த போதிலும் நாட்டில் காணப்பட்ட அரசியல் கலாசாரத்தின் முறையற்ற செயற்பாடுகளினால் அது தாமதமடைந்தது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.
மொரகஹகந்த நீர்த் தேக்கத்தை திறந்து வைத்து, பொல்கொல்லை அணைக்கட்டு அருகே, 'நாற்பது ஆண்டு மகாவலி மகிமை' தேசிய விழாவில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மொரகஹகந்த களுகங்கை செயற்றிட்டம் முழுமையாக நிறைவடையும்போது நாட்டின் விவசாயத்துறை சிறந்த மாற்றத்துக்கு உள்ளாகும். தேசிய பொருளாதாரத்துக்கும் அது பெரும் உந்துகோலாக அமையும்.
இன்றைக்கு நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் ஜனவரி 8 ஆம் திகதி பொல்கொல்லையில் ஆரம்பமாகிய மகாவலி அபிவிருத்தி செயற்றிட்டம், மொரகஹகந்த நீர்த்தேக்கம் மக்களிடம் கையளிக்கப்படுவதுடன் நிறைவடைவதை முன்னிட்டு அதனை பெருமையுடன் கொண்டாடும் முகமாக 'நாற்பது வருட மகாவலி மகிமை' தேசிய விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
உலகின் பெருமைமிகு நீர்ப்பாசன வரலாற்றை கொண்டுள்ள இலங்கையில் மகாவலி அபிவிருத்திச் செயற்றிட்டம் மக்களின் நன்மதிப்பைப் பெற்ற, முக்கியமானதொரு செயற்திட்டமாகும். அறுபதுகளின் இறுதியில் ஆரம்பமாகிய இந்தச் செயற்றிட்டம் நாடு முழுவதும் பரவிய பெரியளவிலான அபிவிருத்தியை ஏற்படுத்தி தேசிய பொருளாதாரத்தின் மறுமலர்ச்சிக்காக பெரும் பங்கை ஆற்றியுள்ளது.
மொரகஹக்ந்த களுகங்கை திட்டத்தினூடாக நாட்டின் விவசாயத்துறையில் மறுமலர்ச்சி ஏற்படுவதுடன், மீன்பிடி, கைத்தொழில், குடிதண்ணீர் போன்ற பல துறைகளிலும் விரிவான அபிவிருத்தி ஏற்படுத்தும். மேலும் மக்களுக்குத் தூய்மையான குடிதண்ணீர் கிடைப்பதன் ஊடாக ரஜரட்ட மக்கள் எதிர்நோக்கியுள்ள சிறுநீரக நோய்க்கும் தீர்வு கிடைக்கும் - என்றார். (5)

## ஐ.நா. மனித பேரவையிலிருந்து ஆரியசிங்க திருப்பி அழைப்பு

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த அமர்வு பெப்ரவரி 26ஆம் திகதி தொடங்கவுள்ள நிலையில், ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அங்கிருந்து திருப்பி அழைக்கப்படவுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த அமர்வு பெப்ரவரி 26ஆம் திகதி தொடங்கி, மார்ச் 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.
இந்த அமர்வில், இலங்கை தொடர்பான பூகோள கால. மீளாய்வு அறிக்கை நிறைவேற்றப்படவுள்ளது.
2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 1ஆம் திகதி இலங்கையின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட, 30/1 தீர்மானம் எந்தளவுக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்த இடைக்கால அறிக்கையைஐ.நா.மனிதஉரிமை ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் இந்த அமர்வில் சமர்ப்பிக்கவுள்ளார்.
இந்த நிலையிலேயே, பேரவையின் அமர்வுக்கு முன்னதாக, ஜெனிவாவுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க அங்கிருந்து இடமாற்றம் செய்யப்படவுள்ளார். அவருக்குப் பதிலாக, ஏ.எல்.ஏ.அசீஸ் அந்தப் பொறுப்பை ஏற்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (5)



## சுற்றுலாவிகளிடையே மோதல்

உல்லாசப் பிரயாணிகளாக வந்திருந்த வெளிநாட்டைச் சேர்ந்த இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில், ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு ஆபத்தான நிலையில் பதுளை அரசினர் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
எல்லப் பிரதேச பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டுக்கு அமைவாக, கத்தியால் குத்திய சந்தேகத்தில் 27 வயதான இளைஞனைக் கைது செய்துள்ளனர்.
செக் குடியரசைச் சேர்ந்த இரு இளைஞர்கள் உல்லாசப் பிரயாணிகளாக எல்ல பகுதிக்கு வந்து, விடுதியொன்றில் தங்கியிருந்தனர். இருவருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டு, கத்திக்குத்து இடம்பெற்றமை ஆரம்ப விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. (5)

## கேப்பாபுலவில்
# விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத காணிகளின் விவரங்கள் சேகரிப்பு
### முதலமைச்சரின் செயலர் தலைமையில்



முல்லைத்தீவு.ஜன.10
முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்களின் விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் விடுவிக்கப்படாத காணிகளின் விவரங்கலை வடக்கு மாகாண சபை திரட்டியுள்ளது.
வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் ரூபினி வரதலிங்கம் தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் அங்கு சென்று தகவல்களைத் திரட்டினர்.
குறித்த குழுவினர் கேப்பாபுலவு பகுதி மக்களைச் சந்தித்தும் கலந்துரையாடியுள்ளனர் விடுவிக்கப்பட்டுள்ள காணிகளில் எவ்வாறான கட்டடங்கள் காணப்படுகின்றன, மக்களின் வாழ்விடங்கள் எவ்வாறு காணப்படுகின்றன என்பன தொடர்பிலும் காணி உரிமையாளர்களிடம் விசாரித்து விவரம் திரட்டினர் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர். (எ-4-ரி3)

## கொழும்பு கல்வி அமைச்சின் திட்டத்தின் கீழ்
# மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.10
வடக்கில் பாடசாலை மாணவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுவந்த மதியஉணவு கடந்த வருட இறுதியுடன் நிறுத்தப்பட்டது. இந்தநிலையில் கொழும்பு கல்வி அமைச்சின் செயற்திட்டத்தில் மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
'பாடசாலை போசாக்கு நிகழ்ச்சித் திட்டம்' என்ற பெயரில் அது நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஏனைய மாகாணங்களில் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் திட்டமே தற்போது வடக்கு மாகாணத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது என்று கல்வி அதிகாரிகள் தெரிவித்தனர்.
உலக உணவுத் திட்டத்தின்கீழ் கடந்த பல வருடங்களாக மதியஉணவு கடந்த ஆண்டின் 3ஆம் தவணையில் நிறுத்தப்பட்டது. இருப்பினும் 3 ஆம் தவணை இறுதிவரை அதிகாரிகள் மாணவர்களுக்கு உணவு வழங்கிவந்தனர். புதிய வருடத்தில் மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டிருந்தது.
மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயற்பாடு நிறுத்தப்பட்டமையால் பாடசாலைச் சமூகத்தினர் கவலை கொண்டனர். மாணவர்கள் மத்தியிலும் அது தாக்கம் செலுத்தியிருந்தது. இந்த நிலையிலேயே கொழும்பு கல்வி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மீளவும் உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரையான வகுப்பு மாணவர்களுக்கு உணவு வழங்கப்படுகிறது.
இந்தத் திட்டத்தில் ஒரு மாணவருக்கு ஒரு நாளைக்கு உணவுக்கு 30 ரூபா என்ற வீதம் உணவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இது குறைந்த தொகையாக இருந்தாலும் பின்தங்கிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்கு இது சிறந்த விடயம் என்று பாடசாலைச் சமூகத்தினர் தெரிவிக்கின்றனர்.
அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தேசிய உணவு வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் இது பற்றிய அறிவிப்பு வலயக் கல்விப் பணிமனையின் ஊடாகக் கடந்த வார இறுதியில் பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டது.
தற்போது பாடசாலையின் பொதுநிதியில் இருந்து இதற்கான நிதியை பெற்றுக்கொள்ளுமாறும், உணவுக்காகப் பயன்படுத்தும் நிதிவலயக் கல்விப் பணிமனையின் ஊடாகப் பாடசாலைக்குத் தரப்படும் என்றும் வலயக் கல்விக் கூட்டத்தில் அதிபர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (எ-4,ரி)

# 2018ஆம் ஆண்டுக்கான கூட்டுறவு வேலைத் திட்டம் விரைவில் ஆரம்பம்

யாழ்ப்பாணம் ஜன 7
2018ஆம் ஆண்டுக்கான 'கூட்டுறவின் பரிணமிப்பு' என்ற கூட்டுறவின் வேலைதிட்டங்கள் விரைவில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளன. வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் மேற்கொள்ளப்படவுள்ள நாற்பது வரையான வேலைதிட்டங்களை படிப்படியாக ஆரம்பித்து வைப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
இந்த வேலைதிட்டங்கள் ஒவ்வொரு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் காட்சிப்படுத்தப்படும்என்றுவடக்குமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.
அத்துடன் இந்த வேலைதிட்டம் சம்பந்தமாக ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களினதும் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தால் விளக்கங்கள், செயற்பாடுகள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன.
வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அலுவலகத்துக்கு இந்த வேலைத்திட்டத்தின் ஒவ்வொரு மாதத்துக்கான முன்னேற்றம் தொடர்பாகத் தெரியப்படுத்தல் வேண்டும்.
இந்த வேலைதிட்டங்களுக்கு கூட்டுறவு சங்கங்களின் இயக்குனர்கள், பணியாளர்கள் யாவரும் முழுமையாக ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று ஆணையாளர் மேலும் கேட்டுக்கொண்டார். (எ-17)

## பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், ஜன.10
வாக்கெடுப்பு நிலையத்தில் தலைமை தாங்கும் மூத்த அலுவலர்(எஸ்பிஓ), இளநிலை அலுவலர்(ஜெபிஓ) ஆகியோருக்கான பயிற்சி வகுப்பு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நாளைமறுதினம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை மதியம் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது.
புதிய முறையில் வட்டார ரீதியாக உள்ளூராட்சி தேர்தல் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ளது. அதை முன்னிட்டே பயிற்சி இடம்பெறவுள்ளது என யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல்தெரிவத்தாட்சி அலுவலர் த.அகிலன் அறிவித்துள்ளார். (எ-4)

## மாகாண ரீதியில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவு

யாழ்ப்பாணம்.ஜன.10
அதிகரித்துவரும் டெங்குப் பாதிப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் வடமாகாண ரீதியிலான டெங்குக் கட்டுப்பாட்டு செயல்திட்டத்தை மேற்கொள்ளுமாறு மாகாண சுகாதார அமைச்சால் அனைத்து திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.
எதிர்வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் டெங்கு கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் அதில் உள்ளூராட்சி சபைகள், பொலிஸார் படையினர் பிரதேச செயலகத்தினர், சுகாதாரத் திணைக்களத்தினர் உள்ளிட்ட திணைக்கள அலுவலர்கள் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது.
இதன் பிரகாரம் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட மீசாலை கிழக்கு, மீசாலை மேற்கு ஆகிய கிராம அலவலர் பிரிவுகளில் எதிர்வரும் 17ஆம் திகதியும் மட்டுவில் வடக்கு, சரசாலை தெற்கு ஆகிய பிரிவுகளில் 18ஆம் திகதியும் டெங்கு கட்டுப்பாட்டுச சிறப்புச் செயல்பாடுகள் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## இளம் தலைமுறையினரிடத்தில்
# ஆலயங்களுக்குச் செல்லும் பழக்கம் அருகி வருகின்றது
### ஓய்வு பெற்ற அதிபர் நல்லையா ஆதங்கம்

யாழ்ப்பாணம்,ஜன.10
ஆலயங்களுக்குச் செல்லும் பழக்கம் இளம் தலைமுறையினரிடத்தில் குறைந்து வருகின்றது. பஞ்சபுராணம் படிக்கும் ஆர்வம் இல்லை. ஆலயங்களில் தேவாரம் ஓதச் கொன்னால் ஓடிமறைகின்றனர். ஆன்மீகப்பற்று இல்லாமையே இதற்குக் காரணம் ஆகும். ஓய்வு பெற்ற அதிபர் க.நல்லையா இவ்வாறு தெரிவித்தார்.



சங்கானை இலங்கை வங்கிக் கிளையில் கடந்த 4ஆம் திகதி வியா ழக்கிழமை இடம்பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மதிப்பளிப்பு நிகழ்வில் ஆசியுரை வழங்கிய போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஆன்மீகம் என்பது இன்றைய தலைமுறையில் அற்றுப்போய்விட்டது. குரு பெரியோரை வணங்கி ஆசிபெறுவது என்பதும் முற்றே இல்லாத நிலை காணப்படுகிறது. கல்வியறிவுடன் ஆன்மீகத்தையும் பெரியோரை மதிக்க வேண்டும் என்பதையும் இளம் தலைமுறையினர் பின்பற்றி நடக்க வேண்டும். கொலை, கொள்ளைகள் பற்றி தினமும் பத்திரிகை வாயிலாக அறிகின்றோம். இதில் சம்மந்தப்படுபவர்கள் அனைவரும் இளம் பருவத்தினர் என்பது தெளிவாகிறது. ஒழுக்கம் என்பது இளம் தலைமுறையினரிடம் அற்றுப்போய்விட்டது.
பெற்றோர் பிள்ளைகளுக்கு ஒழுக்கத்தையும் நற்பண்புகளையும் புகட்ட வேண்டும். நற்பிரஜைகளாக நாட்டில் வாழ இவை அத்தியாவசியமாகும்-என்றார். (எ-29)

## மணியம்தோட்டம் இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டமை
# சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம்.ஜன.10
யாழ்ப்பாணம் அரியாலை கிழக்கு மணியம்தோட்டம் பகுதியில் இடம்பெற்ற இளைஞர் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு சிறப்பு அதிரடிப் படை புலனாய்வு அதிகாரிகளின் விளக்கமறியல் எதிர்வரும் 22ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
அரியாலை கிழக்கு மணியம் தோட்டம் உதயபுரம் 1ஆம் குறுக்கு பகுதியைச் சேர்ந்த டொன் பொஸ்கோ ரிக்மன் (வயது 24) என்ற இளைஞர் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 22ஆம் திகதி சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார்.
படுகொலைச் சம்பவத்தின் பின்னர் பொலிஸ்மா அதிபரினால் நியமிக்கப்பட்டிருந்த சிறப்புப் பொலிஸ் குற்றப்பிரிவு பொலிஸார் சிறப்பு அதிரடிப்படைப் பிரிவின் புலனாய்வு அதிகாரிகள் இருவரைக் கைதுசெய்து யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் ஆஜர்ப்படுத்தியபோது அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (எ-106)

## கருத்தரங்கு

உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கான திட்ட முகாமைத்துவம் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவம் தொடர்பான 5ஆவது மற்றும் 6ஆவது கட்ட ஒருநாள் பயிற்சிக் கருத்தரங்கு கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நாளை வியாழக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
நடுவண் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் எற்பாட்டில் ஐ.நா.உதவிகள் நிறுவனத்தின் அனுசரணையுடன் கருத்தரங்கு நடத்தப்படவுள்ளது என அமைச்சின் செயலாளர் எஸ்.டி.ஏ.பி.பொறலெஸ்ஸ அறிவித்துள்ளார். (எ-9)

### வடக்கு சந்தைகளில் இனிமேல்

# உள்ளூராட்சி சபைகளே வரி அறவிட வேண்டும்

### உற்பத்தியாளர்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்.ஜன.10

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சில சந்தைகளில் வரி அறவிடும் பணியை அந்தந்த உள்ளூராட்சி சபைகள் மேற்கொண்டு வருவதால் சபைகளே தொடர்ந்து சந்தைகளில் வரியறவிடும் பணிகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுள்ளனர் சந்தைகளுக்குச் செல்லும் உற்பத்தியாளர்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பல சந்தைகள் பிரிவுக்குட்பட்ட உள்ளூராட்சி சபைகளால் கடந்த ஒக்டோபர் மாதம் தொடக்கம் கேள்வி கோரப்பட்டன. எனினும் சந்தைகளைக் குத்தகைக்கு எடுக்க யாரும் முன்வராத தால் சபை நிர்வாகத்தினரே சந்தைகளில் வரி அறவிடும் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அச்சுவேலி, புத்தூர் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் உள்ளிட்ட சந்தைகளை நகர மற்றும் பிரதேச சபைகளே நடத்துகின்றன.

கடந்த காலங்களில் சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்களைக் கொண்டு வரும்போது அங்கு பணியாற்றும் குத்தகையாளர்களின் பிரதிநிதிகள் தங்களின் விருப்பத்திற்கேற்றவகையில் வகைதொகையின்றி வரியை அறவிட்டனர். இதனால் உற்பத்தியாளர்கள் இலாபமடையமுடியாமல் இருந்தது.

கடந்த எட்டு நாள்களாக சந்தைகளுக்கு உற்பத்திப் பொருள்களைக் கொண்டு செல்வோரிடம் சபை அலுவலர்களால் நியாயமான கட்டணம் அறவிடப்படுகிறது. இதனால் சந்தைக்குப் பொருள்கள் கொண்டு வரும் உற்பத்தியாளர்கள் தமது மகிழ்ச்சியைத் தெரிவிப்பதுடன் சபை அலுவலர்களே தொடர்ந்து சந்தையில் வரி அறவிடுவதை மேற்கொள்ள வேண்டுமெனவும் கேட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சந்தையைக் குத்தகைக்கு விடாமல் தொடர்ந்து சபை ஊழியர்கள் மூலம் சந்தை வரி அறவிடும் சபையாக சாவகச்சேரி நகர சபை செயல்பட்டு வருகிறது. கடந்த வருடம்முதல் சாவகச்சேரி பிரதேச சபையும் கொடிகாமம் சந்தையில் வரி அறிவிட்டு வருகிறது.

இந்தச் சந்தைகள் குத்தகைக்கு விடுவதற்கு கேள்வி அறிவித்தலில் குறிப்பிடும் தொகையை விட சந்தையில் ஏற்படும் செலவுகளுடன் (ஊழியர்கள் வேதனம் பற்றுச்சீட்டுக்கள் அச்சிடல் போன்றவை) சந்தையிலிருந்து மேலதிகமாக வருமானமாகக் கிடைக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டது. (சாவகச்சேரி நகர சபை சந்தை கடந்த 2012ஆம் அண்டு குத்தகையாக 50 லட்சம் ரூபா மதிப்பிடப்பட்டு கேள்விகள் கோரப்பட்டு எவரும் விண்ணப்பிக்காததால் சபை நடத்தியது. அங்கு கடமையாற்றிய ஊழியர்களின் வேதனம் உட்பட அனைத்த செலவுகளையும் நீக்கி வருமானமாக 98 லட்சம் ரூபா கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (எ-9)

### சங்கானைக் குருக்கள் வீட்டில் இடம்பெற்ற

# கொலை மற்றும் கொள்ளை வழக்கு விசாரணை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 10

சங்கானையில் குருக்களைத் துப்பாக்கிச் சூட்டில் கொலைசெய்து அவரது மகன்களைக் காயப்படுத்திவிட்டு ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்த வழக்கு விசாரணை, யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சிவானந்தக் குருக்கள் நித்தியானந்தக் குருக்கள் கொல்லப்பட்டார்.

அவரது மகன்கள் இருவரும் படுகாயமடைந்தனர். இந்த வழக்கில் இராணுவப் புலனாய்வாளர்களான, தமிழர்களான காசிநாதன் முகுந்தன். பாலசுப்பிரமணிம் சிவரூபன் ஆகியோரும் இராணுவச் சிப்பாயான பேதுறு குணசேனவும் எதிரிகளாகக் கைது செய்யப்பட்டனர்.

அது தொடர்பான வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கு யாழ்ப்பாண மேல்நீதிமன்றில் நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு வந்தது.

நேற்று விசாரணை இடம்பெற்றது. நாளைவரை இந்த விசாரணை இடம்பெற்று அடுத்தவாரமும் இது பற்றிய விசாரணை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது வழக்குத் தொடுநர் தரப்பு சாட்சியப் பதிவு விசாரணை இடம்பெறுகிறது.

வழக்குத் தொடுநர் தரப்பில் அரச சட்டவாதி நிசாந் நாகரட்ணமும் எதிரிகளான இராணுவத்தினர் சார்பில் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரனும் முன்னிலையாகிவருகின்றனர். (எ-4)

# வடக்கில் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுங்கள்

### வடமாகாண சபை உறுப்பினர் அஸ்மின் முதலமைச்சரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாணத்தில் அதிகரித்துவரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்த மாகாண சட்ட ஒழுங்கு அமைச்சர் என்ற வகையில் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பொலிஸ் மூத்த அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி சிறப்புச் செயலணியை மேற்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு மாகாண சபையின் 115ஆவது அமர்வு நேற்றையதினம் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது. இந்த அமர்விலேயே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக போதைப்பொருள்கள் அதிகளவில் மீட்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக நாம் இவ்வளவு காலமும் போதைப்பொருள் கடத்தல் மையமாக வடக்கு மாகாணம் பயன்படுத்தப்படுகின்றது என நினைத்து வந்தோம். ஆனால் அந்த நிலைமாறி இப்போது எமது மாகாணத்தின் இளைய சமுதாயம் போதைப்பொருளுக்கு வெகுவாக அடிமையாகி வருகின்றது.

வடக்கில் உள்ள பாடசாலைகளை குறிவைத்து நன்குதிட்டமிட்டவகையில் போதைப்பொருள் பாவனையை பரப்பும் நடவடிக்கை திரைமறைவில் இடம்பெறுகின்றது. எமது பிரதேசங்களில் போதைப் பொருள்களை விற்பனை செய்பவர்களை இதுவரை பொலிஸார் ஒருதடவை கூடக்கைதுசெய்யவில்லை. மாறாக போதைப்பொருளை வாங்கிப் பாவிக்கும் ஒரு சில நபர்களை மட்டுமே கைது செய்கின்றனர். அவ்வாறு கைது செய்தாலும் கைது செய்த நபர்களை ஒன்று இரண்டு நாள்களில் விடுதலை செய்து விடுகின்றனர்.

எனவே திட்டமிட்ட வகையில் எமது இளைய சமுதாயத்தை போதைப்பொருளால் அழிக்கும் செயலை கட்டுப்படுத்த மாகாண சட்ட ஒழுங்கு அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாம் அரசியல் தீர்வுக்காக போராடிவருகின்றோம். எமது இளைய சமூகத்தினர் நாட்டில் சமாதானம், ஒழுக்கம் மற்றும் நல்லிணக்கத்துடன் வாழ போராடி வருகின்றோம். ஆனால் எமது இளைய சமுதாயம் போதைப்பொருள்களுக்கு அடிமையாகி வேறு ஒரு பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. எனவே அதிலிருந்து மீட்கஉரியநடவடிக்கையை எடுக்க வேண்டும்-என்றார்.

‘‘தற்போதைய அரசு போதையை ஒழிக்கின்றோம் என்று கூறிக் கொண்டு இந்தமுறை வரவு செலவுத் திட்டத்தில் பியர் வகைகளுக்கான விலையைக் குறைத்துள்ளது. இதன் ஊடாக மது பாவனையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இதனை தடுக்க உடனடியாகசட்ட ஒழுங்கை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்" என வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் தனது கருத்தை முன்வைத்தார். (எ-8)

### திணைக்கள உத்தியோகத்தர்களின் போக்குவரத்து சேவைக்காக

# வடமாகாண சபையின் பேருந்துகள் தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன

### முதலமைச்சர் அதிரடி அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 10

வடக்கு மாகாண திணைக்களங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் போக்குவரத்து சேவைக்காக மாகாண சபையின் பேருந்து சேவைகள் தனியார் பேருந்து உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் 115ஆவது அமர்வு நேற்றையதினம் வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த அமர்வில் அரச உத்தியோகத்தர்களுக்கான பேருந்து சேவை நஷ்டத்தில் இயங்குகின்றது என குறிப்பிட்டு அதனை ஆராய மாகாண சபையால் குழுவும் நியமிக்கப்பட்டது. அந்த குழுவின் அறிக்கை வந்துள்ளது என அவைத்தலைவர் சபையில் குறிப்பிட்டார்.

ஆனால் அந்த அறிக்கை தொடர்பில் ஆராய முன்னரே முதல்வர் 'அந்த சேவைகள் அனைத்தும் தனியார் பேருந்து உரிமையாளர் ஊடாக இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு விட்டன.

அவர்களின் சேவைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. அது தொடர்பில் எந்த முறைப்பாடுகளும் இதுவரை கிடைக்கவில்லை' என்று முதல்வர் திடீரென இவ்வாறு பதிலை வழங்கினார்.

'வடக்கு மாகாண சபை இருக்கின்ற ஒருவருட காலத்தில் இனி ஒரு குழுவை கூட நியமிக்க வேண்டாம். ஏனெனில் வடக்கு மாகாண சபை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து பல சந்தர்ப்பங்களில் ஏராளமான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்தக் குழுக்களின் விசாரணை அறிக்கைகளையோ அல்லது பரிந்துரைகளையோ இங்கு யாரும் மதிப்பதாக இல்லை. வடக்கில் இடம்பெற்ற நெல்சிப் ஊழல் தொடக்கம் பல விடயங்கில் நியமிக்கப்பட்ட குழுக்களின் பரிந்துரைகள் எவையும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இந்தநிலையில் தற்போதும் மாகாண அரச உத்தியோகத்தர்களின் போக்குவரத்து சேவை தொடர்பில் ஆராய அண்மையில் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழுவில் நானும் அங்கம் வகிக்கின்றேன். ஆனால் குழுவின் அறிக்கை வரமுதலே முதல்வர் தாமாக ஒரு முடிவை எடுத்துவிட்டால் பிறகு எதற்கு குழு அமைத்தீர்கள். வெறுமனே குழுக்களை அமைத்து உறுப்பினர்களின் நேரத்தை வீணாக்கி கொண்டிருப்பதற்கு இனிவரும் காலங்களில் குழுக்கள் அமைப்பதை அடியோடு நிறுத்துங்கள்' என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச. சுகிர்தன் முதல்வரின் கருத்து தொடர்பில் காட்டமாக தனது கருத்துக்களைப் பதிந்தார்.

'மாகாண திணைக்களங்களுக்கு பேருந்துகளை பகிர்ந்தளிக்கும்போது வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கும் பேருந்து வேண்டும்' என்று முதல்வர் கூறினார்.

அதற்கு அவைத்தலைவர் 'பேரவை செயலகத்துக்கும் பேருந்து தேவையாகவுள்ளது. எனினும் நாம் கூறுவதா இல்லையா என்று இருந்தோம். எனினும் இதனையும் கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்' என தனது கருத்தை முன்வைத்தார். (எ-8)

# தலபூட்டுவா கொலை: சந்தேகநபருக்குப் பிணை

கொழும்பு,ஜன.10
தலபூட்டுவா யானை கொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட எட்டாவது சந்தேக நபர் நேற்று பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மஹறாவ நீதவான் நீதிமன்றில் சந்தேக நபர் நேற்று முற்படுத்தப்பட்டார். அவரை ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான இரு சரீரப் பிணைகளிலும் ரொக்கப் பிணையிலும் செல்ல் நீதிமன்று அனுமதித்தது.

ஏனைய எழு பேரும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ற-ரி4)



# மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வு மல்லாவியில்

மல்லாவி, ஜன.10
துணுக்காய், மாந்தை கிழக்கு கல்வி வலயத்தில் கடந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 31 மாணவர்கள் நேற்று மதிப்பளிக்கப்பட்டனர்.

வடக்கு மாகாண சிவில் பாதுகாப்புக் குழுக்களின் சிறப்புப் பணிப்பாளரும், மூத்த பொலிஸ் அத்தியட்சருமான கணேசநாதனின் ஏற்பாட்டில் மல்லாவி மத்திய கல்லூரியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் வெலிகன்ன, உதவிப் பிரதேச செயலர் (துணுக்காய்) பிரதாபன், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாாணவர்களின் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பின்தங்கிய இடங்களில் இருந்து மாணவர்கள் முன்னேற்றமான பாதைக்குச் செல்வதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். மாணவர்களின் வளமான எதிர்காலத்துக்காகவே இவ்வாறான விழாக்களை ஏற்பாடு செய்திருக்கின்றோம் என்று நிகழ்வில் உரையாற்றிய கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேஸ் வெலிகன்ன தெரிவித்தார். (ற-ரி4,72,74)



# துறைமுக ஊழியர்கள் உணவுதவிர்ப்பு போராட்டம்

கொழும்பு, ஜன.10
சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஹம்பாந்தோட்டை மாகம்புற துறைமுகத்தின் ஊழியர்கள் நேற்று தொடக்கம் சாகும் வரை உணவுதவிர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்தனர். தமது கோரிக்கைகளுக்கு பொறுப்பான அதிகாரிகள் சரியான தீர்வை பெற்றுத் தராமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த உணவுதவிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்று மாகம்புற துறைமுக ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் ஐ.கே.ஒமேஷ் தெரிவித்தார்.

துறைமுகத்தின் பிரதான வாயிலுக்கு முன்பாக 438 ஊழியர்கள் போராட்டத்தை ஆரம்பித்தனர். மாகம்புற துறைமுகத்தை சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு முன்னர் அந்த ஊழியர்கள் நவம்பர் 30ஆம் திகதி சேவையிலிருந்து நீக்கப்பட்டனர் என்றும் இதுவரை அவர்களுக்கு எந்தவித தீர்வும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. அதேவேளை தமது பிள்ளைகளின் தொழிலுக்கு உத்தரவாதமளிக்குமாறு கோரி சேவையிலிருந்து நீக்கப்பட்டவர்களின் பெற்றோர் சத்தியாக்கிரகப் போராட்டத்தை கடந்த சில வாரங்களாக முன்னெடுத்து வருகின்றனர். (ற)

# மகிந்தவை சூழவுள்ளோரே அவதூறு பரப்புகின்றனர்

கொழும்பு.ஜன.10
முன்னாள் அரசதலைவர் மகிந்த ராஜபக்சவை சுற்றியுள்ளவர்களே அவர் மீது அவதூறுகளை பரப்பிவருகின்றனர் என சுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இராஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசு மூலமாக செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் அனைத்துக்கும் மகிந்தவே காரணம் என அவரைச் சார்ந்தவர்களே கருத்துகளை வெளிப்படுத்தி வருகின்றனர். இது எந்தவகையிலும் பொறுத்தமற்றது. மகிந்தவைச் சார்ந்தவர்களே அவர் மீது அவதூறுகளைப்பரப்பி வருகின்றனர் என்பது ஏன் தெரியவில்லை. அதேபோன்று மகிந்த ராஜபக்சவும் தான் முன்னாள் அரசதலைவர் மட்டுமே தற்போது அரச தலைவர் இல்லை என்பதை மறந்து விட்டு பல்வேறு கருத்துகளை முன்வைக் கின்றார். ஆட்சியை கவிழ்த்துவிடுவோம் என பலர் விமர்சனங்களை எழுப்பி வருகின்றனர். அப்படி ஆட்சியை கவிழ்த்துவிட முடியாது.

2020ஆம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தலின் மூலமாகவே ஆட்சி மாற்றம் ஏற்படுத்த முடியும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். (ற.ரி4)

# கரையொதுங்கிய நிலையில் ஆணின் சடலம் மீட்பு

அம்பாறை, ஜன.10
அம்பாறை கோரைக்களப்பு முகத்துவாரம் பகுதியில் கரையொதுங்கிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.



திருக்கோவில் பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டனர்.

சடலமாக மீட்கப்பட்டவர், தம்பிலுவில் வில்லியம்பிள்ளை வீதியைச் சேர்ந்த, 49 வயதுடைய, ஒரு பிள்ளையின் தந்தையான, வைரமுத்து கருணாநிதி என உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது.

இவர் நேற்று முன்தினம் வீட்டில் இருந்து மேசன் தொழிலுக்காக சென்றவர் நேற்று சடலமாக மீட்கப்பட்டார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை. திருக்கோவில் பொலிஸார் மேற்கொண்டனர். (ற)

# நூல்களை வாசிப்பதன் மூலம் மனதைரியத்தைப் பெற முடியும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுதாகரன் தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.10
சவால்களோ பிரச்சினைகளோ ஏற்படுகின்ற போது அவற்றை இலகுவாகத் தீர்ப்பதற்கான மனதைரியத்துடனான சிந்தனையை வெளிக்காட்டுவதற்கு அதிகமான புத்தகங்களை தேடித் தேடி வாசிக்க வேண்டும். என திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். சுதாகரன் தெரிவித்தார்.

கிண்ணியா பொது நூலக கேட்போர் கூடத்தில் நூலகங்களுக்கான நூல்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
இன்றைய சிறுவர்களாக இருக்கும் சிறார்களே நாளைய தலைவர்கள். எதிர்காலத்தில் கல்விக்கும் நூல்களின் கொள்வனவுக்கும் அதிக முதலீடுகளை செய்யவுள்ளோம். புதிய சிந்தனை புதிய கண்டு பிடிப்புக்களுக்கான அறிவை அதிக நூல்கள் வாசிப்பதன் மூலம் வளர்த்துக் கொள்ள முடியும்.

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கும் பிரதேச அபிவிருத்திக்கும் முக்கிய பங்கு வகிப்பது கல்வி தான் இதனைக் கொண்டு சமூகம் எழுச்சி பெறவேண்டும். மக்களுக்கான இவ்வாறான விழிப்பூட்டல்கள் ஊடாக வாசிப்பு பழக்கங்களை மேம்படுத்தவும் வாசகர் வட்டங்களை உருவாக்கவும் முன்வரவேண்டுமென்பதே எமது இப் புத்தகங்கள் வழங்கும் நோக்கமாகும். என்றார். (ற.ரி4,40)

# அக்குப்பஞ்சர் சிகிச்சை ஆரம்ப நிகழ்வு நேற்று

மட்டக்களப்பு, ஜன.10
அட்டாளைச்சேனை தள ஆயுள்வேத மருத்துவமனையில் நேற்று அக்குப்பஞ்சர் சிகிச்சை ஆரம்பிக்கப்பட்டது. மருத்துவமனைப் பொறுப்பதிகாரி கே.எம்.அஸ்லம் சிகிச்சையை ஆரம்பித்தார்.

மூட்டுவாதம், நீரிழிவு, உடற்பருமன், ஒற்றைத்தலைவலி, கால் கை விறைப்புத் தன்மை போன்ற நோய்களுக்கு அக்குப்பஞ்சர் சிகிச்சை வழங்கப்பட்டது. (ற)



# விபத்தில் மூவர் காயம்



மல்லாவி பேருந்துத் தரிப்பிடத்துக்கு அண்மையில் நேற்று மதியம் நடந்த விபத்தில் பெண் மற்றும் சிறுமி உட்பட மூவர் காயடைந்தனர். முச்சக்கர வண்டி ஒன்றும், கப் ரக வாகனம் ஒன்றுமே விபத்துக்குள்ளாகின. முச்சக்கர வண்டிச் சாரதியும், அதில் பயணித்தவர்களுமே காயங்களுக்குள்ளாகினர். காயமடைந்தவர்கள் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். விபத்துத் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ற.72)



## மடகஸ்கரில் புயலுக்கு 29 பேர் சாவு

மடகஸ்கர் நாட்டில் 'அவா' புயலுக்கு 29 பேர் சாவடைந்தனர். மேலும் 13 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிப்படைந்துள்ளனர்.
கடந்த வெள்ளிக்கிழமை மடகஸ்கரில் 'அவா' என்று பெயரிடப்பட்ட புயல் தாக்கியது. மடகஸ்கரின் கிழக்குப் பகுதி பெரிதும் பாதிப்படைந்துள்ளது.
29 பேர் சாவடைந்துள்ளனர். 13ஆயிரம் பேர் தத்தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர். (ம)

## சிரியாவில் தாக்குதல் அதியுச்சம்

டமஸ்கஸ், ஜன. 10
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கு எதிரான போர் சிரியப் பாலைநிலத்தில் உச்சக்கட்டமாக இடம்பெற்று வருகின்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.
ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனி நாடு என்று அறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் முழுவதுமாக விடுபட்டுள்ளது. சிரியாவின் சில நகரங்களிலும், சிரியப் பாலைநிலங்களிலும் போர் தொடர்ந்து வந்தது. அதிலும் குறிப்பாக சிரியப் பாலைநிலங்களில் போர் அதி உச்சக்கட்டமாக இடம்பெற்று வருகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.
"சிரியப் பாலை நிலங்களில் இருந்து இன்னும் ஒருசில வாரங்களில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு விரட்டியடிக்கப்படும். சிரியா ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பின் பிடியில் இருந்து விடுபடும் நிலையில் உள்ளது" என்று சிரிய இராணுவம் கடந்த வாரம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)



வண்ணப்பூச்சுக்களை ஒருவர் மற்றொருவர் மீது வீசிக் கொண்டாடும் பண்டிகை பிலிப்பைன்ஸின் மணிலாவில் அண்மையில் இடம்பெற்றது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இந்தப் பண்டிகையில் பங்குகொண்டனர் என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

### ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் ஆதிக்கம்

# பாகிஸ்தானில் அதிகரித்தது

பாகிஸ்தானில் ஐ.எஸ். அமைப்பின் ஆதிக்கம் சமீப காலமாக அதிகரித்து வருகிறது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. பாகிஸ்தானில் செயற்பட்டுவரும் பன்னாட்டு அமைப்பொன்று நடத்தி ஆய்விலேயே இந்தத் தகவல் வெளிப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் கடந்த வருடம் நடத்தப்பட்ட தாக்குதல்களில் அதற்கு முன்னைய வருடங்களுடன் ஒப்பிடுகையில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பல தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன என்று ஆய்வு குறிப்பிட்டுள்ளது.

பாகிஸ்தானில் கடந்த வருடம் 370 தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் 815 பேர் உயிரிழந்துள்ளனர்.
ஆயுதக் குழுக்களை அழிப்பதற்காக பாகிஸ்தான் அமெரிக்காவிடம் இருந்து மில்லியன் டொலர்களை வருடாவருடம் பெற்று வந்தது.
ஆனால் ஆயுதக் குழுக்களை அழிக்காமல் இரட்டை வேடம் போடுகிறது என்று தெரிவித்து பாகிஸ்தானுக்கான நிதியுதவியை அமெரிக்கா அண்மையில் நிறுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)






## தீவிரவாதத்தை ஒழிப்பதில் பாகிஸ்தான் சாதித்துள்ளது

### சீனா வெளிப்படையான ஆதரவு

பீஜிங், ஜன. 10
தீவிரவாதத்தை ஒழிப்பதற்காக பாகிஸ்தான் பல தியாகங்களைச் செய்து சாதித்துள்ளது என்று தெரிவித்துள்ளது சீனா. சீனாவின் அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளரே பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.
பாகிஸ்தான் ஆயுத கலாசாரத்தை வளர்க்கிறது என்று தெரிவித்து அந்த நாட்டின் மீது ஏகப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது அமெரிக்கா. பாகிஸ்தானில் ஆயுத கலாசாரம் மிகையாக உள்ளது என்று அண்மைக்கால புள்ளி விவரங்களும் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் சீனா இவ்வாறு ஆதரவு தெரிவித்துள்ளது.
"பயங்கரவாதத்தை குறிப்பிட்ட ஒருநாட்டுடன் இணைத்துப் பேசிவருவதை சீனா எப்போதும் எதிர்க்கிறது. பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையை ஒரு குறிப்பிட்ட நாட்டின் மீது திணிப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம். உலகெங்கும் உள்ள பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் பாகிஸ்தான் பல முக்கியமான தியாகங்கள் மற்றும் பங்களிப்புகளை செய்துள்ளது என்று பல முறை நாங்கள் வலியுறுத்தியுள்ளோம்.
ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டுவதற்கு பதிலாக, பரஸ்பர மரியாதை அடிப்படையில் பயங்கரவாத எதிர்ப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும்" என்று சீன அயலுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் லூகாங் மேலும் தெரிவித்தார். (ம)

> "பாகிஸ்தான் ஆயுத கலாசாரத்தை வளர்க்கிறது என்று தெரிவித்து அந்த நாட்டின் மீது ஏகப்பட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது அமெரிக்கா.

## மிகச் சிறிய தக்காளியை உருவாக்கியது இஸ்ரேல்

இதுவரை இல்லாத அளவு மிகச் சிறிய தக்காளியை இஸ்ரேல் ட்டு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
தண்ணீர் வசதி மிகக் குறைவாக உள்ள இஸ்ரேல், விவசாயத்தில் புதிய உத்திகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி வருகிறது. இதன் மூலம் விவசாய உற்பத்தி மற்றும் ஆராய்ச்சியில் அந்த நாடு சிறந்து விளங்குகிறது. குறிப்பாக, காய்கறிகள் மற்றும் பழங்களை நவீன சாகுபடியில் விளைவித்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக தக்காளியை மிக சிறிய அந்த நாடு ஏற்கெனவே உருவாக்கியுள்ளது.
செர்ரி தக்காளி என அழைக்கப்படும் இந்த தக்காளி அதிக சிவப்பு நிறத்துடன், சிறியதாக உள்ளது. விரைவில் செர்ரி தக்காளியை ஏற்றுமதி செய்ய ஆரம்பிக்கவுள்ளது இஸ்ரேல். (ம)



## சிரியாவில் கார்க்குண்டு வெடிப்பு உயிரிழப்பு எண்ணிக்கை 23 ஆனது

டமஸ்கஸ், ஜன. 10

சிரியாவின் வடமேற்குத் திசையில் அமைந்துள்ள இட்லிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் 23 பேர் உயிரிழந்தனர்.

துருக்கி எல்லையையொட்டிய சிரியாவின் இட்லிப் மாகாணம் ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது. இதனால் அங்கு சிரிய அரச படைகளும், ரஷ்யப் படைகளும் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஆயுதக் குழுவின் தலைமையகத்தை இலக்குவைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்ட கார்க் குண்டுத் தாக்குதலில் சம்பவ இடத்திலேயே 18 பொதுமக்கள் உயிழுந்தனர். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டவர்களில் மேலும் ஐந்து பேர் உயிரிழந்ததை அடுத்து சாவு எண்ணிக்கை 23ஆக உயர்ந்தது. (ம)





## ஈரான் எண்ணெய் கப்பல் வெடித்து சிதறும் நிலை

சீனக் கடல் பகுதியில் மற்றொரு சரக்கு கப்பலுடன் மோதிவிபத்துக்குள்ளானதில் தீப்பற்றிஎரியும் ஈரான் எண்ணைய்க் கப்பல் வெடித்துச் சிதறலாம் என அஞ்சப்படுவதாக தெரியவந்துள்ளது.

ஈரான் நிறுவனத்துக்குச் சொந்தமான குறித்த சரக்குக் கப்பல் ஈரான் நாட்டில் இருந்து சுமார் ஒரு லட்சத்து36ஆயிரம் தொன்அளவிலானஎண்ணெயை ஏற்றிக்கொண்டு சென்றுகொண்டிருந்த போது, சீனாவின் குவாங்டாங் நகருக்கு சுமார் 64 ஆயிரம் தொன் உணவு மற்றும் தானியங்களை ஏற்றி வந்த ஹொங்கொங் சரக்குக் கப்பலின்மீது கடந்த சனிக்கிழமை மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்தவிபத்தைஅடுத்துஈரானியக்கப்பலில்இருந்த 32 பேர் காணாமல் போயுள்ளனர். அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. எண்ணெய்க் கப்பல் தொடர்ந்தும் தீப்பற்றி எரிந்து வருகிறது.

இந்த நிலையில் கப்பல் வெடித்துச் சிதறும் அபாயத்தில் உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## எல்சல்வடோர் நாட்டவர்களை வெளியேறுமாறு அமெ. உத்தரவு

அமெரிக்காவில் தங்கியுள்ள எல்சல்வடோர் நாட்டவர்களுக்கான தற்காலிகப்பாதுகாப்புஅந்தஸ்த்தை அமெரிக்காவிலக்கியதுடன், அவர்கள்அடுத்த18மாதங்களில்நாட்டை விட்டு வெளியேற வேண்டும் எனவும் உத்தரவிட்டுள்ளது.

எல்சல்வடோரில்கடந்த2001ஆம் ஆண்டு இரட்டை நிலநடுக்கம் ஏற்பட்டது. இதையடுத்து சுமார் 2 லட்சம் பேர் அமெரிக்காவுக்குள் அகதிகளாக நுழைந்தனர். அவர்களுக்குத் தற்காலிகப் பாதுகாப்பு அந்த்ஸ்தை கொடுத்தது அமெரிக்கா. தற்போது இந்தப் பாதுகாப்பு அந்தஸ்து திரும்பப் பெறப்பட்டுள்ளது. அத்துடன் அடுத்த 18 மாதங்களில் எல்சல்வடோர் மக்கள் அமெரிக்காவை விட்டு வெளியேற வேண்டும் என்று கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது. ட்ரம்பின் இந்த முடிவுக்கு எதிராக பல்லாயிரக்கான மக்கள் இணைந்து போராட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ம)




### மியன்மார் இராணுவத்துக்கு எதிராக

# தாக்குதல் தொடரும்

நைபிட்டோ, ஜன. 10

மியன்மார் அரசுக்கு எதிராகப் போர் தொடரும் என்று அறிவித்தது ரொஹிங்ய முஸ்லிம்களுக்காக போராடிவரும் ஆயுதக்குழு. பௌத்த நாடான மியன்மாரில் சிறுபான்மை இனமாக ரொஹிங்யர்கள் வாழுகின்றனர். அவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று காலாகாலமாக குற்றம் சுமத்தப்படுகிறது.

கடந்த சில வருடங்களாகவே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது. ரொஹிங்யர்களின் உரிமைக்காக ஓர் ஆயுதக் குழுவும் அங்கு போரிட்டுவருகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் பிற்பகுதியில் ரொஹிங்ய ஆயுதக்குழு நடத்திய தாக்குதலில் மியன்மார் சிப்பாய் கள் எண்மர் உயிரிழந்தனர். இதையடுத்து ரொஹிங்யர்களுக்கு எதிரான இனச் சுத்திகரிப்பை பெரும் முனைப்புடன் முன்னெடுத்தது மியன்மார் இராணுவம். சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் மியன்மாரில்இருந்துதப்பித்துபங்களாதேஷுக்குள் சென்று அடைக்கலமாகினர். கடந்தநவம்பர்மாதத்தில்இருந்து நிலமை படிப்படியாக இயல்புக்குத் திரும்பிக்கொண்டிருந்தது. இந்தநிலையில் கடந்த சனிக்கிழமை ரொஹிங்ய ஆயுதக் குழு மியன்மார் இராணுவத்தின் மீது மீண்டும் தாக்குதல் நடத்தியது. தம்மால் தொடர்ந்து தாக்குதல் நடத்தப்படும்என்றும்அந்தக்குழுஅறிவித்துள்ளது. இதனால்ரொஹிங்யர்களுக்குஎதிரான இனச்சுத்திகரிப்புமீண்டும் ஆரம்பிக்கப்பட வாய்ப்புள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)



## ஆங்கிலம் கற்பிக்க ஈரானில் தடை

தெக்ரோன், ஜன. 10

மேற்கத்திய கலாசாரத்தை தடுப்பதற்காக ஈரானில் தொடக்கநிலை பள்ளிக் குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்க அந்தநாட்டு அரசு தடை விதித்துள்ளது.

தொடக்கப்பள்ளியிலேயே குழந்தைகளுக்கு ஆங்கிலம் கற்றுக்கொடுக்கப்படுகிறது. அதனால் ஈரானிய கலாசாரம் படிப்படியாக குறைந்து வருகிறது. அதைத் தடுக்கவும் ஈரானிய கலாசாரத்தை குழந்தைகளிடம் வளர்க்கும் நோக்கிலும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது என்று ஈரானிய அரசு அறிவித்துள்ளது. (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தாளம் தப்பிப் பாடும் மகிந்த ராஜபக்ச

தெற்கில் உள்ளூராட்சிச்சபைத் தேர்தலின் பேசுபொருள் மாறிவிட்ட பின்னரும், பழைய பல்லவியையே திரும்பத் திரும்பப் பாடிவரும் மவுசுபோன பாடகரைப் போன்று பேசி வருகிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டபோது அதன் மைய பேசுபொருளாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிகளும், ஏற்கனவே வெளியாகி இருக்கும் இடைக்கால அறிக்கையும் இருக்கும் என்று கணிக்கப்பட்டது என்னவோ உண்மைதான். அதனைக் கருத்திற்கொண்டே தாமரை மொட்டுக்கு ஆதரவு தெரிவித்து நடத்தப்பட்ட முதலாவது பரப்புரைக்கூட்டத்திலும் மகிந்த ராஜபக்ச இந்த விடயத்தை ஓங்கி முழங்கினார். உயிர்த் தியாகம் செய்து படையினர் போராடியது தமிழீழத்தை வழங்கவா என்று உரத்துக் குரல் கொடுத்தார்.

அவருடைய தேர்தல் பரப்புரை எதை நோக்கிச் செல்லும் என்பதையும், சிங்கள அடித்தட்டு மக்களை உசுப்பிவிட்டு அந்த நெருப்பில் குளிர்காய அவர் முயற்சிக்கிறார் என்பதையும் அவரது அந்த உரை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டியது. ஆனால், பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை வெளியான நாள் முதல் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே, அதாவது சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் முதன்மையான பேசுபொருள், கோடிக்கணக்கில் நடந்துள்ள பண மோசடி பற்றியதாக மாறியது.

அந்த மாற்றம், இயல்பாகவே உள்ளூராட்சித் தேர்தலின் பேசுபொருளையும் பிணைமுறி மோசடி குறித்ததாக மடைமாற்றி இழுத்துச் சென்றுவிட்டது. இப்போது தெற்கின் ஒரேயொரு பேசுபொருள் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர்கள் எத்தனை கோடி ரூபாவை மோசடி செய்தார்கள், மகிந்த ராஜபக்ச காலத்தில் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை கோடியை மோசடி செய்தார்கள் என்பதாகவே அமைந்திருக்கிறது.

புதிய அரசமைப்பு, இடைக்கால அறிக்கைகளைப் போன்றில்லாமல் இந்த மோசடி விடயம் புதிதாகவும் சுவையானதாகவும் கற்பனைகளை விரிவாக்கம் செய்யக்கூடியதாகவும் இருப்பதால் மக்கள் மத்தியிலும் அது தொடர்பான விவாதங்களின் மீது ஆர்வம் ஏற்பட்டுள்ளது. ஊடகங்கள், அரசியல்வாதிகள் எல்லோரதும் பேசுபொருளாக அதுவே மாறியிருக்கிறது.

இவ்வாறு நிலைமை முற்றிலும் மாறிவிட்ட பின்னரும், மகிந்த மட்டும் தாளம் தப்பி மீண்டும் மீண்டும் பழைய பல்லவியையே பாடிக்கொண்டிருக்கின்றார். தமிழீழமா ஒற்றையாட்சியா என்பதைத் தீர்மானிப்பதற்கான தேர்தல் இது என்று மக்களை உசுப்பிவிடுவதற்கு அவர் முயற்சிக்கிறார்.

அரசியல்வாதிகளின் பணமோசடிக்கணக்குகளை ஆராய்ந்து அலசி சிலாகித்துத் திட்டித் தீர்ப்பதில் ஒருவித சுயஇன்பம் கண்டுகொண்டிருக்கும் மக்கள் கூட்டம், மகிந்தவின் உசுப்பேற்றலுக்கு எழுந்து நின்று ஆடுவது இப்போதைக்கு நடக்கக்கூடியதொன்றல்ல. எனவே இடைக்கால அறிக்கையை மிகைப்படுத்தி விவரித்து, அது தமிழ் மக்களுக்கு எல்லாவற்றையும் தூக்கிக்கொடுத்துவிடும் என்பது போன்று காட்டி வாக்கு வேட்டையாடும் மகிந்தவின் உத்தி, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் உளுத்துப்போன உத்தியாகத்தான் இருக்கமுடியும்.

மகிந்தவுக்கும் வேறு வழியில்லை. பிணை முறி மோசடி அறிக்கையை அளவுக்கதிகமாக மக்களிடம் எடுத்துச் சென்றால் பின்னர் தனது ஆட்சிக்கால விசாரணை என்கிற ஆப்பு தயாராக இருப்பதும் அவருக்குத் தெரியும். ஒரு கட்டத்துக்கு மேல் ஐக்கிய தேசியக் கட்சியை பிணைமுறிப் பொறிக்குள் விழவைக்கும் உத்தியோடு பரப்புரை வியூகத்தை முன்னெடுத்துச் சென்றால், அதுவே தனது எதிர்கால அரசியலுக்கும் படுகுழியைத் தோண்டிவிடும் என்பதாலும், மகிந்த பிணைமுறி விவகாரத்தில் இருந்து தனது பரப்புரை வண்டியை வெளியே இழுப்பதற்கு இடைக்கால அறிக்கை மற்றும் புதிய அரசமைப்பு விடயங்களைப் பயன்படுத்த முயற்சிக்கக்கூடும்.

ஆனால், ஐக்கிய தேசியக்கட்சியும், சுதந்திரக்கட்சியும், ஜேவிபியும் இடைக்கால அறிக்கையையும் புதிய அரசமைப்பு முயற்சியையும் மறந்துவிட்டு பிணைமுறி மோசடி விவகாரத்திற்குள்ளேயே மூழ்கிப்போயிருக்கும் நிலையில், மகிந்தவால் மட்டும் பரப்புரைக் களத்தை அதற்கு வெளியே இழுத்தெடுத்துவிட முடியும் என்று தோன்றவில்லை. அதனால் அவரது பாடல் அபசுருதியுடனும் தாளம் தப்பியதாகவும் இருப்பது தவிர்க்க முடியாதது.



# பேரினவாதச் செருக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டு படுகொலைகள்

1974ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10ஆம் நாள், யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளைப் பொலிஸார் திட்டமிட்டு குழப்பிய சம்பவத்தில் 9 தமிழர்கள் உயிரிழக்க நேர்ந்தது. குறித்த சம்பவத்தின் 44ஆம் ஆண்டு நிறைவையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.

மு.ஈழத்தமிழ்மணி

ஒன்பது தமிழர்களது உயிர்களைக் காவுகொண்ட நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் துன்பியல் சம்பவம் இடம்பெற்று இன்றுடன் 44 ஆண்டுகள் கழிந்து போய்விட்டுள்ளன. 1974ஆம் ஆண்டுக்காலத்திலிருந்து, முள்ளிவாய்க்கால் இறுதிப்போர் முடிவடையும் வரையில், எதிர்காலத்தில் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளுக்கான திட்டமிட்டதொரு படுகொலைக்கு ஆரம்பக் குறியீட்டை ஆரம்பித்து வைத்து காலஞ்சென்ற தலைமை அமைச்சர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அரசு உறுதியெடுத்த நாள்தான் அந்தத் துன்பியல் சம்பவம் இடம்பெற்ற ஜனவரி பத்தாம் நாளாகும்.
யாழ்ப்பாணம் முதன்மை வீதி, வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாகவுள்ள யாழ் முற்றவெளியில் நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வுகளில் கலந்துகொண்ட வேளை உயிரிழந்த ஒன்பது தமிழர்களின் நினைவுச் சின்னம், அதன் அடையாளமாக இன்றும் எழுந்து நிற்பது, இன்னமும் அந்த கொடிய இரவைத் தமிழர்கள் தம் மனதுகளில் எக்காலமும் நினைவு படுத்திக் கொள்வதற்காகவேயாகும்.

44 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், அந்த மாநாட்டில் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட படுகொலை நிகழ்வானது தமிழர்கள் மத்தியில் பல உண்மைகளை உணர்த்தியிருக்கின்றது. தமிழர்கள் தமிழர்களாக வாழவே கூடாது. மாநாடு நடத்துவதற்கும், தமிழை ஆய்வு செய்வதற்கும் தமிழர்களுக்கு உரிமையில்லை என்ற அந்தப் பேரினவாதச் சிந்தனையுடன் தமிழ் மக்களுக்கெதிரான ஒடுக்குமுறை நடவடிக்கைகள் இன்னமும் வடக்குகிழக்கு மாகாணங்களில் நீண்டு செல்கின்றன.
இன்றைய இளம் தலைமுறையினர் நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுச்சம்பவங்கள் பற்றி பெரிதாக எதுவும் தெரிந்து கொண்டிருப்பதாகத் தோன்றவில்லை. அவர்கள் அது குறித்துக் கொஞ்சமேனும் அறிந்து கொள்ள முயலாததும் மிகவும் கவலைக்குரிய விடயமாகும். நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் பின்னர் அத்தகையதோர் மாநாடு இலங்கையில் இடம்பெறாமலிருப்பதும் தமிழ்மக்களுக்கு ஒரு தலைக்குனிவு போன்றே உள்ளது. சம்பந்தப்பட்ட அமைப்பு நிறுவனத்தினரும் இது குறித்து கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.
ஈழத்தமிழினம் தனது மொழியுரிமை, ஆட்சியுரிமை, நிலவுரிமை போன்றவற்றை அடையவே கடந்த 70 ஆண்டுகளாக போராடிவருகின்றது. தமிழ்மக்கள் சம அந்தஸ்தோடும், சுயமதிப்போடும் வாழக்கூடாது. தமிழ் மொழியை வளர்க்கக்கூடாது என்பவை மட்டுமன்றி, தமிழ்மொழியை ஆய்வுக்குடபடுத்துவது, தமிழர்கள் தங்களைத்தாங்களே ஆண்ட வரலாறுகளையும், கலை பண்பாடுகளையும் எடுத்துச் சொல்லுகின்ற விடயங்கள் சிங்கள அரசுகளுக்கு இன்றுவரை வேப்பங்காயாகக் கசக்குமொன்று.

### சிங்களவர்களாகப் பரிணாமம் செய்யப்பட்ட கரையோரப் பிரதேச தமிழர்கள்

தமிழ் தமிழராக இருக்கக் கூடாது. தமிழன் தமிழோடு உறவாடக் கூடாது என்ற நிலைப்பாடும் ஆரம்பகாலத்திலேயே இருந்தமையினால் தான், நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம் போன்ற பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் மக்களை சிங்களவர்களாக மாற்றி அவர்களின் பேச்சு வழக்கிலிருந்த தமிழ் மொழியைச்சிதைத்து, அம்மொழியை மறக்க வைத்து, அந்த இடங்களெல்லாம் சிங்களப் பிரதேசங்களாக மாற்றி சிங்களமொழிக்குச்சொந்தக்காரர்களாகவே வாழுகின்ற நிலையை நாட்டை ஆண்ட

ஐக்கிய தேசியக்கட்சி அரசும், சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசும், திட்டமிட்டு உருவாக்கி வைத்தன. இவை வரலாற்றுப்பதிவுகளாகும். மூன்று மாவட்டங்களும் முழுமையாகவே சிங்களமயப்படுத்தப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் மொழிக்கு மாநாடு நடத்தப்படல் வேண்டும். தமிழ்மொழியின் பெருமைகளை உலகறியச் செய்தல் வேண்டும். தமிழன் தமிழனாக வாழ்வதற்கு தமிழ் மாநாடு வழி சமைக்கவேண்டும்என்றஎண்ணங்கள், சிந்தனைகள் கொண்ட தமிழறிஞர்கள், புலவர்கள், தமிழ்ஆய்வாளர்கள் ஒன்று சேர்த்து உருவாக்கிய அமைப்பான உலகத்தமிழாராய்ச்சி மன்றம்,தனதுநான்காவதுமாநாட்டை யாழ்ப்பாணத்தில் நடத்த வேண்டுமென்ற விருப்பத்தை தெரிவித்திருந்தது. இதற்கான அனுமதியை சிறிமாவோஅரசுமுதலில்மறுத்திருந்தது. கொழும்பில் நடத்துவதையே அரசு விரும்பியிருந்தாலும், மன்றத்தினர் மறுத்துவிடவே, அதற்கானகாரணங்களைஅரசுக்குவிளக்கியிருந்தாலும், விருப்பமில்லாத நிலையில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அனுமதியை வழங்கியிருந்தது.

திட்டமிட்டபடிநான்காவதுஉலகத்தமிழாராய்ச்சிமாநாடு1974ஆம்ஆண்டு, ஜனவரி மாதம் 4ஆம் திகதி காலை வேளையில் கோலாகலமாக ஆரம்பமாகி, யாழ்மாநகரம்களைகட்டிநிற்க, வீரசிங்கம் மண்டபத்தில் தேமதுரத் தமிழோசைஉலகமெலாம்பரவவழி செய்வோம் என்ற பலத்த கோஷம் எட்டுத்திக்கிலும்ஒலிக்க, மங்களஇசை முழங்க, தமிழன்னை ஆசி வழங்க ஆரம்பமாகியமாநாடு, ஜனவரிமாதம் 10 ஆம் திகதிவரை இடம் பெற்றுக் கொண்டிருக்கின்றது.

யாழ்ப்பாணம்முழுவதும், தமிழர்கள் இலங்கையைஆட்சிசெய்ததமிழ்மன்னர்களது உருவங்களை உணர்வுபூர்வமாகக் காட்சிப்படுத்தி தமிழர்கள் ஆண்ட இனம், தமிழர்களுக்கான அரசுகள்கொடியோடும், முடியோடும், ஆண்டவரலாறுகளையும்எடுத்தியம்பியமாநாடாகமேலும்மேலும்எழுச்சியாக நடந்து கொண்டிருக்க, யாழ். மாவட்டத்திலிருந்து மட்டுமன்றி, பிற மாவட்டங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் பெருமளவில் வீரசிங்கம் மண்டபத்தை நோக்கித் திரண்டபடி இருந்தனர்.

**தமிழாராய்ச்சி மாநாடு குறித்து இறும்பூது எய்திய ஈழத் தமிழர்கள்**

தமிழர்களால்பெருமைப்பட்டதமிழாராய்ச்சி மாநாடு, அறிஞர்களின் பேச்சுக்கள், புலவர்களின் கவிதைகள், பட்டிமன்றங்கள், ஆய்வுகள், பரதநாட்டியம் என இயல், இசை, நாடகங்கள் என்றவரிசையில்ஏழுநாள்வரையில் நடந்துகொண்டிருந்தமைகண்டுஉலகத்தமிழர்களே உலகத்தில் செம்மை மொழி, முதன்மொழியாம் எம்தமிழ் மொழி, மொழிகளுக்கெல்லாம்மூத்த மொழி என்ற பெருமையும் இறும்பூதும் எய்தினர்.

ஏழுநாள்களாகயாழ்மாநகரம்இந்திரலோகமாகவே காட்சியளித்துக் கொண்டிருந்தது. தமிழை வளர்த்த தமிழ்ப்புலவர்கள், பெரியோர்களின் திருவுருவச் சிலைகள் மேலும் நகரைச் செழுமைப்படுத்தியிருந்தன. இடையிடையே பொலிசாரின் இடையூறுகள், நெருக்கடிகளும் தலைதூக்கியிருந்த நிலையிலும், மக்களோ எவற்றையும் பொருட்படுத்தாமல் தமிழ் மக்கள் மண்ணில் தமிழராய் நடக்கின்றோம், மொழியின் மூச்சாய் இருக்கின்றோம் என்ற நிமிர்வுடன் மாநாட்டின் இறுதி நாளான ஜனவரி பத்தாம் நாள் நிகழ்வுகளில் கலந்து கொண்டிடவேண்டும். தமிழகத்தின் தமிழறிஞரான முகமதுவின் தேனினும்இனிமையானபேச்சைக்கேட்டுவிட வேண்டுமென்ற பேராவலோடு 50ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீரசிங்கம் மண்டபம் முன் ஆறுமணியிலிருந்து திரண்டிருக்க இறுதிநாள் நிகழ்வுகள் இரவு ஏழுமணியளவில் ஆரம்பமாகின.

நைனாமுகம்மதுவின் பேச்சு ஆரம்பமானது. கூடியிருந்த மக்கள் அவரது பேச்சில் மயங்கிக் கட்டுண்டனர். அந்தவேளையில்எவருமேஎதிர்பாராதவிதத்தில்திடீரெனபொலிஸார்தங்களது ஜீப் வண்டிகளில் மக்களை ஊடறுத்து வர முயன்ற வேளை, மக்களோ அதற்குஇடம்கொடுக்கவிரும்பாதுஅப்படியே வீதியின் நடுவிலும், வீதி ஓரங்களிலும்அமர்ந்திருக்க பொலிசார் அந்த அவமதிப்பால்தங்களது ஆத்திர உணர்வையும், மூர்க்கத்தனத்தையும் காட்ட முனைந்தனர். அரசினது அடிவருடியாகச்செயற்பட்ட அப்போதைய யாழ்ப்பாண நகரபிதா, அல்பிரட்துரையப்பாவும்பின்புலத்திலிருந்து செயற்பட, பொலிசாரின்அராஜகநடவடிக்கைகள்கட்டவிழ்த்துவிடப்பட்டன.

**பொலிஸாரால் திட்டமிட்டு ஆரம்பிக்கப்பட்ட குழப்பம்**

மாநாட்டைக் குழப்புவது, மக்களைத் தாக்குவது, உயிரிழப்பை ஏற்படுத்துவது, யாழ். மாநகரத்தை இருளில் மூழ்கவிட்டுமக்களைத்தவிக்கவைப்பது போன்ற திட்டமிட்ட சதிச்செயல்களோடு பொலிசாரின் அத்துமீறல்கள் ஆரம்பமாகின. கண்ணீர்ப்புகை, துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் தமிழ்மக்களின் அவலக்குரல்களே அவ்விடமெங்கும் ஓங்கி ஒலித்தன.

புல்லுக்குளம் பகுதியில் உயர் அழுத்தம்கொண்டமின்கம்பிகளைநோக்கி பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் மின்சாரக்கம்பிகள் அறுந்து நிலத்தில் வீழ்ந்ததில் அவ்விடத்தில் ஒன்பதுதமிழர்கள்உயிரிழக்கநேரிட்டது. பொலிசாரின் அட்டூழியங்கள் தொடருகின்றன. யாழ்மாநகர பகுதிகளில்பொலிசார்குவிக்கப்படுகின்றனர். தொடர்ந்து அச்சம் நிலவுகின்றது. தமிழர்களின்உயிர்களைப்பறிக்கவேண்டும், தமிழுக்கும், தமிழர்களின் உணர்வுகளுக்கும் சாவு மணி அடிக்கவேண்டும் என்ற இனவாதம், தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாளின்போதுவெளிப்பட்டது. அதுஅன்றிரவு நிரூபணமாகியது. நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டின் ஊடாகதமிழினம்ஒன்றுபட்டுவிட்டது. விடுதலைவேட்கையும் பீறிட்டெ முகின்ற வேளையில் 42 தமிழ் இளைஞர்கள்அரசினால்கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டமை குறித்த சம்பவம் அரசினால் தமிழர்களது தலைநிமிர்வைப் பொறுக்க முடியாதுகட்டவிழ்த்துவிடப்பட்டதொருசதியாகும்என்பதைநிரூபித்தது. போராட்ட உணர்வுகளை இப்படியான அட்டூழியச் சம்பவங்களுடாக ஆரம்பத்திலேயே முற்றாக அழித்து விட வேண்டும் என்றநயவஞ்சகநோக்கில்தான், ஒன்பது தமிழர்களைக் காவு கொண்டதன் மூலம் நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதி நாள் நிகழ்வுகள்திட்டமிட்டுக்குழப்பப்பட்டன.

**தமிழர் இளைஞர்களிடையே சிங்கள ஆட்சியாளர்கள் குறித்த வெறுப்பு தலைதூக்கக் காரணமாய் அமைந்த சம்பவம்**

இறுதி நாளில் இடம் பெற்ற பொலிசாரின்அராஜகச்சம்பவங்கள்இளைஞர்களின்விடுதலைவேட்கையை அதிகரிக்கச்செய்தன. 44 ஆண்டுகள் கால வரலாற்றில், ஈழத்தமிழினம் பட்ட அவலங்களும், சொத்தழிவுகளும், பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகளும், இடப்பெயர்வுகளும், இடம்பெறுவதற்கு நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசாரை ஏவிவிட்டுநடத்தப்பட்ட வன்முறைகளும், படுகொலைகளும்தான்காரணமாகின. தமிழர்களை அழிப்பதற்கும், தமிழ் உணர்வுகளை இல்லாதொழிப்பதற்கும் பிள்ளையார் சுழிபோட்டு வைத்தது அந்தத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைச்சம்பவமே.

மாநாட்டுநிகழ்வுகளைக்கண்டுகளிக்கவெனத்திரண்டிருந்ததமிழ்உணர்வு கொண்ட ஏறக்குறைய 50 ஆயிரம் பேர் வரையிலான தமிழ் மக்களில் ஒன்பது உயிர்கள் திட்டமிட்டுக்காவு கொள்ளப்பட்டமையே, தாம் தனித்தவமானதொரு தேசிய இனமாக வாழ வேண்டுமென்ற எண்ணத்தைத் தமிழ் மக்களிடையே உருவாக்கி வைக்கக் காரணமாகியது.

பொலிசாரினது அந்தத்திட்டமிட்ட செயற்பாடு தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றகோரிக்கைமுன்வைக்கப்பட்டபோதிலும்,அந்தவேளையசிறிமாவோ அம்மையாரின் தலைமையிலான அரசு அதற்கு இணங்கவில்லை. ஆயினும் சுதந்திரமான விதத்தில் நிறுவப்பட்ட விசாரணைக்குழு, சம்பவத்துக்கான முழுப்பொறுப்பையும் பொலிசார்மீதுசுமத்தித்தனதுஅறிக்கையை வெளியிட்டிருந்தது.

குறித்தஅந்தத்தமிழாராய்ச்சிமாநாட்டின்போதுஉயிர்நீத்தஒன்பதுதமிழர்களது நினைவாக யாழ் வீரசிங்கம் மண்டபத்துக்குமுன்பாகநிறுவப்பட்ட நினைவுத்தூண்கள்கூடஅசாதாரணமானசூழல்நிலவியகாலகட்டமொன்றில் இடித்தழிக்கப்பட்டன. ஆயினும் மீண்டும் அதே இடத்தில் அத்தகைய நினைவுத்தூண்கள் எழுப்பப்பட்டு, தமிழ் உணர்வாளர்களால் வருடாவருடம் ஜனவரி பத்தாம் நாளில் உயிரிழந்தவர்கள் தொடர்பான நினைவு கூரல் இடம்பெற்று வருகின்றது.

ஈழத்தமிழர்களின்பலதுயரச்சம்பவங்களில் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் பெற்ற நான்காவது உலகத்தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைகளும் ஒன்றாகும்







## வாகனச் சாரத்தியத்தில் அவதானம் பேணல் அவசியம்

அண்மைக்காலமாக, வீதி விபத்துக்கள் குறித்த செய்திகள் அன்றாடம் வெளிவந்த வண்ணமுள்ளன. வாகனங்களை அதிவேகமாகச் செலுத்துவதால் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்களைச் சந்திக்க நேரும் செய்திகள் மனதைப் பதற வைக்கின்றன.

கடந்த சில நாள்களில் யாழ். குடாநாட்டில் பல இளைஞர்கள் வாகன விபத்துக்கள் காரணமாக சாவடைந்துள்ளனர். அராலியில், மட்டுவிலில், அரியாலையில் என இளைஞர்களின் அவலச் சாவுகள் அதிகரித்த நிலையில் தொடர்கின்றன.

உண்மையில் இவ்வாறான வீண் விபத்துக்களுக்கு போதிய சாரத்திய ஒழுங்கு விதிகள் குறித்த போதனைகள் குறைவானமையும் ஒரு காரணம். விபத்தால் ஏற்பட்ட இறப்புக்கள், படுகாயங்கள் மற்றும் உடமைகள் சேதங்களை ஒளிப்பதிவுக் காட்சிகளாக சாரத்திய பயிற்சிகள் வழங்கும்போது சாரதி அனுமதிப்பத்திரம் பெறுபவர்களுக்குத் திரையிட்டுக் காட்டப்பட வேண்டும். அதிவேகம் எவ்வாறான அழிவுகளைக் கொண்டு வருகிறது என்பதை உணர்வு ரீதியாக உணர்த்த வேண்டுமானால், அதிவேகத்தால் இறந்தவர்களின் இறுதிச் சடங்குகளில் பெற்றோர், உடன்பிறப்புக்கள் படும் வேதனையைக் கூடக் காட்சிப்படுத்தி போதிக்க இயலும்.

சற்றுக் கடினமாக இருந்தாலும், அதிவேகமாக வாகனங்களை ஓடுபவர்களுக்கு ஒரு படிப்பினையாக, உயிரின் பெறுமதியை, உறவினர்களின் வலியை இதன் மூலம் உணர வைக்க முடியும் எனக் கருதுகிறேன். மறுபுறம் சற்றுச் சிந்தித்துப் பார்த்தால் இவ்வாறான அதிவேக வாகனச் சாரத்தியத்தால் பல சந்தர்ப்பங்களில் மின்கம்பம் மற்றும் மதில் சுவருடன் மோதுவது போன்று, எதிரே வரும் பயணிகள் வாகனங்களுடனோ, பாதசாரிகள் மீதோ மோதினால் நிலைமை என்னவாகும் என எண்ணிப் பார்க்கவே இயலவில்லை. அத்தகைய விபத்துக்களும் பாதசாரிகள் மீது வாகனத்தை மோதி உயிரிழப்பை ஏற்படுத்தும் சம்பவங்களும் அண்மைக் காலமாக அதிகரித்து வருவது கண்கூடு. தமது இள வயதுப் பிள்ளைகளுக்கு மோட்டார் சைக்கிள்களை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதற்காக வாங்கிக் கொடுக்கும் பெற்றோர்கள் மற்றும் சாரத்திய பயிற்சியாளர்கள் அவசியம் இவற்றைக் கருத்திலெடுத்துச் செயற்பட முன்வரவேண்டும்.

நா.துஷாந். வரணி.

ஈழநேசன்



# பங்குச் சந்தையின் வகைகள்

## கொள்வனவு மற்றும் விற்பனை செயற்பாடு குறித்த தெளிவு பெறல்

பங்குச் சந்தையை முதன்மைப் பங்குச் சந்தை (Primary Markeவ), இரண்டாம் நிலைப் பங்குச் சந்தை (Secondary Market) என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**முதன்மைப் பங்குச் சந்தை**


ஒரு நிறுவனம் நேரடியாகப் பங்குகளை வெளியிடுவதற்கு முதன்மைப் பங்குச் சந்தை என்று பெயர் குறிப்பிடுகின்றனர். பொதுப்பங்கு நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள் முதலியவை நிதியினைத் திரட்டும்பொருட்டு பங்குகளை வெளியிடுகின்றன. அந்த நிறுவனத்தின் பங்குகளை வாங்க விரும்புவோர் அதற்கான படிவங்களை நிரப்பி, முதலீடு செய்ய விரும்பும் தொகைக்கான காசோலை (Cheque) அல்லது வரைவோலையை (Demand Draft) இணைத்து முகவர்கள் மூலமாக விண்ணப்பம் செய்வர்.

அவை பரிசீலனை செய்யப்பட்டு பங்குகள் ஒதுக்கீடு செய்யப்படும் அல்லது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரு நிறுவனம் முதன்முதலில் பங்குகளை விற்பனை செய்யும் தன்மையை "முதல் பங்கு வெளியீடு" (Initial Public Offer IPO) எனவும்,அதன் பின்பான வெளியீடுகள் அனைத்தும் "தொடர் பங்கு வெளியீடு" (Follow on Public Offer FPO) எனவும் அழைக்கப்படுகின்றன.

பங்குகளின் அடிப்படை விலை "முக மதிப்ட ' (Face value) என அழைக்கப்படும். அதாவது, ஒரு பங்கின் விலை 10 ரூபாய் என நிர்ணயிக்கப்பட்டால், அந்தப் பங்கின் முக மதிப்பு 10 ரூபா ஆகும். மீண்டும் பங்குகளை விற்கும் பொழுது, அப்பங்குகளுக்கான தேவை அல்லது கேள்வி (Demand) எவ்வாறு உள்ளதோ அதற்கேற்றவாறு முக மதிப்பைவிட அதிகமாகவோ (Premium),குறைவாகவோ (Discount) அல்லது போனால் அதே அளவிலோ (At Par) பெறுமதி நிர்ணயம் பெறலாம்.

**இரண்டாம் நிலை பங்குச் சந்தை**

முதன்மைச் சந்தையில் பங்குகளை வாங்கியவர்கள், தம் பங்குகளை விற்கவோ, மற்றவர்கள் வாங்கவோ அணுகுவது இரண்டாம் நிலைப் பங்குச் சந்தை அல்லது வெளிச்சந்தை ஆகும். பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்ட பங்குகளை (Listed shares) மட்டுமே வாங்கவோ விற்கவோ இயலும். அதாவது, பங்குகளை வெளியிட்ட நிறுவனங்கள் விதிமுறைப்படி பங்குச் சந்தையில் தங்கள் பங்குகளைப் பதிவு செய்து, பட்டியலில் சேர்க்கச் செய்ய வேண்டும். பின்பு அந்தப்பங்குகளின் பரிவர்த்தனை நடைபெறும். பங்குகளின் விலை நிறுவனத்தின் தரத்துக்கும், சந்தையின் பல்வேறு காரணிகளின் அடிப்படைக்கு ஏற்பவும், சந்தையில் அப்பங்குகளுக்கான கேள்வியைப் (Demand) பொறுத்தும் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். பரிவர்த்தனை செய்ய விரும்புபவர், சந்தை நிலவரத்துக்கு ஏற்ப விலையைக் கொடுத்து பங்குகளை வாங்கவோ அல்லது விலையைப் பெற்றுக்கொண்டு விற்கவோ செய்வர்.



ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகளை வைத்திருப்பவர், அந்த நிறுவனத்தின் பங்குதாரர் எனப்படுவார். பங்குதாரருக்கு நிறுவனத்தின் இலாபத்தைப் பொறுத்து ஈவுத்தொகை அல்லது பங்காதாயம் (Dividend) கிடைக்கப்பெறும். தேவையான பொழுது தரகர்கள் மூலமாகப் பங்குகளை விற்றுப் பணமாக்கிக் கொள்ளலாம்.

**பங்குத்தரகர்கள்** (Stock Brokers)

பங்குச் சந்தையில் பங்குகளை நேரடியாக வாங்கவோ விற்கவோ முடியாது. அதற்கென நியமனம் பெற்றுள்ள பங்குச் சந்தையின் உரிமம் பெற்ற உறுப்பினர்கள் மூலமாகவே பரிவர்த்தனை செய்ய முடியும். இந்த உறுப்பினர்களே தரகர்கள் (Brokers) எனப்படுவர். பங்குச் சந்தையில் முதலீடு செய்யவோ, பரிவர்த்தனை (Trading) செய்யவோ விரும்புவோர் இத்தகைய தரகர்களிடம் இருவிதமான கணக்குகளைத் தொடங்க வேண்டும். அவை டீமேட் கணக்கு, தனிக் கணக்கு என இரு வகைப்படுத்தப்படுகின்றன.

**டீமேட் கணக்கு** (Demat Account)

வங்கிகளில் நாம் பணத்தை வரவு செலவு செய்வது போலவே நாம் வாங்கும் அல்லது விற்கும் பங்குகளின் வரவு செலவைப் பராமரிக்க, தரகர்களிடம் நாம் தொடங்கும் கணக்கே "டீமேட்" கணக்கு எனப்படுகிறது. ஆரம்பகாலத்தில் பங்குகள் காகிதத்தில் இருந்தன.தற்போது பங்குகள் இலத்திரனியல் கட்டமைவாக பேணப்படுகின்றன. இதனால், பரிவர்த்தனைக்கான காலம் மிகக்குறைவதோடு, வீட்டில் இருந்தவாறே பரிவர்த்தனை செய்யவும் முடிகிறது. அது மட்டுமன்றி, பௌதீகப் பங்குகள் மூலம் பரிவர்த்தனை செய்வது மிகக் கடினமாக இருந்ததோடு, அப்பரிவர்த்தனைக்கு முத்திரைக் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. டீமேட் கணக்கில் இத்தகைய பிரச்சினைகள் இல்லை. தவிர, பங்குகளுக்காக நாம் விண்ணப்பம் செய்கையில், எமது டீமேட் கணக்கின் விவரத்தைப் பூர்த்தி செய்து அனுப்பினால் பங்குகள் நேரடியாகவே கணக்கில் வரவு வைக்கப்படுகின்றன.

விற்கவோ, வாங்கவோ அல்லது நம் பங்குகளை அடகு வைக்கவோ விரும்பினால், நாம் டீமேட் கணக்கினை வைத்திருத்தல் அவசியம்.

**தனிக் கணக்கு** (Trading Account)

'டீமேட்' கணக்கு எமது கணக்கில் உள்ள பங்குகள் பராமரிக்கப்படும் தன்மையை உறுதி செய்கிறது. நாம் பங்குகளை வாங்கி விற்க வேண்டுமெனில் வர்த்தகத்துக்கு தனிக்கணக்கு (Trading Account) ஆரம்பிக்க வேண்டிய தேவை காணப்படுகிறது. 'டீமேட்' கணக்கு உள்ளவர்கள் மட்டுமே தனிக்கணக்கினை ஆரம்பிக்க முடியும். வீட்டில் இருந்தவாறே இணையம் மூலமாகக் கூட பங்குப் பரிவர்த்தனை செய்யலாம். அதற்கான கணினி மென்பொருளைப் பங்குத் தரகு நிறுவனத்திடம் பெற்று எமது கணினியில் நிறுவிக் கொள்ளலாம். இதைச் செய்வதன் ஊடே சந்தை நிலவரத்தை உடனுக்குடன் அறிந்து கொண்டு அதனை வாங்குவதா அல்லது விற்பனை செய்வதா என்ற முடிவை மேற்கொள்ளலாம். பங்குப் பரிவர்த்தனை செய்வதும் எளிதாக இருக்கும். ஆயினும், எமது பங்கு வணிகம் என்பது பங்குத் தரகர் வழியாகவே நடைபெறுகிறது. ஆக, பரிவர்த்தனைகளுக்கு ஏற்றவாறு நாம் அவர்களுக்குக் கட்டணம் செலுத்தவேண்டியிருக்கும்.

பங்குச் சந்தை நடவடிக்கைகளில் ஈடுபடும் தனிநபர்களை, முதலீட்டாளர் மற்றும் நாள் வணிகம் செய்வோர் என இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

**முதலீட்டாளர்** (Investor)

இவர்கள் பங்குகளில் முதலீடு செய்து பொருத்தமான தருணத்தில் அதாவது, பங்கின் விலை அவர்கள் எதிர்பார்க்கும் அளவு உயரும்பொழுது அல்லது அவர்களுக்குப் பணம் தேவையான போது விற்பனை செய்வர். இத்தகைய முதலீடுகள் குறுகிய கால முதலீடாகவோ அல்லது நீண்ட கால முதலீடாகவோ இருக்கலாம்.

**நாள்வணிகம் செய்வோர்** (Day Trader)

இவர்கள் பங்குகளை அன்றே வாங்கி அன்றைய தினமே விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்க விருப்பமுடையவர்களாக இருப்பர். இப்பங்குகளின் விலை உயரும் அல்லது சரியும் என ஊகித்து அதற்கேற்றவாறு வணிகத்தில் ஈடுபடுவர். இந்த நடவடிக்கைகளின் ஊடு இலாபம் காண்பது என்பது எவ்வளவு இலகுவான காரியமோ, அதே அளவுக்கு முதலீடு செய்த தொகையை இழக்கும் வாய்ப்புகளும் அதிகம் காணப்படுகின்றன.

“ பங்குகளை அன்றே வாங்கி அன்றைய தினமே விற்பனை செய்து இலாபம் சம்பாதிக்க விருப்பமுடை யவர்களாக இருப்பர். இப்பங்குகளின் விலை உயரும் அல்லது சரியும் என ஊகித்து அதற்கேற்றவாறு வணிகத்தில் ஈடுபடுவர். இந்த நடவடிக்கை ஊடு இலாபம் காண்பது என்பது எவ்வளவு இலகுவான காரியமோ, அதே அளவுக்கு முதலீடு செய்த தொகையை இழக்கும் வாய்ப்புகளும் அதிகம் காணப்படுகின்றன.

புதன்
பொய்கை
10.01.2018

பலரும் தங்களது சூழ்நிலை சரியில்லை என்றே குறைபட்டுக் கொள்கிறார்கள். வெற்றியாளர்களோஎழுந்துதங்களுக்கானசூழ்நிலையைத் தேடுகிறார்கள். அத்தகைய சூழ்நிலை கிடைக்கவில்லையெனில் அவர்களே உருவாக்குகிறார்கள்.

-பெர்னாட் ஷா

# அன்பமுதூறும் அயலார்

## அற்புதமாக அமைந்த ஆற்றுகை

தவமதன்

ஒரு விடுமுறை நாள். மாலைப் பொழுதை மனநிறைவாகவும் பயனுள்ளதாகவும் களிக்க ஏதாவது சந்தர்ப்பங்கள் கிடைக்குமா என்று எண்ணுகையில் நண்பர் ஒருவர் நாடகம் ஒன்று நடைபெறுவதாக தெரிவித்தார். அதைப் பார்க்கலாம் என்று தீர்மானித்தேன். புலம்பெயர்ந்து சென்ற காலம் தொட்டு சொந்த ஊர் வரும்போதெல்லாம் இவ்வாறான பொது நிகழ்வுகளில் பங்குபற்றுதல் எமது மக்களையும் ஊரின் நிலைமைகளையும் அறிய நல்லதோர் வாய்ப்பாக அமைவதால் நண்பர்களிடம் நிகழ்வுகள் பற்றி அறிந்து கொண்டு செல்வது வழக்கம். இவ்வாறானதொரு பழக்கத்திலேயே குழந்தை ம.சண்முகலிங்கத்தின் 'அன்பமுதூறும் அயலார்' நாடகத்தைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நாடகம் நடைபெற்ற இடம் ஓர் கலையரங்கு அல்ல. அது ஒரு திருமண மண்டபம். ஆகையால் நல்லதோர் நாடகத்தைச் செய்வதற்கு சற்றே பொருத்தமற்றதும் ஆங்காங்கு காணப்பட்ட வர்ண அலங்காரமும் கவனக் கலைப்பான்களும் பார்வையாளருக்கு இடையூறாக இருந்திருக்கலாம். மட்டுமன்றி நடிகர்களுக்கு அப்படியே அமைந்திருக்கும். இத்தனைக்கும் மத்தியில் நாடகத்தைப் பார்தேன். அதன் பின்னர் இதனை எழுதுமளவுக்கு 'அன்பமுதூறும் அயலவர்' என்னைப் பாதித்தது. நாடகம் தொடங்க இருபது நிமிடங்களுக்கு முன்பே அங்கு சென்று விட்டோம். மிகக்குறைவான பார்வையாளர்கள் அமைர்ந்திருந்தார்கள் சிலர் வந்து கொண்டிருந்தார்கள். ஏன் பார்வையாளர்கள் குறைவு 'டிக்கட்' என்றபடியாலோ எனக் கேட்டேன் நண்பரிடம். 'சீச்சி.... நூறு ரூபா தானே. அது பிரச்சினையில்லை நாடகத்துக்கு முன்பு போல் தற்போது சனம் இல்லை' என்று பதில் தந்தார். அந்தப் பதிலுக்குள் பல சமூக நிலைமைகள் மறைந்திருப்பதை படிப்படியாக உணர்கிறேன் இப்போது. 4.30 என்று குறிப்பிட்டிருந்தாலும் 4.50 போல் நாடகம் தொடங்கியது.



### தனித்துவமான பாத்திரங்கள் பாராட்டப்பட வேண்டியவை

மேடையின் இருள் அகன்று ஒளிபரவத் தொடங்கும்போது, ஓர் பத்தடி உயரமான நிலையில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். பின்னர்தான் அது ஓர் மலை உச்சி எனத் தெரிகிறது. 'அன்பமுதூறும் அயலவர்கள்' பலர் மலையின் அடிவாரத்தில் காத்திருக்கின்றனர். உச்சியில் அமர்ந்திருப்பவர் மெதுவாக அசையத் தொடங்கும் நேரம் அயலவர்களான மக்கள் மத்தியில் கடும் கூச்சல் குழப்பம். ஏன் என நோக்குகையில் உச்சியில் நிற்கும் மனிதன் குதித்து தன்னை மாய்த்துக் கொள்ளத் தயாராக நிற்பதும் அயலவர்கள் அதனை நேரடியாகக் கண்டு கழிக்கக் காத்திருப்பதும் நகைப்பும் வியப்புமாக அமைகிறது. நாடகம் தொடங்கிய இரண்டொரு நிமிடங்களில் கதை நிகழும் களம், காலம் கதைக்கான உணர்வு என்பவற்றை வேடவுடை, ஒப்பனை, ஒளியூட்டல் என்பனவும் மிகக் குறைந்தளவாகக் காணப்பட்ட மேடைப் பொருட்கள் நடிகர்கள் ஒவ்வொருவரின் தனித்துவமான பாத்திரப் பண்புகள் என்பன அழகாக வெளிக்கொண்டுவருவது பாராட்டப்பட வேண்டியது.

### நடிப்பால் கட்டிப்போட்ட நாடகக் கலைஞர்கள்

ஒரு மணித்தியாலம் நீண்ட அந்த நாடகத்தில் மனித உணர்வுகளை, உணர்ச்சிக் கனிவை வியாபாரமாக்குவோர்களையும் அதை உணராத அப்பாவி மக்களின் நிலையைச் சித்தரித்து இறுதியில் மனதை நெருகும் முடிவோடு நிறைவடைகிறது. பாத்திரங்கள் ஒவ்வொன்றும் கச்சிதமாக படைக்கப்பட்டிருந்தன. வேடதாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு பார்வையாளர் மனதில் இடம்பிடிக்க முனைகின்றனர். ஆனால் பல சந்தர்ப்பங்களில் அவர்களின் குரலும் வசன உச்சரிப்பும் சில நடிகர்களிற்கு பல வீனமாக உள்ளதை உணர முடிகிறது. அதிகாரம் செய்யும் படைத்துறைப் பெண், அப்பாவி முதியவர், பிள்ளைகளை தன் பிடிக்குள் வைத்து அல்லோலகல்லோல படுத்தும் தந்தை, அவரின் பிள்ளைகள், கணவனைத் தேடும் சீமாட்டி அவரின் மகள், பரபரப்பூட்டும் பத்திரிகையார் புகைப்படக்கலைஞர்கள் என மேடையை நிறைக்கும் பலவயதை ஒத்த நடிகர்கள் வியக்க வைக்கிறார்கள். நாடகத்தின் இயல்பான இசையைக் குறிப்பிட வேண்டியது கட்டாயம் நாடத்தின் ஓட்டத்தோடு நாடகத்தின் பாதியில் வரும் நடிகர்களாக இசைக் கலைஞர்கள் இருவர் கச்சிதமாக இசை வழங்கி நாடகத்தின் வரும் ஒரேயொரு பாடலைப் பாடுகின்றனர். பாடலின் இசை எங்கோ கேட்டது போன்ற உணர்வைத் தந்தாலும், கதைக்கும் நாடகம் வெளிப்படுத்தும் காலத்துக்கும் ஏற்றதாக இசை அமைகிறது.

### நாடகக் குழுவுடனான உரையாடல்

நல்லதோர் நாடகத்தைப் பார்த்த உணர்வு நாடகக் குழுவுடன் உரையாடத் தூண்டியது. அதன் பயனாக சில முக்கிய தகவல்களைப் பெற்றுக்கோண்டேன். இந்த நாடகம் 1905 கண்டு எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. ரஷ்ய மொழியில் லியோனிட் அனட்ரெய்வ் எழுத அதனை தோமஸ் செல்ட்சர் ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்திருக்கிறார்.

செம்முகம் ஆற்றுகைக்குழு மற்றும் ஆரோகணா கலைக்கல்லூரி இதனை வழங்கியிருந்தன. இவை சில ஆண்டுகளுக்கு முன் உருவாக்கப்பட்ட கலை அமைப்புக்களாக இந்தாலும் ஓர் தொழில் முறையான அரங்க நிறுவனத்திற்கு ஒத்த பண்புகளை அரங்கில் காணமுடிந்தது. நாடகத்தின் ஆரம்பத்தில் அவர்கள் தந்த செய்தியை இறுதியில் தந்து நிறைவு செய்வது நிறைவான நிறைவாக அமையும் என எண்ணுகிறேன். அச்செய்தி சமகால தமிழச் சமூகத்தில் நம்பிக்கையீனம், விரக்தி, பாண்பாட்டுப்பிறழ்வு என்பன இளைஞர்களை ஆட்கொண்டிருக்கும் விஷச் சூழல்; உருவாகியுள்ள இந்தத் தருணத்திலே நாடகத் தன்னார்வலர்களின் கூட்டிணைவுடன் அன்பமுதூறும் அயலார் நாடகம் படைக்கப்பட்டு அரங்கம் காண்கிறது.



இந்த ஆற்றுகையின் மூலம் இளைஞர்களின் ஒன்றிணைவும், வீறுடன் விளையாடும் சக்திமிக்க அரங்க ஆற்றுகையும் துளிர்விடுவது, எமது சமூகத்தின் ஆளுமை விருத்திக்கு நம்பிக்கையூட்டுகின்றது. இதன் சிறப்பாக ஏழு வயது தொடக்கம் 70வயது வரையானவர்களின் கூட்டிணைவு சமூக ஒருமைப்பாட்டை இயம்புகின்றது. செம்முகம் ஆற்றுகைக்குழுவின் தொடர் அரங்க முயற்சிகளின் நம்பிக்கையின் பிரகாரம் தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்குகிறது. இந்த முயற்சிக்கும் அதுவே உந்து சக்தி.



அத்தோடு புதிய வாழ்வுக்கான அரங்கப் பயணத்தின் வழியில் ஆரோகணா அரங்கக் கல்லூரி என இரு அரங்கக் குழுக்கள் இணைந்தமை நல்லதோர் ஆரம்பமாகும். இதுபோன்ற சமூக விடுதலையை நோக்கிய கலைப் படைப்புக்களை பலப்படுத்தி ஆளுமைமிக்க சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து அரங்கப் பண்பாட்டை வளர்த்தெடுப்போம் என அந்தச் செய்தி நிறைவடைந்திருந்தது.





see more news in
NEWUTHAYAN.COM

# புதன்பொய்கை

புதன்கிழமை
10 ஜனவரி/2018












வவுனியாவில் சிறப்பாக நடந்தேறிய

## 'தாயுமானவன்' கவிதைநூல் வெளியீட்டு நிகழ்வு

வவுனியா மண்ணின் இளம் பெண் படைப்பாளினிலியோநிசாபாலசிங்கத்தின்கன்னிப் படைப்பான 'தாயுமானவன்' என்ற கவிதை நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை மூத்தஎழுத்தாளர்மேழிக்குமரன்தலைமையில்வவுனியாசுத்தானந்தாஇந்துஇளைஞர் சங்க மண்டபத்தில் காலை 09.30 மணியளவில் இடம்பெற்றது.

அகவணக்கத்தினைத்தொடர்ந்துவவுனியா வேப்பங்குளம்சூசையப்பர்ஆலயமாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. தொடர்ந்து வரவேற்புரையினை திருகோணமலை குவாடலுப்பே ஆலய பங்குத் தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளார் வழங்கினார்.

ஆசியுரையினை மறைக்கல்வி இயக்குநர் அருட்பணி லக்ரன் டீ சில்வா அடிகளாரும் வெளியீட்டுரையினை சந்திரா பாலச்சந்திரனும் நூலின் நயப்புரையினை இரா.இராஜேஸ்வரனும் ஆற்றினர்.

நூலினை மன்னார் கலையருவி இயக்குநரும்நிகழ்வின்முதன்மைவிருந்தினருமான அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் வெளியிட்டுவைக்கமுதற்பிரதியினைநூலாசிரியர் லியோநிசாவின்உறவினர்பெற்றுக்கொண்டனர். சிறப்புநிகழ்வாக அருட்தந்தை தமிழ்நேசன் அடிகளார், கலாநிதி தமிழ்மணி அகளங்கன், தமிழ்மணி மீழிக்குமரன் மற்றும் நூலாசிரியர் லியோநிசா பாலசிங்கம் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மதிப்புறுத்தப்பட்டனர்.

தமிழினியன்

## முழுநிலா கருத்தாடல் நிகழ்வு












வவுனியாகலை இலக்கிய நண்பர்கள்வட்டம் நடத்திய 'முழுநிலா' கருத்தாடல் நிகழ்வு வவுனியா இந்து இளைஞர் சங்க மண்டபத்தில்அகளங்களின்தலைமையில்அண்மையில் இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக தமிழ்மொழி வாழ்த்துப்பா பானுஜா பாலேந்திரனால் பாடப்பட்டது. அடுத்து வரவேற்புரையினை கஜரதி பாண்டித்துரை நிகழ்த்தினார். சிறப்பு நிகழ்வாக மு.கருணாநிதியின் பன்முகத் தமிழ்ப்பணிகள்' எனும் தலைப்பில் சிறப்பு உரைகள் இடம்பெற்றன.

இதில் திரைத்துறை (வெள்ளித்திரை, சின்னத்திரை)ந.தியாகராஜாவும்மொழித்துறை என்றதலைப்பில்கலாபூஷணம்க.ஐயம்பிள்ளையும், அரசியல், சமூகம்என்னும்தலைப்பில்எஸ்.எஸ்.வாசனும்உரைநிகழ்த்தினர். நிகழ்வின் இறுதியில்நன்றியுரை இடம்பெற்றது இதனை சி.நாகராஜ் ஆற்றினார்.



# திருமணம்

## இருமனம் சேர்ந்து ஒருமனமாகும் கைங்கரியம்



இரா. நிஷாந்தன்

## ஆண்டாள் நாச்சியார் கண்ட திருமணக் கனவை பேசுதல்

மனித வாழ்வியலின் போக்கில் கலாசாரத்தையும், பண்பாட்டையும், பழக்கவழக்கங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் தனித்துவப் பெறுதிகளாக சடங்குகள் விளங்குகின்றன. இவை கொண்ட சிறப்பினை இலக்கியங்கள் அற்புதமாக எடுத்துக் கூறியுள்ளன.

**திருமணம்**

அந்தவகையில் 'சடங்கு' என்ற பண்பாட்டின் வெளியில் திருமணச் சடங்கு முக்கியத்துவம் பெறுகிறது. தெய்வீகத் தன்மை உடைய, அன்பின் பக்திபூர்வமான சிறத்தலாய் இருமனங்கள் இங்கு இணைவுபெறுகின்றன. இதனையே திருமண பந்தம் எனக் குறிப்பிடுகிறோம். இத்தகைய திருமணச்சடங்கில் இடம்பெறும் சிறப்பம்சங்களையும், அதன் உயர்ச்சிகளையும் ஆண்டாள் நாச்சியார் தன் திருமணக்கனவின் வாயிலாக உரைக்கின்றார். நாச்சியார் திருமொழியில் அத்தகு அழகிய கூறுகள் காப்பியம் செய்யப்படுவதை அவதானிக்கலாம்.

**ஆண்டாள் கண்ணன் மீது கொண்ட அன்பு**

பெரியாழ்வாரின் மகளான ஆண்டாள் சிறுபராயம் முதலே கண்ணன் மீது தீராத அன்பினைக் கொண்டிருந்தாள். அந்த நினைதலின் வெளிப்பாடே காலப் போக்கில் காதலாகவும் மாற்றங்கொண்டது. கண்ணனே தன் கணவனாக வர வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தாள் ஆண்டாள்.

**ஆண்டாள் தன் திருமணம் பற்றி பாடுதல்**

இந்தநிலையில் ஒருநாள் பொழுது, தன் கனவில் கண்ணன் தன்னை திருமணம் செய்து கொண்டதாக தன் தோழியருக்கு உரைக்கின்றாள். இங்கு திருமணம் நடைபெறுவதற்கு முன்பான நாள் திருமணத்தை நிச்சயம் செய்வதற்கு, மணமகன் கோலகலமான வரவேற்பு உபசாரங்களுடன் அழைத்து வரப்படும் தன்மை அழகானது.

**மணமகன் வரவேற்பு**

இதனை ஆண்டாள் விவரணம் செய்யும் போது, "ஆயிரக் கணக்கான யானைகள் சூழ்ந்து வர, தங்கக் குடங்களில் பூரண கும்பங்கள் வைத்து, எங்கும் தோரணங்களைக் கட்டி மணமகனைப் பெண் வீட்டார் எதிர் கொண்டு அழைத்து வருவர்." என்று குறிப்பிடுகிறாள். இன்றைய காலநகர்வில் மேற்போந்த செயற்கரியங்கள் இடம் பெறுவதில்லை. திருமணம் நடைபெறுவதற்கு பலநாள்கள் முன்பே நிச்சயதார்த்தம் நிகழ்கின்றது.

மணமகன் வரவேற்பினை ஆண்டாள் பாடும் போது,

**வாரணமாயிரம் சூழ வலம் செய்து**
**நாரணன் நம்பி நடக்கின்றா னென்றெதிர்**
**பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்**
**தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி நான்....!**

என்றவாறு அழகுற பாடிக் களிக்கின்றாள்.

இவ்வாறு பெண்வீட்டாரும், மணமகன் வீட்டாரும் திருமணத்தை நிச்சயம் செய்து அதற்கான பொருத்தமுறு நேரத்தைக் குறிப்பர். உறவினர்கள் எல்லோரும் அதனை அறிந்துகொள்ளும் படியாக மணவோலையை வாசிப்பர். ஆம், இன்னாருக்கு இன்னார் என எல்லோரும் அறியும்படி தெரிவிப்பதே நிச்சயதார்த்தம் எனக் குறிப்பிடப்படுகிறது.

**ஆண்டாள் திருமணநாள் நிச்சயம்**

அவ்வாறே, "இந்திரன் முதலிய முப்பத்து முக்கோடிதேவர்களும் தம் தலைவனாகிய நாராயணன் சார்பாக அங்கு வருகை தந்து ஆண்டாளைப் பெண் கேட்டு திருமண நாளை நிச்சயம் செய்கின்றனர். மறு நாள் திருமண நாள். குறித்த அந்த நாளில் கோவிந்தன், மாதவன் எனும் பெயர்களை உடைய காளையை ஒத்த கண்ணன் மண மண்டபத்தில் நுழைந்திருக்கின்றான். அவ் வேளையில் வேத மந்திரங்கள் ஒலிக்க, பல வகை வாத்தியங்கள் இசைக்க, அந்த நாராய ணன் தங்கையாகிய துர்க்கை அழகிய புடவையை தனக்கு கொடுத்து, அதனை உடுக்கச் செய்து தன்னை மணமேடைக்கு அழைத்து வரும்படி கனாக் கண்டேன்." என்கிறாள் ஆண்டாள். இத்தகு அழகிய சித்தரிப்பினை ஆண்டாள் பாடும் போது,

**இந்திரன் உள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்**
**வந்திருந்து என்னை மகட்பேசி மந்திரித்து**
**மந்திரக் கோடி உடுத்தி மணமாலை**
**அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழிநான்...!**

என்று கூறி திருமண நிகழ்வின் மேன்மை பற்றி பேசி மகிழ்கிறாள். இன்றும் மணமகனின் தங்கை மணமகளுக்கு புதுப் புடவை கொடுத்து, அவளோடு துணையாக உடன் வருவதைக் காணலாம்.

**காப்புக்கட்டும் நிகழ்வு**

இவ்வாறு மணமகனும், மணமகளும் மணமேடையில் அமர்ந்ததன் பின்பு, மணமக்கள் இருவருக்கும் இரட்சா பந்தனம் அதாவது, காப்புக் கட்டுதல் சிறப்புற நடைபெறும். அதனையும் ஆண்டாள் நாச்சியார் அழகுறக் காப்பியம் செய்திருப்பதைக் காணலாம். அவ்வகையில், "அந்தணர்கள் எல்லோரும் நாற் திசைகளிலும் இருந்து புனித தீர்த்தங்களை கொண்டுவந்து எம் இருவர் மீதும் தெளித்து, எனக்கும் கண்ணனுக்கும் மங்கலக் காப்புக் கட்ட நான் கனாக் கண்டேன்" என்று பாடுகிறாள் ஆண்டாள்.

**'கைத்தலம்' பற்றி ஆண்டாள் பாடுதல்**

திருமணச்சடங்கில், அடுத்து நிகழ்வது மாங்கல்ய தாரணம். அதாவது, தாலிகட்டுதல் என்று இதனைக் குறிப்பிடுகிறோம். ஆனால் இங்கு ஆண்டாள் குறிப்பிடும் போது மாங்கல்ய தாரணம் பற்றிக் கூறவில்லை. மாறாக அந்த நிகழ்வினைச் சுட்டும் 'கைத்தலம்' பற்றி காண்பியம் செய்கிறாள்.

**மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத**
**முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ்**
**மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்**
**கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழீ...!**

இங்கு, "மத்தளம் முதலிய வாத்தியங்கள் முழங்க, வரிகளைக் கொண்ட சங்குகள் மிகுதியாக ஒலிக்க, முத்து மாலைகள் வரிசையாக தொடுக்கப்பட்ட அழகிய மணப்பந்தலில் என் மைத்துனன் முறையானவாகிய கண்ணன் என் கைகளைப் பற்றக் கனாக் கண்டேன் நான்" என்கின்றாள் கோதை.



**அக்னியை வலம் வருதல்**

திருமணத்தில் மணமக்கள் ஒன்று சேர்ந்த பின், அவர்கள் இருவரும் கை கோர்த்து அக்னியை வலம் வருவர். மணமகன் மணமகள் கையைப் பற்றி மூன்று முறை அக்னியை வலம் வரும் தன்மையை இன்றும் நாம் காணலாம். ஆண்டாளும் தன் திருமணம் பற்றிய கனவில் இது குறித்து உரைக்கும் போது,

**வாய் நல்லார் நல்ல மறை ஓதி மந்திரத்தால்**
**பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்துக்**
**காய்சின மாகளிறு அன்னான் என் கைப்பற்றித்**
**தீவலஞ் செய்யக் கனாக் கண்டேன் தோழீ...!**

எனக் காண்பியம் செய்கிறாள்.

**அம்மி மிதித்தல் நிகழ்வு**

இவை அனைத்தையும் தொடர்ந்து திருமணச் சடங்கில் அடுத்து இடம்பெறுவது அம்மி மிதித்தல் நிகழ்வு. மணமகள் வலது காலை மணமகன் தன் கையால் எடுத்து, அம்மியில் வைத்து மிதிக்கச் செய்வார். இங்கு, "அம்மிக் கல்லைப் போல மணமக்களும் விட்டுக்கொடுப்புடன், இன்ப துன்பங்களை சகித்துக் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டும்." என்ற தத்துவம் குறித்துரைக்கப்படுகின்றது. ஆண்டாளும் தன் திருமணத்தில் அம்மி மிதித்த காட்சியை பதிவு செய்யும் போது,

**இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பற்றாவான்**
**நம்மை வுடையவன் நாராயணன் நம்பி**
**செம்மையுடைய திருக்கையால் தாள் பற்றி**
**அம்மி மிதிக்கக் கனாக் கண்டேன் தோழீ...!**

என்று மெய்யுருகப் பாடுகின்றாள்.

**மணமக்கள் ஊர்வலம் போதல்**

அடுத்து, மணமக்கள் இருவரும் ஊர்வலம் போகும் நிகழ்வு திருமணச்சடங்கில் இடம்பெறுவதைக் காணலாம். இன்றைய திருமணச் சடங்கு நடைமுறையில் இத்தகு செயற்பாடுகள் குறைவாகவே இடம்பெறுகின்றன. ஆரம்பகாலத் திருமண நிகழ்வுகளின் போது மணமக்கள் ஊர்வலம் செல்லும் காட்சி இடம்பெற்றிருப்பதை காணலாம். அவ்வகையில், "ஆண்டாள் தானும் மலர்மாலைகளை அணிந்துகொண்டு, வாசனைத் திரவியங்களை பூசிக் கொண்டு யானையின் மீதேறி வீதியில் ஊர்வலம் வந்ததாக" பாடுகின்றாள்.

**இல்லற தர்மத்தை காப்போம்**

இவ்வாறு சூடிக்கொடுத்த சுடர்க்கோடியான ஆண்டாள், தான் கண்டுகொண்ட திருமணக் கனவினை தன் பாக்களின் ஊடே அழகுற காப்பியம் செய்கின்றாள். இப் பாடல்களைப் பெண்கள் பாடி வந்தால் நல் வரன் கிடைக்கப்பெற்று நல் மக்கட் செல்வங்களைப் பெற்று வாழ்வில் என்றும் இன்புற்றிருப்பர் என்று ஆண்டாள் குறிப்பிடுகின்றாள். திருமணச் சடங்கில் இடம்பெறுகின்ற அத்தனை நிகழ்வுகளையும் தன் பாடல்களின் வழியே ஆண்டாள் பாடியுள்ள தன்மை சிறப்பானது. பாடல்கள் அத்தனையும் இன்றும் வழக்கத்தில் உள்ள சடங்கு சம்பிரதாயங்களின் தன்மைகளை அப்படியே எடுத்துக் காட்டுவனவாக அமைந்திருக்கின்றன. இவற்றை இலக்கியப் பரம்பலினுள் தேடலுற்று சுவையுறப் படிக்கும் போது உள்ளம் உவகை பெறுவதைக் காணலாம்.

# புதன்பொய்கை



## வரலாற்றில் இன்றைய தினம் 10.01.2018



2015 - பாகிஸ்தான் கராச்சி தேசிய நெடுஞ்சாலை ஒன்றில் பயணிகள் பேருந்தும் எண்ணெய் தாங்கி வாகனமும் மோதிக் கொண்டதில் 62 பேர் சாவடைந்தனர்

1946 - ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது பொதுச்சபைக் கூட்டம் லண்டனில் தொடங்கியது. 51 நாடுகள் பிரதிநிதித்துவம் வகித்தன.

1954- பி.ஓ.ஏ.சி. வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 781 ரைறெனியன் கடலுள் வீழ்ந்ததில் 35 பேர் உயிரிழந்தனர்.

1966 - இந்தியா - பாகிஸ்தானிடையே போரை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தத்தில் இரண்டு நாடுகளும் கைச்சாத்திட்டன.

2013 - பாகிஸ்தானில் பல்வேறு குண்டு வெடிப்புக்களில் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததுடன் 270 பேர் வரை காயமடைந் தனர்.

2013 - 'உதயன்' விநியோகப் பொறுப்பாளர் மீது கோரத் தாக்குதல். மோட்டார் சைக்கிளும் எரிந்து நாசம். பிரதிகளுக்குத் தீ வைப்பு.

2013 - எங்கள் பிள்ளைகளை மீட்க உதவுங்கள் என்று புதுக் குடியிருப்பு சென்ற ஆயர்களிடம் பெற்றோர்கள் மன்றாட்டம்.



## அறம்பல பெருக்கிய எம்பெருமாட்டியே அன்னை தங்கம்மா...

விண்ணவரும் மண்ணவரும்
வியப்புறும் படியாக
வேதாகம நூல்கள்
களிப்புறும் விதமாக

தண்ணருட் தெய்வங்கள்
தாம் மகிழும் படியாக
தங்கம்மா எனும் பெருமாட்டி
வந்துதித்தார் இப்புவிதனில்

பண்ணினால் பைந்தமிழினால்
போற்றிடும் படியாக
பரவியே சிவநெறி
விளையும் படியாக

மண்ணிலே அறம்பல
பெருக்கிய எம்பெருமாட்டியே
மாதரசி துர்க்காபுரத் தேவி
அன்னை தங்கம்மா

தாயாக அரவணைத்து
தந்தையாய் அறிவூட்டி
சேயாகும் படி
குழந்தைகள் வரம் பெறவும்

காயாமல் நனையாமல்
கற்பதற்கு வசதியாய்
காலந்தோறும் கல்விக்காய்
உபகாரமளித்தும்

வாயார வாழ்த்தும் படி
வைத்திய மனைகளுக்கீந்தும்
வறுமையினி வாராதபடி
வாழ்வுதனைச் சீரமைத்தும்

தேயாமல் கொள்ளாமல்
இம்மண்ணில் அறங்கள் நீடுவாழ
தெல்லியூரில் துர்க்கையோடு
அன்னை பூத்திருப்பாராக.

- கருடன்



# 2018 புத்தாண்டு பலன்கள்



2017 முடிந்து 2018 பிறந்துள்ளது. இந்தாண்டு ஒவ்வொரு ராசிக்காரர்களுக்குமான பலன்கள் பற்றியும் பரிகாரத் தலங்கள் பற்றியும் விரிவாகப் பார்ப்போம்.

## விருச்சிகம்

சுயமதிப்பை விட்டுக் கொடுக்காதவர்களே!
உங்கள் ராசிக்கு 7இல் சந்திரன் இருக்கும்போது புத்தாண்டு பிறப்பதால், புதிய பாதையில் பயணிக்கத் தொடங்குவீர்கள். பாதியில் நின்ற பல வேலைகள் நல்லபடி முடியும். திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிட்டும். நம்பிக்கைக்கு உரியவர்களின் அறிமுகம் கிடைக்கும். சொத்து வாங்குவீர்கள். தள்ளிப் போன திருமணப் பேச்சு கூடி வரும். கணவன் மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். விலை உயர்ந்த ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பழைய சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும். பணவரவு கணிசமாக உயரும்.

**பார்வைப் பலன்கள்**
ஆண்டு பிறக்கும் நேரத்தில் சுக்கிரனும், புதனும் சாதகமாக இருப்பதால் எதிர்பார்ப்புகள் தடையின்றி முடியும். உங்களுடைய ஆலோசனையை எல்லோரும் ஏற்றுக் கொள்வார்கள். வாழ்க்கைத்துணை வழி உறவுகளால் ஆதரவு உண்டு. சுபநிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். ஆனால், உங்கள் ராசிநாதன் செவ்வாய் 12இல் இருக்கும்போது வருடம் பிறப்பதால், செலவுகள் அதிகரிக்கும். சிலர் வெளிநாடு சென்று வரும் வாய்ப்பு ஏற்படும். கோயில் கும்பாபிஷேகத்தை முன்னின்று நடத்துவீர்கள். சகோதர வகையில் அன்புத் தொல்லைகள் அதிகரிக்கும்.
வருடம் முடியும்வரை சனி 2இல் இருப்பதால், சிக்கனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் அடிக்கடி சிறுசிறு சச்சரவுகள் ஏற்பட்டு மறையும். மற்றவர்கள் உங்களை விமர்சித்துப் பேசினாலும் பொறுமையாக இருக்கவும். எதிர்மறை எண்ணங்களுடன் பேசுபவர்களின் சகவாசத்தைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குக் கண் எரிச்சல், பார்வைக் கோளாறு, பல்வலி, காதுவலி வந்து செல்லும். வழக்குகளால் நிம்மதி குறையக்கூடும். அரச விடயங்கள் சற்று தாமதமாகத்தான் முடியும்.
வருடத் தொடக்கத்தில் இருந்து 13.1.18 வரை சூரியனும், சனியும் சேர்ந்திருப்பதால் உடல் உஷ்ணம், குருதி அழுத்தம், காரியங்களில் தடைதாமதங்கள் வந்துப்போகும். அரசு காரியங்கள் இழுபறியாகும். மூத்த சகோதர வகையில் பிணக்குகள் வரும். வீடு, மனை வாங்குவதற்கு முன்பு சட்ட நிபுணர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது. அக்கம்பக்கத்தில் உள்ளவர்களை அனுசரித்து நடந்துகொள்வது நல்லது.
10.3.18 முதல் 2.5.18 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாய் சனியுடன் இணைந்து பலவீனமடைவதால் சகோதர வகையில் சங்கடங்கள், பணப்பற்றாக்குறை, சொத்துச் சிக்கல்கள் வந்து செல்லும்.
3.5.18 முதல் 30.10.18 வரை உங்கள் ராசிநாதன் செவ்வாய் கேதுவுடன் சேர்வதால் புதிய முயற்சிகள் வெற்றியடையும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். இளைய சகோதர வகையில் ஆதரவு பெருகும்.
29.3.18 முதல் 21.4.18 வரை சுக்கிரன் 6இல் மறைவதால் அலைச்சல், செலவினங்கள் அதிகரிக்கும். கணவன் மனைவிக்குள் சந்தேகத்தால் சின்னச் சின்ன வாக்குவாதங்களும் வரக்கூடும்.
இந்த வருடம் முழுக்க ராகு 9ஆம் வீட்டில் நிற்பதால், எதையும் திட்டமிட்டுச் செய்யவும். தந்தையின் உடல்நலனில் கவனம் தேவை. முடிவுகள் எடுப்பதில் அவசரம் வேண்டாம். ஆனால், ராசிக்கு 3இல் கேதுநிற்பதால், எதையும் சாதிக்கும் துணிச்சல் ஏற்படும். பெரிய பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். பிரபலங்கள் பாராட்டும்படி நடந்துகொள்வீர்கள். சுப நிகழ்ச்சிகளால் வீடு களைகட்டும். விலை உயர்ந்த மின்சார மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். ஆன்மிகப் பணிகளில் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்கள். நீண்டகாலமாகச் செல்ல நினைத்த வெளி மாநில புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். பங்குபரிவர்த்தனையின் மூலம் இலாபம் வரும். வழக்குகள் சாதகமாகும். பால்ய நண்பர்களால் ஆதாயம் உண்டாகும்.
2.5.18 முதல் 30.10.18 வரை ராசிநாதன் செவ்வாய், கேதுவுடன் இணைவதால் தன்னம்பிக்கை குறையும். கொஞ்சம் பொறுமையை இழப்பீர்கள். வெளுத்ததெல்லாம் பால் என்று நம்பிவிடாதீர்கள். சேமிப்புகளில் எச்சரிக்கை தேவைப்படும்.
புத்தாண்டின் தொடக்கம் முதல் 2.10.18 வரை தனம் மற்றும் பூர்வபுண்ணியஸ்தானாதிபதியான குருபகவான், 12 மறைந்திருப்பதால், கடன்கள் கவலை தரும். மற்றவர்களுக்கு வாக்குறுதி எதுவும் வழங்க வேண்டாம். பணப் பற்றாக்குறையால் வீடு கட்டும் பணி தடைப்பட்டு முடியும். ஆனால் 14.2.18 முதல் 10.4.18 வரை விசாக நட்சத்திரம் 4ம் பாதத்தில் அதிசார வக்கிரத்திலும் மற்றும் 3.10.18 முதல் வருடம் முடியும் வரை குரு உங்களுடைய ராசிக்குள் அமர்வதால், வீண் அலைச்சல்கள், அலைக்கழிப்புகள் குறையும். சிறுசிறு ஆரோக்கியக் குறைபாடுகள் ஏற்பட்டு சரியாகும். கணவன் மனைவி ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.
**வியாபாரிகளுக்கு:** பற்று வரவு சுமாராகத்தான் இருக்கும். பழைய சரக்குகளைப் போராடித்தான் விற்கவேண்டி இருக்கும். வேலையாள்களின் போக்கை நினைத்து கவலைப்படுவீர்கள். கடையை வேறு இடத்துக்கு மாற்றுவதில் அவசரம் வேண்டாம். கூடுமானவரை இருக்கும் இடத்திலேயே இருப்பது நல்லது. பங்குதாரர்கள் கொஞ்சம் முரண்டுபிடித்தாலும் அனுசரித்துச் செல்லவும். புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்,. கமிஷன், சிமெண்ட், மருந்து வகைகளால் ஆதாயம் உண்டாகும்.
**உத்தியோகத்தர்களுக்கு:** எதிர்ப்புகளும் ஏமாற்றங்களும் இருக்கவே செய்யும். உங்களின் விடாமுயற்சி மற்றும் கடின உழைப்பை மேலதிகாரி புரிந்துகொள்ளமாட்டார், சக ஊழியர்களால் சலசலப்புகள் ஏற்படும். உங்கள் கருத்துகளைப் பக்குவமாக எடுத்துச் சொல்வது நல்லது. அதிக சம்பளத்துடன் புது வேலை வந்தாலும் பலமுறை யோசித்து ஏற்பது நல்லது.
**மாணவர்களுக்கு:** படிப்பில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது. ஆசிரியர்களின் ஆலோசனைகளை அப்படியே ஏற்றுக்கொள்வது நல்லது. குறிப்பாக அறிவியல், கணிதப் பாடங்களில் அதிக அக்கறை எடுத்துக்கொள்ளவும்.
**கலைத்துறையினருக்கு:** உங்களின் படைப்புகளை மற்றவர்களிடம் பகிர்ந்துகொள்ளவேண்டாம். இளம்கலைஞர்களால் ஆதாயம் உண்டாகும்.
இந்தப் புத்தாண்டு வேலைச்சுமை மற்றும் மனதில் சோர்வையும் ஏற்படுத்தினாலும், உங்கள் பலம் மற்றும் பலவீனத்தை உங்களுக்கு உணர்த்துவதாக அமையும்.

## நாளை

**11.01.2018**
வியாழக்கிழமை

**மார்கழி 27**

திதி: தசமி மு.இ. 11.08 வரை
நட்சத்திரம்: சுவாதி மு.ப. 09.13
சுபநேரம்: 08.03—09.33 வரை
ராகுகாலம்: 02.03—03.33 வரை

# இலங்கையில் தமிழ் வானொலி நாடகங்கள்



'சானா' சண்முகநாதன்

நா.யோகேந்திரநாதன்

ஒருகாலத்தில் தமிழ் வானொலி நாடகங்கள், நேயர்களை இலங்கை வானொலியுடன் கட்டி வைத்திருந்தன எனக் கூறிப் பெருமைப்படுமளவுக்கு திறமை மிக்கவையாக விளங்கின. அந்த நாள்களில் வானொலி நாடகப் பிரதி எழுத்தாளர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் ஆகியோர் நட்சத்திர அந்தஸ்தைப் பெற்றிருக்குமளவுக்கு வானொலி நாடகங்கள் சிறப்பாக அமைந்திருந்தன. பின்னாள்களில் பெரும் கல்விமான்களாக விளங்கிய பிரமுகர்கள் முதற்கொண்டு புகழ்பெற்ற கலைஞர்கள் வரை வானொலி நாடகங்களில் பங்குகொள்வதைப் பெருமையாகக் கருதினர்.

**தமிழ் வானொலி நாடகங்களின் வருகை**

அந்த நாள்களில் கிருஷ்ணன் - பஞ்சு, பீம் சிங், ஶ்ரீதர், திருலோகச்சந்தர் போன்ற திறமையும் ,சமூகப் பொறுப்பும் மிக்க சினிமாப் பட நெறியாளர்கள், தமிழ் ரசிகர்களின் பேராதரவைப் பெறும் வகையிலான படங்களை வெளியிட்டு வந்தனர். காதல், பாசம் போன்ற தனிமனித உணர்வுகளை அடிப்படையாகக் கொண்ட படங்கள் வெளிவந்தன. அந்தப் படங்களில் வரும் பாத்திரங்களுடன் ரசிகர்கள் ஒன்றிப்போய், அவர்களுக்காக மகிழவும் அழவும் முன்வரும் அளவுக்கு அவை தனித்துவம் பெற்றிருந்தன. அதே போன்று இசை காரணமாகவும் அவற்றின் அழகியல் காரணமாகவும், ஹிந்தி மொழிப் படங்களும் தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்தன. இப்படியான ஒரு சூழலில்தான் இலங்கைத் தமிழ் வானொலி நாடகங்கள் முற்றிலும் மாறுபட்ட விதத்தில் வெளிவந்து பெரும் புகழ்பெற்றன. நிலமானியச் சமூகக் கட்டமைப்பின் பண்பாடுகள், எழுச்சிபெற்றுவந்த முதலாளித்துவ சமூக சிந்தனைப் போக்குகளுடன் முரண்பாடுகள், சமூக சாதி ஒடுக்குமுறைகள், மண் வாசனையை வெளிப்படுத்தும் கிராமிய வாழ்வியல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட வித்தியாசமான தரமான படைப்புக்கள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உயிரோட்டமான பாத்திரங்களாக நாடகங்களில் வலம் வந்தன. தொடர் நாடகங்கள் தங்களுக்கென நிரந்தர ரசிகர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டன. ஆரம்ப காலத்தில் இலங்கை வானொலியில் நாடகத் தயாரிப்பாளராக 'சானா' என்றழைக்கப்பட்ட சண்முகநாதன் பணியாற்றினார். இவர் காலத்தில் லண்டன் கந்தையா, விதானையார் வீட்டில், போன்ற பிரபல தொடர் நாடகங்கள் ஒலிபரப்பட்டன. இவற்றில் பின்னாள்க ளில் பல்கலைக்கழகப் பேராசிரியர்களாக விளங்கிய கைலாசபதி, சிவத்தம்பி போன்றோர் முக்கிய பாத்திரங்களில் நடித்திருந்தனர். நகைச்சுவை கலந்த அந்த நாடகங்கள் யாழ்ப்பாணக் கிரா மங்களை யும் பழக்க வழக்கங்களையும் அப்படியே கண்முன் கொண்டு வந்து நிறுத்தியிருந்தன.

**வழிகாட்டியாக திகழ்ந்தவர் 'சானா'**

வானொலியைப் பொறுத்தவரையில் கலைஞர்களுக்கும் நேயர்களுக்குமான தொடர்பூடகம் ஒலிமட்டுமே. எனவே நடிகர்கள் குரலின் மூலம் வெளிப்படுத்தும் நடிப்புத் திறமை, அவற்றைச் சரியாக வெளிக்கொண்டு வருவதில் காட்டும் அதீத ஆற்றல், பிரதிகளை அவற்றுக்கு ஏற்ற வகையில் வடிவமைக்கும் எழுந்தாளரின் லாவகம் என்பனவே வானொலியிருந்து வெளிவரும் ஒலி மூலம் நேயர்களின் கண்களில் காட்சியாக விரிகிறது. இதை நிறைவேற்றப் பெரிய பொறுப்பும் துல்லிய அவதானமும் ஆற்றலும் தேவை. அவ்வகையில் "சானா" பின்வந்த தயாரிப்பாளர்களுக்கு மிகச் சிறந்த வழிகாட்டியாக விளங்கினார். தொடர் நாடகங்கள் ஒலிபரப்பப்படும் அதே வேளையில், வாரம் ஒருமுறை செவ்வாய்க் கிழமைகளில் 15 நிமிட நேர நாடகமும், சனிக்கிழமைகளில் 30 நிமிட நாடகங்களும், மாதம் ஒருமுறை ஒரு மணி நேர நாடகங்களும் ஒலிப்பரப்பாகின என்றால் கலைஞர்களின் உயர்ந்தபட்ச உழைப்பையும் அர்ப்பணிப்பையும் நாம் புரிந்துகொள்ள முடியும். நாடகத்தயாரிப்பில் சாதனை படைத்த அடுத்த கலைஞர் கே.எம்.வாசகர் என அழைக்கப் பட்டம் மாணிக்கவாசகர். அடுத்து தொடர்நாடக வரிசையில் "இரைதேடும் பறவைகள்" "புளுகர் பொன்னையா", 'சண்டியன் சின்னத் தம்பி' போன்ற நகைச்சுவை நாடகங்களால் புகழ்பெற்றிருந்தவர் 'வரணியூரான்' எஸ். எஸ்.கணேசபிள்ளை. அவை மேடை நாடகங்களாகவும் நடிக்கப்பட்டு மக்களின் அமோக ஆதரவைப் பெற்றிருந்தன. அவர் தன்னால் சிறந்த குடும்பப்பாங்கான நாடகங்களையும் வழங்க முடியும் என்பதை 'இரை தேடும் பறவைகள்' மூலம் நிரூபித்திருந்தார்.

**சீதனப் பிரச்சினைகளை எடுத்தியம்பிய நாடகங்கள்**

சுபையர் இளங்கீரன் ஒரு பிரபல முஸ்லிம் எழுத்தாளராக இருந்த போதிலும் யாழ்ப்பாணத்தில் நிலவிய சீதனப் பிரச்சினை, சாதி ஒடுக்குமுறை என்பனவற்றை அடிப்படையாக வைத்துப் பல தரமான நாடகங்களை எழுதியிருந்தார்.

கே.எம்.வாசகர் பதவிஉயர்வு பெற்றுப்போய் விட பி.விக்கினேஸ்வரன் நாடகத் தயாரிப்பாளராகப் பொறுப்பேற்றார். அவரும் வாசகருக்கு எவ்விதத்திலும் குறைந்து விடாமல் தரமான நாடகங்களைப் படைத்தார். நா. யோகேந்திரநாதனால் எழுதப்பட்ட 'போர்க் கோலம்', சண்முகப்பிரியா', 'உடைப்பாறு' ஆகிய ஒரு மணிநேர நாடகங்கள் அவரால் தயாரிக்கப்பட்டுப் பெரும் பாராட்டைப் பெற்றவை. அடுத்து நாடகத் தயாரிப்பாளர்களாக காவலூர் ராஜதுரையும், பின்னர் ஜோர்ஜ் சந்திரசேகரனும் பணியாற்றினர். இவர்கள் வழமையான நாடகத் தயாரிப்புகளை மேற்கொள்வதுடன் பரீட்சார்ந்தமாக நவீன நாடகங்களை தயாரித்து ஒலிபரப்புவதிலும் அக்கறை காட்டி வெற்றியும் பெற்றனர்.



பி.ஏச்.அப்துல் ஹமீட்

**ஐயனார் வழிபாட்டை வெளிப்படுத்திய காட்டுநிலா**

நா.யோகேந்திரநாதனால் எழுதப்பட்டு பி. எச்.அப்துல் ஹமீதினால் தயாரிக்கப்பட்ட ஒரு மணிநேர நாடகம் 'காட்டு நிலா'. ஒரு அடர்ந்த காட்டின் நடுவேயுள்ள ஒரு கிராமத்தையும் அங்கு நிலவும் 'ஐயனார்' வழிபாட்டையும் அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்ட நாடகம் அது. இந்த நாடகம் பல முறை மறு ஒலிபரப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இன்னெருபுறம் நகைச்சுவை கொடிகட்டிப் பறக்க இன்னொரு குழுவின ரைப்பற்றி குறிப்பிடாமல் விட முடியாது. இவர்களின் சிறப்பம்சம் மலையகத்தைச் சேர்ந்த செல்வசேகரன் உபாலி என்ற சிங்களவராக வும், பிராமண சமூகத்தில் பிறந்த ராமதாஸ், மரிக்கார் என்ற முஸ்லீ மாகவும், ராஜ கோபால், அப்புக்குட்டி என்ற யாழ்ப்பாணத் தமிழராகவும், முஸ்லீமான பி. எஸ்.அப்துல் ஹமீட் ஐயராகவும் நடித்திருந்தனர். முதலில் 'கோமாளிகள்' நகைச்சுவை நாடகத் தொடர் ஒலிபரப்பபட்டு நேயர்களின் பெரும் வரவேற்பைப் பெற்றது. அதையடுத்து 'கோமாளிகள் கும்மாளம்', 'விண்வெளியில் கோமாளிகள்' போன்ற நகைச்சுவை நாடகத்தொடர்கள் இவர்களால் ஒலிபரப்பப்பட்டன. கோமாளிகளின் நாடகம் பின் சினிமாப் படமாக எடுக்கப்பட்டு திரை யிடப்பட்டபோது பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்தியாவில் எத்தனையோ தமிழ் வானொலி நிலையங்கள் இயங்கிய போதும் வானொலி நாடகங்களின் பிரதியாக்கம், நடிப்பு, தயாரிப்பு என்பவற்றில் இலங்கை வானொலி நாடகங்களின் தரத்தை அவர்களால் எட்டிப்பிடிக்க முடியவில்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.



**தமிழர் பகுதிகளில் பின்னடைவு கண்ட வானொலி ஒலிபரப்புச் சேவை**

1982,1983 காலப்பகுதியை அடுத்து இலங்கை வானொலிக்கும் வடக்கின் பெரிய பகுதிகளுக்குமிடையேயான தொடர்பு அறுந்து விட்டது. மண்டைதீவில் ஒலிபரப்பு நிலையம் செயலற்றுப் போன பின்பு, இலங்கை வானொலியை சிற்றலை வரிசையில் வெரு சிரமப்பட்டே கேட்கக் கூடியவராக இருந்தது. செவ்வாய்க்கிழமைகளில் ஒலிபரப்பாகும் முஸ்லிம் நாடகங்கள் முஸ்லிம் மக்களால் மட்டுமன்றி இந்து, கிறிஸ்தவ மக்களாலும் விரும்பி க்கேட்கப்படுமளவுக்குத் தரமானவையாக விளங்கின. போர் முடிவுற்ற பின்பு தமிழ் தேசிய வானொலியை வடக்கில் யாழ் குடாநாடு தவிர்ந்த எனைய பகுதிகளில் கேட்க முடிகிறது.

2010ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் ராஜேஸ்வரி சண்முகம் நாடக நடிப்பாளராக இருந்த போது சில நல்ல நாடகங்கள் ஒலிபரப்பாகின. தான் எழுதும் நாடகங்கள் ஒலிபரப்பப்படும் போது அவற்றை எழுதியவர்கள் அவற்றைத் தாங்களே கேட்க முடியாத நிலையில் எழுதுவார்களா? நாட்டின் மூலை முடுக்கெங்கும் தமிழ் தேசிய சேவை கேட்கும் நிலை ஏற்படும் வரை வானொலியில் நல்ல நாடகப்பிரதிகளை நிச்சயம் எதிர்பார்க்க முடியாது.

தமிழ் மக்களின் கலை, இலக்கியம், இசை, நாட்டார் கலைகள், பண்பாட்டு அம்சங்கள் எனப்பயனுள்ள விடயங்களை ஒரு காலத்தில் ஒலிபரப்பிய இலங்கை வானொலியின் தேசிய சேவை, நாட்டின் ஒரு பகுதியில், அதிலும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் கேட்க முடியாமல் இருப்பதை நியாயப்படுத்த முடியுமா? அதற்கு ஏதேனும் உள்நோக்கம் உண்டா?

எனவே ஒரு காலத்தில் உச்சக் கட்டத்திலிருந்த தமிழ் வானொலி நாடகங்கள் மீண்டும் புத்துயிர் பெற வைக்க வேண்டுமானால், பாரபட்சமற்ற வகையில் தமிழர் பகுதிகளிலும் வானொலி ஒலிபரப்பு வசதிகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

“1982,1983 காலப்பகுதியை அடுத்து இலங்கை வானொலிக்கும் வடக்கின் பெரிய பகுதிகளுக்கு மிடையேயான தொடர்பு அறுந்து விட்டது. மண்டைதீவில் ஒலிபரப்பு நிலையம் செயலற்றுப் போன பின்பு இலங்கை வானொலியை சிற்றலை வரிசையில் வெரு சிரமப்பட்டே கேட்கக் கூடியதாக இருந்தது. செவ்வாய்க்கிழமைகளில் ஒலிபரப்பாகும் முஸ்லிம் நாடகங்கள் முஸ்லிம் மக்களால் மட்டுமன்றி இந்து, கிறிஸ்தவ மக்களாலும் விரும்பிக்கேட்கப்படுமளவுக்குத் தரமானவையாக விளங்கின. போர் முடிவுற்ற பின்பு தமிழ் தேசிய வானொலியை வடக்கில் யாழ் குடாநாடு தவிர்ந்த எனைய பகுதிகளில் கேட்க முடிகிறது.

# பன்முகச் செய்திகளை பத்திரிகா தர்மத்துடன் வெளிக்கொணர்ந்தவர் பன்னீர்செல்வம்

கருடன்

உலகை நேர் வழியில் நிதானமாகப் பயணிக்க வைப்பவர்கள் ஊடகவியலாளர்களேயாவர். எந்த ஒரு பெரிய சம்பவமாக இருந்தாலும் சரி, ஆகச் சிறியதொரு சம்பவமாக இருந்தாலம் சரி அங்கே காணப்படும் உண்மைத் தன்மையை உள்ளபடி உள்ளவாறு வாசகனுக்கு வழங்குவதே ஒரு ஊடகவியலாளனின் பொறுப்பாகும். அந்த ஊடகப் பொறுப்பினை உயிரோட்டமாக வெளியிட்ட தர்மவானே மூத்த ஊடகவியலாளரான அமரர் பழவாசம் பன்னீர்ச்செல்வம் ஆவார்.


கொழும்பில் இருந்து வெளியாகும் வீரகேசரி பத்திரிகையில் நீண்ட காலமாக அரசியல் கலாசார வாழ்வுக்கு அத்திபாரமிட்டு, அரசியல் சமூக பொருளாதார வாழ்வுக்கும், நீதிக்கான பயணத்துக்கும் அடிகோலியவர்களில் ஒருவர் பன்னீர்செல்வமே என்று கூறினால் அது மிகையாகாது. ஆக 52 வயதே வாழ்வின் உச்ச எல்லையாகக் கொண்டிருந்த போதும், அந்தக் குறுகிய கால எல்லைக்குள், கொழும்புக்கு ஒரு சரியான கட்டமைப்பினையும் தமிழ் சிங்கள, முஸ்லிம் சகோதரத்துவத்தினையும், முரண்பாடுகளைக் களைந்தவராகவும் உவந்தளித்த ஊடகப் படைப்பாளியாகவும் மிளிர்ந்தார்.

### சுபாவம்

மும்மொழிப் பாண்டித்தியம், ஊடகப் புலமை, சமய சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்று அறிவும், அவைசார்ந்த ஆளுமைப் பண்பும் சகோதரத்துவ - சக வாழ்வும் - சமயோசித புத்தியும், ஊடக தர்மங்களோடு வாழ்கின்ற நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான பயபக்தியான பண்பும் பக்குவமும் பரீட்சயமும் அமரர் பன்னீர்செல்வத்தின் ஆன்மாவில் கோலோச்சிப் பாலித்திருந்தது. ஒவ்வொரு எழுத்தையும், ஒவ்வொரு சொல்லையும், ஒவ்வொரு வசனத்தையும், ஒவ்வொரு படைப்பினையும் கையாள்வதில் ஊடக உலகில் முன்னோடி யாகத்திகழ்ந்து வெற்றிபெறுகின்றார். பாவமான பிரயோகங்களை ஒரு போதும் சம்பாதிக்காத ஊடகப் பரோபகாரி இவராவார்.

### அரசதலைவர் இறுதி மரியாதை

பன்னீர் மறைந்த செய்தி கொழும்பில் பரவியபோது, கொழும்பு மட்டுமல்ல இலங்கை முழுவதுமாக கண்ணீர் வடிந்தது. காரணம் நாடாளுமன்றத்திலிருந்து பாமரமக்கள் வரை அரசினதும் அல்லாத எதிரணியினதும் கருத்துக்களை நாடி பிடித்துக் கோடிட்டுப் பின்வாங்காமல் உள்ளபடி, உரத்துச்சொன்னவர் அமரர் பன்னீர்செல்வம். அரச தலைவரானவர் ஒரு ஊடக மேதாவிக்குக் கரங்கூப்பி இறுதி மரியாதையைச் செய்வதென்பது ஊடகப் பரிபாலனத்துக்குக் கிடைக்கப் பெற்ற ஒரு அங்கீகாரமேயாகும். அல்லாமலும் தமிழ் மொழியிலும், சிங்கள மொழியிலும், ஆங்கில மொழியிலும் அவரால் வரையப்பட்ட அர்த்த புஷ்டியான கட்டுரைகளே. மேலும் சொல்வதானால் அவரது படைப்புக்கள் ஒவ்வொன்றும் சமாதான சகவாழ்வுகளுக்கு உரமிடுவதாகவும், முரண்பாடுகளை வேரறுப்பதாகவும், உருவாகும் பிழைகளைச் சுட்டிக் காட்டப்படுவதாகவும், அதற்குப் பரிகாரமாகப் பிழைகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் உயிர்பெற்று உணர்வோடு விளங்கின. ஒரு தமிழ் மொழி பேசும் ஊடகவியலாளர் இரண்டாம் மொழி மூன்றாம் மொழிபேசும் தகைமைகளைக் கொண்டிருப்பதும், சம்பந்தப்பட்ட மொழிகளில் செய்திகளைப் படைப்பதும் சாதுரியமானதே.



எது எப்படி இருப்பினும் சிங்கள மொழி மூலம் பெரும்பான்மையினரைத் தெளிய வைப்பதான கைங்கரியத்தை ஒரு அரசியல் துரும்பாகக் கடைப்பிடித்தார். குறிப்பாக மலையகத் தொழிலாளர்கள் படுகின்ற தாங்கொணாத் துன்பங்களைச் சிங்கள மக்கள் புரியும் படியாக அவர்களது மொழியிலேயே, அவர்களது பாணியிலேயே ஊடக மூலம் புரிய வைத்தார். ஒன்றல்ல, இரண்டல்ல நூற்றுக் கணக்கான கட்டுரைகளை எழுதி சிங்கள மக்களிடையேயும் கண்ணீரை வரவழைத்தார். மண்சரிவு, லயன் வாழ்வு, றொட்டித்துண்டு, அட்டைக்கடி, இருட்டறை, குடிதண்ணீர், கழிப்பறைகள், குழந்தைகள், காப்பகம், குடியிருப்புக்கள், குளிர், பாடசாலை, பொழுதுபோக்கு, விளையாட்டு, கலை வெளிப்பாடு, அரசுகளின் அக்கறையீனம், வேலை வாய்ப்பு, உயர்கல்வி, சுகாதாரம், வைத்திய பராமரிப்பு ஆகிய விடயங்களை தாம் எழுதிய கட்டுரைகளில் விழிப்புணர் வும் கவனமும் பெறும் பொருட்டுச் சுடச் சுட எழுதியதன் பிரகாரம் கொழும்பும், உலகமும் விழித்துக் கொண்டன. அமரர் பன்னீர்செல்வத்தின் ஊடகப் பணியால் மலையகம் உயிரோடும் உரிமைகளோடும் வாழ்வு பெற்றிருந்தது என்று துணிந்து கூறலாம். வீரகேசரியிலும், தினக்குர லிலும் பணியாற்றிய இவர், சிங்களப் பத்திரிகைகளுக்காகப் பற்பல அரசியல் பொருளாதார சமூக மனித உரிமை ஆட்சி மாற்றம் தொடர்பான கட்டுரைகளை வரைந்து நடு நிலையான செய்தியாளர் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டார். பேட்டிகள் மூலம் பெருமகனானார்.




### நாடாளுமன்ற மாண்பு

ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி, வரவு செலவுத் திட்டம், மசோதா நிறைவேற்றம், விவாதம், அமளிதுமளி, வெளிநாட்டு விவகாரம், போர்க்காலக் குற்றம், மனித உரிமைகள் போன்ற நாடாளுமன்ற நடவடிக்கைகளில் பேசுபொருளாகத் தொடுக்கப்படும் அத்தனை விடயங்களையும் அச்சொட்டாக ஒன்றும் விலகாமலும் விடாமலும் திரட்டி பிரசுரிக்கும் பாங்கு மிகவும் அலாதியானது. பரிசுத்தமானது. மாண்பானது. மதியுகம் மிக்கது. இதன் பேறாகவே, பன்னீர்செல்வத்துக்கு சிறந்த ஊடகவியலாளருக்கான விருதும் வாழ்நாள் சாதனையாளர் விருதும் இலங்கையில் வழங்கி மதிப்புறுத்தப்பட்டது. இலங்கை வாழ் தமிழர்களின் உரிமைகள் தொடர்பாகவும், அவர்கள் இந்த நாட்டில் தலை நிமிர்ந்து வாழ்வதற்கான யுக்திகள் தொடர்பாகவும் சக்தி மிக்க சாத்தியமான எடுத்துக்காட்டுக்களை முன்வைத்தவர் இவராவார்.

நாமும் சிரம் தாழ்த்தி அஞ்சலிப்போமாக....

---

# நீரியல் மாமேதை சண்முகநாதனின் இழப்பு பேரிழப்பே


வை.சுப்பிரமணியம்

"நீர் இன்றி அமையாது உலகு" என்ற தெய்வப் புலவர் திருவள்ளு வனாரது வாக்குக்கமைய உலக நாடுகளின் நீர்வளத்தைப் பேணி வரலாறு படைத்த நீரியல் விஞ்ஞானி, மாமேதை கலாநிதி கதிரவேலு சண்முகநாதனின் இழப்பு உலகுக்கே பேரிழப்பாகும்.

மக்களின் வாழ்க்கை மூன்று காரணிகளால் நிர்மானிக்கப் படுகின்றது. அவையாவன உள்ளார்ந்த அல்லது இயல்பான ஆளுமையும், திறமையும், உளநிலையும், ஆரோக்கியமான வளர்ப்பும், அவர் வளர்த்த சூழலுமாகும். அமரர் சண்முகநாதனுக்கு இம்மூன்றும் சிறப்பாக அமைந்திருந்தது என்பதில் ஐயமேதுமில்லை. தலைமுறை தலைமுறையாகச் சான்றோரும் கல்விமான்களும், நிறைந்த சூழலே அளவெட்டிக் கிராமத்தின் அடையாளம்.

அமரரின் ஆரம்பக் கல்விச் சூழல் எடுத்து நோக்கின் அது கொட்டாஞ்சேனை விவேகானந்தா வித்தியாசாலையாகும். அமரரின் அடுத்த கல்விச் சாலை கொட்டாஞ்சேனை நல்லாயன் கன்னியர்மடம் வித்தியாசாலை.

அளவெட்டி சீனன் கலட்சி ஞானோதயா வித்தியாசாலை ஒரு காலத்தில் ஒரு கலைக்கழகம், இதுவே அமரரின் கல்விக் கூடம். பின்னர் ஆங்கிலக் கல்வியை நாடி அளவெட்டி உடையார் ஆங்கிலப் பாடசாலையில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அதன் பின்னர் உயர் கல்வியைக் கருதி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 1951 தொடக்கம் 1954 வரை கல்வி கற்று 1955ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு மிகச் சிறப்பான புலமைப் பரிசில் அடைவுடன் (Exh.i.nitib.N Schblaisupi) பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டார். அங்கு முதலாம் பிரிவில் அதிவிசேட சித்தி பெற்று வெளியேறினார். அமரரின் கல்விச் சான்றுக்குச் சான்று பகர்வன உலகளாவிய ரீதியில் அவர் பெற்ற பட்டங்களும் வகித்த பதவிகளுமேயாகும்.



### தேம்ஸ் நதித் திட்டத்தில் பணியாற்றியவர் சண்முகநாதன்

1964 - 1965ஆம் ஆண்டுகாலப் பகுதியில் ஐக்கிய ராச்சியத்தின் தேம்ஸ் நதி அணைத் திட்டம் உட்பட நானாவித பொறியியல் சார்ந்த பிரச்சினைகள் சம்பந்தமான தொழில் நிமித்தம் கடலடி எண்ணெய் குழாய் வடிவமைப்பதிலும் ஈடுபட்டுச் சிறப்படைந்தார். இவரின் ஆராய்ச்சியின் மையப் பொருளாக வளர் முகநாடுகளில் நீர் சம்பந்தமான பிரச்சினைகளை அடையாளம் காணலும் அதற்குரிய தீர்வினை அடைதலுமாகவிருந்தது. இலங்கையில் "கடுல்ல" நீர்ப் பாசனத்திட்டம், நில்வளகங்கை நீரை கடல் நீர் உட்புகுந்து மாசுபடாது வீட்டுத் தேவைகளுக்கு உபயோகிக்கும் திட்டங்களும் இவரது மையப் பொருளில் அடங்கும். இவைகளைப் போன்று ஆசியாவிலும், ஆபிரிக்காவிலும் மேலும் 20 நாடுகளில் இவ் வகையான திட்டங்கள் இவரால் உள்ளடக்கப்பட்டன. உவர் நீர் மீட்புக்கான திட்டத்தை முன்மொழிந்த, வழுக்கையாற்றுத் திட்டம் தொண்டமானாறு நன்னீர் திட்டம் என்பனவற்றை யாழ்ப்பாணத்தின் எதிர்கால நன்மை கருதி ஆரம்பித்து வைத்தார். நீரியல் சம்பந்தமான பெரிய வேலைத் திட்டங்களை முன்னெடுத்து உலக வங்கியில் 3 நிபுணர்கள் குழுவில் இடம்பெற்றும் சேவை செய்தார்.

# தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க வாரம் 2018 ஜனவரி 8 - 14 வரை

**தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு மற்றும்**
**ஐரோப்பிய ஒன்றியம்/ ஜேர்மன் அரசினால் நிதியுதவியளிக்கப்படுகின்ற, இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டமும் இணைந்து**

## ‘தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க விருதுக்கான ஆக்கங்களை கோருதல்’

தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு ஐரோப்பிய ஒன்றியம்/ ஜேர்மன் அரசினால் நிதியுதவியளிக்கப்படுகின்ற, **‘இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளை வலுவூட்டும் நிகழ்ச்சித்திட்டத்திற்கு’** பங்களிப்பு நல்கும் பொருட்டு, “இலங்கையினுள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க மேம்பாடு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டக்கூடிய” வகையிலான ஊடக ஆக்கங்கள் கோரப்படுகின்றன.

**இவ் ஆக்கங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு தொனிப்பொருளைக் கொண்டதாக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்:**

* “நல்லிணக்கத்திற்கான பாதை”: இவ் ஆக்கம் இலங்கையினுள் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு வழியமைப்பதாக இருத்தல் வேண்டும்.
* “வெற்றிகரமான நல்லிணக்க கதைகள்”: இவ் ஆக்கம் வெற்றிகரமான நல்லிணக்க செயற்பாடுகளை உருவாக்கு வதற்குத் தேவையான காரணிகளையும், நடவடிக்கைகளையும் பரந்தளவில் பகுப்பாய்வுக்குட்படுத்தி, அது பற்றிய அறிவு, ஊக்குவிப்பு மற்றும் உணர்வினை ஊட்டக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.
* நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்துவது தொடர்பாக சமாதானத்தினதும் நல்லிணக்கத்தினதும் முக்கியத்துவம்
* இலங்கையில் இன, மத ஒற்றுமையை மேம்படுத்தல்.

சமர்ப்பிக்கப்படுகின்ற ஆக்கங்கள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில அச்சு ஊடக ஆசிரியர்களைக் கொண்ட சுயாதீன குழுவொன்றின் மூலம் பரீட்சிக்கப்பட்டு, தீர்ப்பு வழங்கப்படும். ஆக குறைந்த தகைமைக்கான தகுவிதிகளை பூர்த்தி செய்யும் ஆக்கங்கள் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் பிரசுரிக்கப்படும்.

**ஒப்படைக்கப்படும் ஆக்கங்கள் பின்வரும் தகுவிதிகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்:**

1) முன்னெப்போதும் பிரசுரிக்கப்படாத ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
2) 2017 ஜனவரி 14 இருந்து 2018 ஜனவரி 7 வரையிலான காலப்பகுதியில் பிரசுரிக்கப்பட்ட கட்டுரைகளின் இற்றை வரையாக்கப்பட்ட பதிப்புக்கள்
3) உள்ளடக்கம், தரம், அணுகுமுறை மற்றும் மனோநிலைகளை மாற்றக் கூடியவாறான திறன்.
4) எந்தவொரு ஆக்கமும் ஆயிரம் (1000) சொற்களைத் தாண்டாதிருத்தல் வேண்டும்.

ஆக்கங்கள் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் மென் மற்றும் வன்பிரதிகளாக ஒப்படைக்கப்படல் வேண்டும். அத்துடன் உள்ளடக்கம் ஆசிரியரது சொந்த ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தக்கூடிய கூற்றொன்று உள்ளடக்கப்படல் வேண்டும். முன்பு வெளியிடப்பட்ட ஆக்கங்களின் இற்றை வரையாக்கப்பட்ட பதிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆக்கத்தின் பிரதியொன்றும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலும், சமர்ப்பிக்கப்படும் போது, பெயர் மற்றும் தொடர்புகொள்ளக் கூடிய விபரங்களும் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

mnircallforarticles@gmail.com எனும் மின்னஞ்சலினூடாகவோ, அல்லது ‘செயலாளர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு, இல. 34, நாராஹேன்பிட்ட வீதி, நாவலை’ எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறோ ஆக்கங்களை அனுப்பி வைக்க முடியும். ஆக்கங்களை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், ‘தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க விருது 2018 இற்கான ஆக்கங்கள் எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

**செயலாளர்**
**தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு**
**இல. 34, நாராஹேன்பிட்ட வீதி, நாவலை.**
**தொலைபேசி - 011 280 6352**
**தொலைநகல் - 011 280 6530**
**மின்னஞ்சல் - mnircallforarticles@gmail.com**

(C/31741)

# TALENT SEARCH 2018

*For music lovers of any age*

ST. JOHN'S COLLEGE JAFFNA · CEYLON — YMCA JAFFNA

**Talent Search 2018**
**conducted by the Western Music Society of St. John's College Jaffna, in partnership with YMCA Jaffna, and organized by the Talent Search 2018 Committee.**




PERFORMANC 30TH APRIL 2018

To identify Talent and to Develop Musical Ability in Jaffna
To Promote Western Music and Sri Lankan Music
(Both Tamil & Sinhala Songs)

| Juniors | Intermediates | Seniors | Open |
|---|---|---|---|
| Gr.1-5 | Gr.6-9 | Gr.10 to A/L | Age 20 & above |

**Western**
Country, Pop, Classical
Jazz, Gospel, Blues
Calypso, Rock etc.

**Sri Lankan Originals**
Tamil - பொப்பிசை, மெல்லிசை,
ஈழத்து திரையிசைப் பாடல்கள்
Sinahal / English

**Instrumental**
Piano, Guitar, Violin,
Trumpet, Drums,
etc,

**Western Dance**

- யாழ்ப்பாணத்தில் இசைத்திறமையை அடையாளம் கண்டு இசைத்திறனை விருத்திசெய்வதற்கு மேலைத்தேய இசை மற்றும் சிறிலங்கா இசையை (தமிழ் மற்றும் சிங்களபாடல்கள்) முன்னேற்றுவதற்கும் விரையுங்கள்!!!
- விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்:
  சென்.ஜோன்ஸ் கல்லூரி அல்லது வை.எம்.சி.ஏ (யாழ்ப்பாணம்)
  வார நாள்களில் காலை 8.00 மணிமுதல் மாலை 3.30 வரை.
  விண்ணப்ப முடிவுதிகதி: 2018.02.02
- ஆரம்ப தெரிவுகள்: 2018 மார்ச் மாதம் 1ம், 2ம், 3ம் திகதிகள்
  அரையிறுதி தெரிவுகள்: 2018 ஏப்ரல் 19ம், 20ம், 21ம் திகதிகள்
  இறுதித் தெரிவுகள்: 2018 ஏப்ரல் 27ம், 28ம் திகதிகள்
  இறுதி நிகழ்வு: 2018 ஏப்ரல் 30



(C 31685)(10)


**இலவச பயிற்சிப்பட்டறைகள் போட்டிகளுக்குப் பதிவு செய்பவர்களுக்கு நடத்தப்படும்**

**மேலதிக தகவல்களுக்கு**
**திரு. என்.ஜே.வை.அருள்ராஜ்**
**அவர்களை தொடர்புகொள்ளவும்**
**0774356480**

**அதிபர்,சென்.ஜோன்ஸ் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**
**தலைவர்,**
**வை.எம்.சி.ஏ - (யாழ்ப்பாணம்)**

**COMMEMORATING THE 195TH ANNIVERSARY OF ST JOHN'S COLLEGE JAFFNA**

# வேலைவாய்ப்பு



யாழ் நகரில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

**1) வரவேற்பாளர்கள்**
(ஆண் / பெண் இருபாலாரும்.
தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழி தேர்ச்சி விரும்பத்தக்கது.)

**2) சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்**
(முன் அனுபவம் விரும்பத்தக்கது.
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

**3) முகாமைத்துவ உதவியாளர்கள்**
(ஆண் / பெண் இருபாலாரும். கணினி துறையில் அனுபவம்)

ஆர்வமுள்ளவர்கள் இன்று 10.01.2018 புதன்கிழமை உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம்தரவும்.

## உதயன் பணிமனை

**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

(IN 5309)(10)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மண்ணில் 30.03.1930 — விண்ணில் 11.12.2017

## அமரர் கதிரேசு தையல்நாயகி

எமது குடும்பத்தலைவியாய் வாழ்ந்து வழிகாட்டி எம்மை அரவணைத்து அன்பு காட்டி வாழ்ந்த அன்புத் தாயாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி வாயிலாகவும், துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும், மலர்வளையங்கள் மூலமாகவும் துயர் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் மற்றும் உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், நேரில் வந்து பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (10.01.2018) புதன்கிழமை ஆடியபாத வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள லக்சுமி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*அன்னாரின் ஆத்மாசாந்தியடைய பிரார்த்திப்போமாக*

**72/ 7 பனிக்கர் ஒழுங்கை,**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

(CS 12643) (4.17)

## மைத்திரி...

முறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை வெளியாகியுள்ள நிலையில் இந்த விவகாரத்தில் முதன்மை சூத்திரதாரியாகக் கருதப்படும் ரவி கருணாநாயக்க அரச தலைவர் மைத்திரியைச் சந்தித்துள்ளமை அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை அடுத்த கட்ட நடவடிக்கைக்காக சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. குற்றவாளிகளுக்கு மன்னிப்புக் கிடையாது என்ற நிலைப்பாட்டிலிருந்த நான் ஒருபோதும் பின்வாங்க மாட்டேன். உரியவகையில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும். குற்றச்சாட்டுக்குள்ளாகி பதவி துறந்துள்ளவர்களுக்கு மீண்டும் பதவிகளை வழங்குவதிலும் கருணை காட்டப்படாது என்று அரச தலைவர் இந்தச் சந்திப்பில் திட்டவட்டமாக அறிவித்துள்ளார் என்று அறியமுடிகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பிணைமுறி மோசடி தொடர்பான அரச தலைவர் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை நிராகரித்துள்ள ரவி கருணாநாயக்க, தம் மீது போலிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ந-5)

## தசநாயக்க...

னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க உட்பட அறுவருக்கும் கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று கடும் நிபந்தனைப் பிணை வழங்கியது.

தலா ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணையும், 10 இலட்சம் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணை வழங்கியதுடன், சரீரப் பிணையாளர்கள் மூவரில் ஒருவர் அரச அதிகாரியாகவும் ஒருவர் உறவினராகவும் இருக்கவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது.

சாட்சியாளர்களுக்கோ அல்லது புலனாய்வு அதிகாரிகளுக்கோ எந்தவித அச்சுறுத்தலும் விடுக்கக்கூடாது என்றும், அவ்வாறு ஏதும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றால் வழக்கு முடிவடையும் வரை விளக்கமறியலில் வைக்கப்படுவர் என்றும் உத்தரவிடப்பட்டது. வாராந்தம் சனிக்கிழமைகளில் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரையான காலப்பகுதிக்குள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகவேண்டும் என்றும் கட்டளையிடப்பட்டது.

மாணவர்கள் கடத்தலுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின்பேரில் கடற்படையின் முன்னாள் பேச்சாளர் டி.கே.பி.தசநாயக்க உட்பட எழுவருக்கு எதிராக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு, கோட்டை நீதிவான் நீதிமன்றத்தால் அறுவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் தமக்குப் பிணை வழங்குமாறு கோரி, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மீளாய்வு மனு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மணிலால் வைத்தியதிலக்க முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த மூத்த அரச சட்டத்தரணி ஜானக சில்வா, குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரின் இறுதி விசாரணை அறிக்கைகள் நாளை (இன்று) கிடைக்கப் பெறும் என்று தமக்குத் தகவல் கிடைத்துள்ளது என்று அறிவித்தார்.

சந்தேகநபர்கள் அறுவரில் தர்மதாஸ, கித்சிறி ஆகிய சந்தேக நபர்கள் தவிர ஏனையோரை விடுவிக்க குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஆட்சேபனை தெரிவித்திருந்தாகவும் குறிப்பிட்டார். குற்றப் புலனாய்வுப் பிரிவின் முதன்மை புலனாய்வு அதிகாரி விக்கிரமசூரிய என்பவருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் கொழும்பு முதன்மை நீதிவான் நீதிமன்றத்தில் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

பஸ்நாயக்க முதியன்சலாகே விஜயகாந்தன் என்பவர் ஏற்கனவே 4 முறை வாக்குமூலம் வழங்கியிருந்தார். கடந்த டிசெம்பர் 22ஆம் திகதியன்று சட்டத்தரணி உதய கம்மன்பிலவுடன் முன்னிலையாகி நீதிவானிடம் வாக்குமூலம் வழங்க விருப்பம் தெரிவித்து கடந்த ஜனவரி 2ஆம் திகதி இரகசிய வாக்குமூலம் வழங்கியிருந்தார் என்று குறிப்பிட்ட அரச சட்டத்தரணி ஜானக, 5 வருடங்களின் பின்னர் இவ்வாறு சாட்சியாளர் மாறியுள்ளமை அசாதாரணமானது என்று குறிப்பிட்டார்.

லெப்டினன்ட் கொமாண்டர்களான தசநாயக்க, ரணசிங்க ஆகியோர் இதுவரை கடற்படையால் பணிநீக்கமோ இடைநிறுத்தமோ செய்யப்படாதவர்கள் என்பதால் அவர்களுக்குப் பிணை வழங்கினால் தங்களுக்குக்கீழ் உள்ள அதிகாரிகளை அவர்கள் அச்சுறுத்தக்கூடும் என்றும், மேற்குறிப்பிட்ட காரணங்கள் கவனத்தில் எடுக்கப்படவேண்டும் என்றும் பிணை வழங்க தமது ஆட்சேபனையையும் வெளியிட்டார்.

பிணை மனுதாரர்களாக, வழக்கின் சந்தேகநபர்கள் அனைவர் சார்பிலும் வாதிட்ட அரச தலைவர் சட்டத்தரணி அனில் சில்வா, சிறைச்சாலைக்குள் இருந்து கொண்டு உயிர் அச்சுறுத்தல் விடுத்தார்கள் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் யார் வேண்டுமானாலும் அச்சுறுத்தல் விடுத்திருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

2017ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று குற்றப்புலனாய்வுதிணைக்களத்தினர் அறிவித்திருந்தபோதும் அதன் பின்னர் விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டிய அவர், முதலாவது சந்தேகநபரான சம்பத் முனசிங்க அந்தக் காலப்பகுதியில் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததையும் சுட்டிக்காட்டினார்.

நாளை (இன்று) விசாரணை அறிக்கைகளை சட்டமா அதிபருக்கு வழங்குவோம் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 2ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் அறிவித்திருந்தனர் என்றும் குறிப்பிட்ட அனில் சில்வா, அதன் பின்னர் குற்றப்பத்திரம் தாக்கல்செய்து சாட்சிய விசாரணையை நடத்துமாறும் அதுவரை அனைவருக்கும் கடும் நிபந்தனைகள் கொண்ட பிணையாயினும் வழங்க வேண்டும் என்றும் கோரி நின்றார்.

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த ஒருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதால் ஏனையோரை விளக்கமறியலில் வைத்திருப்பது அசாதாரணமானது என்று அறிவித்த நீதிபதி, கடந்த 2ஆம் திகதியன்று விசாரணைகள் முடிவடைந்துள்ளன என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அறிவித்திருப்பதாலும் மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளில் பிணை வழங்குமாறு உத்தரவிட்டார். (ந-5)


ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 09.01.2018 | 2235 | நீலம் |

இடபம்

வெற்றி இலக்கங்கள்: 22 38 49 50

வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 7,288,032/=

2018.01.12 ம் திகதி ......வெள்ளிக் கிழமை ......சிவப்பு...... நிற டிக்கட்டுக்களாகும்

வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk

SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919



## கட்டடம் வாடகைக்கு தேவை

சபையின் நவீன கற்பக விற்பனை நிலையம் அமைப்பதற்காக கட்டடமானது யாழ். நகர் மற்றும் திருநெல்வேலி ஆகியவற்றினை அண்டிய பகுதிகள் அண்மித்த பகுதிகளில் வாகன தரிப்பிட வசதி கொண்டமைந்ததாக 2400 சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட கட்டடம் வாடகைக்கு தேவைப்படுகின்றது.

எனவே வாடகைக்கு கட்டடத்தை கொடுக்க விரும்புகின்றவர்கள் எதிர்வரும் 15.01.2018 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியவாறு தங்கள் விலை மனுக்களை கீழ்குறிப்பிடப்படும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தலைவர்**
**பனை அபிவிருத்திச்சபை, தேசிய வீடமைப்புச்செயலகம்**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**

(c/5452)(8)





# ஓய்வுகாலம் சிறக்க வாழ்த்துகிறேன்




| | |
|---|---|
| பெயர் | : அருணாசலம் அகிலதாஸ் |
| தந்தை | : கனகசபை அருணாசலம் |
| தாய் | : அருணாசலம் மகேஸ்வரி |
| பிறப்பு | : 1958.01.08 |
| பிறப்பிடம் | : ஒட்டுவெளி, மிருசுவில். |
| மனைவி | : நளினி அகிலதாஸ் (முதன்மை ஆசிரியர் யாழ் கல்வி வலயம்) |
| பிள்ளைகள் | : அ.புருசோத்தமன் (B.Sc Engineer) சிங்கப்பூர்<br>அ.விமோசன் (B.Sc Engineer)<br>(மொறட்டுவ பல்கலைக்கழகம் இறுதியாண்டு மாணவன்)<br>அ.சங்கீதன் யா/யாழ் இந்துக்கல்லூரி (கணித பிரிவு க.பொ.த உயர்தரம்) |
| கல்வி | : ஆரம்பக்கல்வி : யா/ஒட்டுவெளி அ.மி.த.க பாடசாலை |
| இடைநிலைக்கல்வி | : யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம் |
| உயர்கல்வி (கலைமாணி) | : யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் |
| கல்வி டிப்ளோமா | : யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் |
| கல்வி முதுமாணி | : யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் |
| சேவை விவரம் | : ஆசிரியர் பு/கற்பிட்டி அல்அல்ஙா மு.ம.வி தேசிய பாடசாலை 1984<br>ஆசிரியர் பு/கற்பிட்டி காரைதீவு ம.வி 1988 – 1989<br>ஆசிரியர் யா/உசன் இராமநாதன் ம.வி 1989 – 1991<br>உப அதிபர் யா/உசன் இராமநாதன் ம.வி 1991 – 1994<br>அதிபர் யா/கச்சாய் அ.த.க.பாடசாலை 1994 – 2000<br>அதிபர் யா/கோப்பாய் ம.வி 2000 – 2006<br>அதிபர் யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி 2006 – 2007<br>அதிபர் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 2007 – 20012<br>பிரதிக்கல்விப் பணிப்பாளர் (தென்மராட்சி வ.) 2012 – 2013<br>பிரதிக்கல்விப் பணிப்பாளர் (தீவகம்) 2013 – 2013<br>கோட்டக்கல்விப் பணிப்பாளர் (நல்லூர் கோட்டம்) 2014–2016<br>பிரதிக்கல்விப் பணிப்பாளர் (யாழ்ப்பாணக் கல்வி வலயம்)2016–2018 |

**திரு. அருணாசலம் அகிலதாஸ்**
**(பிரதிக் கல்வி பணிப்பாளர்)**
B.A, Dip.in Edu, Med, SLPS I, SLEAS III

போ.நற்குணேந்திரன் (லோகன் )- கனடா.
கொக்குவில் இந்துக்கல்லூரி (பழைய மாணவன்)

## தடம்புரண்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கோரச் சம்பவம் நேற்று கிளிநொச்சி, முழங்காவில் கண்ணண் ஆலயப் பகுதியில் நடந்துள்ளது. முழுங்காவில் தேசிய பாடசாலையில் கல்வி கற்கும் உதயகாந்தன் பிரசாந்த் (வயது -15) என்ற மாணவனே உயிரிழந்தான்.

பிரசாந்த் வழமை போன்று தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்றுவிட்டு நண்பர்களுடன் வீடுதிரும்பியபோதே இந்த அசம்பாவிதம் நடந்துள்ளது. நண்பர்கள் தப்பிக்கொள்ள பிரசாந்த் வாகனத்துக்குக் கீழ் சிக்கிக் கொண்டுள்ளான்.

தடம் புரண்ட வாகனத்தைத் தூக்குவதற்கு வேறொரு ஜேசிபி வரவழைக்கப்பட்டு தூக்கப்பட்டது. அதன் பின்னரே மாணவன் மீட்கப்பட்டான் என்று தெரிவிக்கப்பட்டது.

"ஜேசிபியின் சாரதியும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். அவர் மருத்துவமனையில் பொலிஸாரின் பாதுகாப்பில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கான சிகிச்சைகளின் பின்னர் கைது செய்யப்படுவார். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன." என்று முழங்காவில் பொலிஸார் தெரிவித்தனர்.

(ற-21,8,6)


TVS



இப்பண்டிகைக் காலத்தில் TVS SCOOTERS கொள்வனவு செய்து
ரூபா. 18,000 வரையான விசேட விலைக்கழிவுகளை பெற்றிடுங்கள்

TVS SCOOTERS




நிபந்தனைகள் உண்டு

மாவட்டரீதியில்

| | |
|---|---|
| கொழும்பு, களுத்தறை | - 0774 636 345 |
| குருணாகல், புத்தளம் | - 0773 580 841 |
| பதுளை, மொனராகல | - 0772 057 660 |
| காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி | - 0777 283 095 |
| அநுராதபுரம், பொலன்னறுவை, மாத்தளை | - 0773 215 746 |
| கம்பஹா, கேகாலை, கண்டி, நுவரெலியா | - 0773 497 641 |
| அம்பாறை, மட்டக்களப்பு | - 0773 748 155 |
| யாழ்பாணம், கிளிநொச்சி | - 0777 782 739 |
| முல்லைத்தீவு, மன்னார், வவுனியா | - 0773 358 305 |
| திருகோணமலை | - 0777 419 411 |

துரித எண்
0114 600 500

www.tvslanka.lk
www.facebook.com/TVSLanka.lk

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் க.பொ.த. உயர்தர கலைப்பிரிவில் 3A திறமைச்சித்தி பெற்ற

**செல்வன் டிலிப் ரஞ்சன் நிஷாந்தன்**

மற்றும்

▾ வி.கொலஸ்ரிக்கா A2B ▾ ஸ்.அனிஸ்ரன் 3B
▾ சி.சசிகரன் ABC ▾ இ.சிந்துஜானி ABC
▾ அ.றஜிதா 2BC ▾ ஸ்.மனோஜ் A2C
▾ பே.பேடின்பெனோ B2C
▾ பி.மயூரன் BSC ▾ ச.றெபேக்கா B2C
▾ செ.செந்தூரன் BSC ▾ செ.நிலக்ஷினி B2C

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்

பாடசாலை சமூகம், யா/புனிதசாள்ஸ் ம.வி, யாழ்ப்பாணம்.

## Holy Cross School of Health Science

**Diploma in Nursing (02 Years)**
**Certificate in Nursing (09 Months)**
**Geriatric Nursing (09 Months)**

க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி அடைந்தவர்களும் க.பொ.த சாதாரணதரம் கற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்ப முடிவு திகதி 15.02.2018

அனுப்ப வேண்டிய முகவரி
திருச்சிலுவை தாதியர் பாடசாலை
இல 767/4 கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

077 115 9391
021 222 2423

(CS 12742) (14.17)

## சவுதி அரேபியா வேலைவாய்ப்பு



# சாரதிகள் - 78
## (கனரக வாகனம்)

**சம்பளம் - SR 1800/-** 1 SR = Rs. 40/-
(Subject to change accorcing to exchange rate)

வீதிமுறைகளும், நிபந்தனைகளும்:

- உணவு,தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்.
- 2 வருட ஒப்பந்த காலம்
- நாளொன்றுக்கு 8 மணத்தியாலமும், வாரத்தில் 6 நாட்கள் வேலை
- தகுதிகாண் காலம் 3 மாதம்
- ஒப்பந்த கால முடிவில் நாடு திரும்ப விமானப்பயண டிக்கட் இலவசம்.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டத்திற்கு உட்பட்டது.

SLBFE APPROVED CHANGES : 1100877
AL1316/Advt:/05/17

தொடர்புகளுக்கு:
**0112681212 | 0112684433 | 0777529529**

**கிவ் பி வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்.**
இல:6, டாக்டர் மிலினா சுமதிபால மாவத்தை, புஞ்சிபொறளை, கொழும்பு -10. அரச அனுமதிப்பத்திர பதிவிலக்கம்: 1316

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 23 . 01 . 1949



மறைவு 13 . 12 . 2017

கடந்த 13.12.2017 புதன்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

**திருமதி நவரத்தினசோதி சுப்பையா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.01.2018) புதன்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் 12.01.2018 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் வீட்டுக்கிருத்தியம் எமது இல்லத்திலும் நடைபெறவுள்ளன. இந்தக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைப்பதோடு எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி வாயிலாகவும், மலர் வளையம், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மற்றும் பல வழிகளினும் உதவி புரிந்து ஆறுதல் கூறியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

கட்டுவன் மேற்கு,
தெல்லிப்பழை.

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் பரமநாதன்**
(செயலாளர், யாழ்.மாவட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியம்)

உள்நாட்டு யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் தஞ்சமடைந்து சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்த எம் மக்களின் துயர் துடைக்கவென இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தினை ஸ்தாபித்து ஆரம்பம் முதல் இறுதிவரை அதன் செயலாளராகச் சிறப்பாகப் பணியாற்றியதோடு மக்கள் நலன் சார்ந்த பல்வேறு அமைப்புக்களில் பொறுப்பான பதவிகளை வகித்து எம்மக்களுக்காக கடைசி மூச்சுவரை அரும்பாடுபட்டு உழைத்த தியாகச் செம்மலின் பணிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்து அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ். மாவட்ட இந்து அமைப்புக்களின் ஒன்றியம்**
**நல்லை ஆதீனம் நல்லூர்.**

(cs 12751)(12-17)

## வேலைக்கு ஆள் தேவை

அலுவலக பணிக்கு A/L படித்த கணினி அறிவுள்ள பெண் தேவை. உங்களது சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும்.

**நேர்முகத்தேர்வு 11.01.2018 காலை 10.00 மணிக்கு**

**இடம்:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோயில்**
**81, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 2772**

(cs312768)(12-17)

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

புறொய்லர் சுத்தம் செய்யப்பட்டு 1Kg 450/= மட்டும். கூடுதல் கொள்வனவுக்கு விசேட விலைக்கழிவு.

**U.S.A பாம்**

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. T.P: 077 868 9500

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
## சபைநிதி

01 வலிகாமம் வடக்குபிரதேச சபை. **சபை நிதியினைக்** கொண்டு கீழ்க்காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.

02 **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) வடமாகாணம்.** தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வீதிப்புனரமைப்பு வேலைகளுக்கு கோருகின்றார்.

03 தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது எனினும் **பொது நிதிச் சுற்றறிக்கை 4/2016(1)** இற்கமைவாக இவ் விலைமனுக்கோரலானது வடமாகாணத்துக்குள் தகுதியுடைய வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளைக் கொண்டுள்ள கேள்வியாளருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

04 கேள்விதாரர்கள் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன். வீதி புனரமைப்பிற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயும் இருத்தல்வேண்டும்.

05 தேவையான தகைமைகள். கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

06 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) தொலைபேசி:- 0212241130. தொலைநகல்:- 0212243688 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் 10.01.2018 ஆம் திகதியிலிருந்து 01.02.2018 வரை காலை 09.00 மணிமுதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.

07 ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்கு பிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் இடத்திலிருந்து 10.01.2018ஆம் திகதியிலிருந்து 01.02.2018 வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

08 கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர். பெறுகைக்குழு. வலிகாமம் வடக்குபிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) எனும் முகவரிக்கு 01.02.2018ஆம் திகதி 14.30மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்தியகேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

09 கேள்வியானது கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து 63 (அறுபத்தி மூன்று-05.04..2018) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.

10 கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும்தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு | செல்லுபடி யாகும் காலம் |
| 01 | NP/14/41(14)/ 05/CF 01/ 2018 | மாணிக்கப் பிள்ளையார் வீதி புனரமைப்பு வேலை | 1.480 | 03 மாதம் | C9 (வீதி புனரமைப்பு) | 15.000.00 | 02.05.2018 |
| 02 | NP/14/41(14)/ 05/CF 02/ 2018 | 8ஆம் கட்டை வீதி புனரமைப்பு | 2.605 | 03 மாதம் | C8 (வீதி புனரமைப்பு) | 26500.00 | 02.05.2018 |
| 03 | NP/14/41(14)/ 05/CF 03/ 2018 | கல்லாரை உப்பனளவை வீதி புனரமைப்பு | 0.750 | 03 மாதம் | C9 (வீதிப் புனரமைப்பு) | 7600.00 | 02.05.2018 |
| 04 | NP/14/41(14)/ 05/CF 04/ 2018 | பெரியகிணற்றடி இணைப்பு வீதி புனரமைப்பு வேலை | 0.431 | 03 மாதம் | C9 (வீதி புனரமைப்பு) | 4500.00 | 02.05.2018 |
| 05 | NP/14/41(14)/ 05/CF 05/ 2018 | மாவை கொல்லங்கலட்டி இணைப்புவீதி | 3.074 | 03 மாதம் | C8 (வீதி புனரமைப்பு) | 31,000.00 | 02.05.2018 |

11 கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 19.01.2018 ஆம் திகதி பி.ப.14.30 மணிக்கு வலிகாமம் வடக்குபிரதேச சபை. காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி) அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

தலைவர்.
உள்ளூர் அதிகார பெறுகைச்சபை.
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.
காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)
10.01.2018

(C 31687)(10)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2017 ஆம் ஆண்டு
க.பொ.த உயர்தர பரீட்சையின்
**கணித பிரிவில் 3A** சித்தியைப் பெற்று
முல்லைத்தீவு மாவட்டத்தில் முதன் நிலையை
அடைந்து (அகில நிலையில் 72)
பொறியியல் பிரிவிற்கு தெரிவாகி பெற்றோருக்கும்,
பாடசாலைக்கும், சமூகத்திற்கும் பெருமை
சேர்த்துள்ள

**மு/யோகபுரம் மகா வித்தியாலயத்தில்**
கல்வி கற்ற மாணவன்

## வசந்தராஜன் சாரங்கன்

அவர்களை அகமகிழ்ந்து பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் அவர் பல உயர்வைப் பெற்று சிறப்படைய சீதளாம்பிகை சமேத சிவபுரநாதரை வேண்டுகின்றோம்.



*வாழ்த்துவோர்:*
**அப்பம்மா, அத்தைமார், சித்தப்பாமார்,
மாமாமார், சித்தி, மச்சான்மார்...
சிவபுரம், வவுனிக்குளம்.**

(C 12755)(4.17)

# 10ஆம் ஆண்டு நினைவலைகள்



## சிவஸ்ரீ ப.காயாரோகண சிவக்குருக்கள்

(யாழ்.போதனா வைத்தியசாலை
ஸ்ரீஞானவைரவர்
கோயில் அர்ச்சகரும் பிரதம குருவும்)




குடும்பத்தின் ஒளி விளக்காய் எம் வாழ்வில்
ஒளியேற்றிய நீங்கள்
கற்கைநெறி தந்து கண்ணியமாய் வாழவைத்தீர்கள்
வாழும் முறைகளை வழிகாட்டி நின்றீர்கள்
வாழ்க்கைத்துணை தன்னை வழி சமைத்து தந்தீர்கள்
மருமக்கள் என்ற போதும் மக்களாக கொண்டீர்கள்
உறவிலே திருவாய் நின்ற உத்தமர் நீங்கள் அன்றோ!
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

**குடும்பத்தினர்.**

(AJA/12684)
(11.17)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## திரு. சிவபாதசுந்தரம்பிள்ளை நவநீதன் (SLEAS III)



*உதவிக்கல்விப்பணிப்பாளர்
(கணிதம்)
வலயக்கல்வி அலுவலகம் -
மன்னார்.*

Best Wishes

**சிகரம் எட்ட சிந்தித்த வேளை
சிறிய பாதங்களின் முதல் முயற்சியாய்
ஏணி போன்று ஏற்றம் கண்டிட்ட உனைப்
போற்றி வாழ்த்துகின்றோம் நண்பர்கள் – நாம்
கற்பவன் மனதை நுட்பமாய் நன்கறிந்து
தொகுத்து நீ வழங்க நோக்காது இருந்த
மாணவனையும் நோக்க வழிகாட்டியே
ஆசிரியப் பணியதனில் ஆணிவேராய் நீ அமர்ந்தாய்
அகன்ற உலகினில் தேறாத மாணவம்
இல்லையென்று இல்லாத தேற்றம் கொண்டு
நிறுவல் சமன்பாடுகளில் நிலை நிறுத்தி பல்வகைக்
கோணங்களில் மாணவர் அறிவுகளைத் தீட்டினாய்
முயற்சி எனும் துடுப்பெடுத்து படிப்படியாய்
ஆசிரியராய் அதிபராய் ஆசிரிய கல்வியியலாளர் சேவை இலங்கைக்கல்வி நிர்வாக சேவைதனை எட்டி உதவிக்கல்விப்பணிப்பாளராய் மன்னார் மண்ணில் கணித பாடத்தின் முடிசூடா மன்னவனை வாழ்த்துகின்றோம்.**

Congratulations!



(cs/12778)(8)

**மூன்றாம் அணி ஆசிரிய நண்பர்கள்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.**


9வது யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

JITF 2018
9TH JAFFNA INTERNATIONAL TRADE FAIR

50%

26 27 28 ஜனவரி JANUARY
10.00 am - 8.00 pm
யாழ்ப்பாணம் மாநகரசபை மைதானத்தில்
Municipal Grounds - Jaffna

- வடக்கில் இடம்பெறுகின்ற மிகவும் விரிவான மற்றும் இலக்கு நோக்கிய ஒரு கண்காட்சி
- முக்கிய அதிகாரிகளுடன் நேரடி சந்திப்புக்கள் மற்றும் உரையாடல்
- சராசரியாக எமது பார்வையாளர்களில் 70% ஆனோர் கண்காட்சியாளர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுகின்றனர்

- மோட்டார் வாகனத் தொழிற்துறை மற்றும் உபகரணம்
- உணவு, பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை
- பிரயாணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை
- நுகர்வோர் பொருட்கள்
- ஆடைத் தொழிற்துறை
- விவசாய தொழிற்துறை
- நிர்மாண தொழிற்துறை
- நிதியியல் சேவை நிறுவனங்கள் மற்றும் பல


ORGANIZED BY LECS LANKA EXHIBITION & CONFERENCE SERVICES (PVT) LIMITED
IN ASSOCIATION WITH CCIY
MAIN SPONSOR S-lon

காட்சிக்கூட பதிவுகளுக்கு அழைக்கவும்
+94 71 7488107

jitf.lk www.jitf.lk

OFFICIAL PARTNERS
Sri Lanka Telecom Mobitel · ANTON · RUHUNU FOODS · INSEE · DAN · Mobil · THE HARVEST


# மரண அறிவித்தல்

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 25 |  | 07 |
| 10 | | 01 |
| 1951 | | 2018 |

## கந்தப்பு சிவனேசன்

காரைநகர் மாப்பாணவூரியைப் பிறப்பிடமாகவும் காரைநகர், பத்தர்கேணியடியை வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு சிவனேசன்(இளைப்பாறிய உத்தியோகத்தர், லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்) 07.01.2018 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - புவனேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற M.A.கந்தையா - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் திருமதி கமலாம்பிகை (ஓய்வு பெற்ற உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு) இன் அன்புக் கணவரும் விமலராணி, ஜெயராணி,சிறீராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் இராமநாதன், தர்மபாலன், மகிந்த அத்துக்கொறள ஆகியோரினதும் தெய்வநாயகி, Dr.தேவகுஞ்சரி, புவனேஸ்வரி, அன்னலக்ஷ்மி, பங்கயற்செல்வி, செந்தில்நாதன், காலஞ் சென்ற தெய்வேந்திரன் மற்றும் தெட்சணாமூர்த்தி ஆகியோரினதும் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், தியாகராஜநாதர் மற்றும் வீரசிங்கம், உருத்திரன், கிருஷ்ணகுமாரி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகலனும் சுதர்சினி, சுபாஷினி, சுகந்தன், யுவராஜ், லக்ஷ்மன், ரவீந்திரா, குகன், காயத்திரி, ஹரி ஆகியோரின் அன்பு மாமனாரும் சேந்தன், மயூரன், அம்பிகை, அமலன், லக்ஷ்மி, கிருஷ்ணா, ஐங்கரன், கேசவன், கலைமகள், செந்தூரன், அபிராமி, தேவகி ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2018) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்கு காரைநகர் பத்தர்கேணியடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி
(கமலாம்பிகை சிவனேசன்)**

(CS 12740) (14)

**0771 500 069 / 021 225 2213**

# உடல் ஆரோக்கியத்தை கெடுக்கும் பீட்சா



இந்தக் காலத்திலோ அமர்ந்த நிலையிலே நீண்ட நேரம் மனதளவில் உழைப்பவர்கள், பீட்சாவை முக்கிய உணவாகச் சாப்பிட்டுவிட்டு, பல நோய்களுக்கு வழியமைக்கின்றனர்.

பீட்சா பல மணிநேரத்துக்குப் பசியை அடக்குமே? நிச்சயமாக, அடுத்த வேளைக்கான பசி உணர்வையும் சேர்த்து அடக்கி, செரிமானம் சார்ந்த நோய்களை உண்டாக்கும். பசியை அடக்குவதோடு சேர்த்து மலத்தையும் அடக்கும். மலத்தை இளக்கும் வகையிலான உணவுகளை சாப்பிடப் பழகிவிட்ட நமக்கு, மலத்தை குடலிலேயே கட்டிப்போடும் பீட்சா, நமது மரபுக்கு அந்நிய உணவுதானே!

பெரும்பாலான இளைஞர்கள் நினைத்துக் கொண்டிருப்பதைப்போல, மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, கொஞ்சம் புரதச்சத்து கொடுக்கும் சமச்சீரான உணவு அல்ல பீட்சா! அனைத்தையும் அளவுக்கு மீறிக் கொடுக்கும் சமச்சீரற்ற உணவு.

பிரத்யேகச் சுவையூட்டிகள், விரைவாகக் கெடாமல் பாதுகாக்கப் பயன்படும் ரசாயனங்கள், உப்புகள், குளிர்பதனப் பெட்டியில் பாதுகாக்கப்பட்டு சேர்க்கப்படும் அசைவத் துண்டுகள், மீண்டும் மீண்டும் சூடுபடுத்தி வெளிவரும் பீட்சாவில் நடைபெறும் வேதியியல் மாற்றங்கள், பீட்சா தயாரிக்கத் தேவைப்படும் பிளீச் செய்யப்பட்ட மாவு வகைகள்... இவை அனைத்தும் சேர்ந்து நமது உடலுக்குள் நடத்தும் களேபரத்தை உணர நீண்ட நாள்கள் காத்திருக்க வேண்டியதில்லை.

## தேவை

யாழ் நகர்ப் பகுதியில் இருந்து 5km இக்கு உட்பட்ட பிரதேசத்தில் களஞ்சியப்படுத்தல் தேவைக்கு கட்டடம் வாடகைக்கு தேவை. கட்டடத்தின் கீழ்த்தளமாகவும் 500 சதுர அடிக்கு மேற்பட்ட விஸ்தீரணமாகவும் இருத்தல் வேண்டும். வீடு, கடை எனினும் தொடர்புகொள்ளவும்.

077 723 2385

## பணிப்பெண் தேவை

கொக்குவில் வீட்டில் தங்கி இருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. நாள்தோறும் வந்து போவோரும் விண்ணப்பிக்கலாம்.

077 187 7754

## உங்கள் பழமை வாய்ந்த பொருள்கள்

புதிய அல்ல பாவித்த மாணிக்கக் கற்கள் இரத்தின கற்கள், கைகடிகாரம், பழமை வாய்ந்த சிலைகள், தகுந்த விலைக்கு வாங்கும் ஒரே ஸ்தாபனம்.

உடனடித் தொடர்புகளுக்கு. 071 059 9971

## யா/ தையிட்டி கணேச வித்தியாசாலை காங்கேசன்துறை

### பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம்

இடம் : வித்தியாசாலை மண்டபம்
காலம் : 13.01.2018 சனிக்கிழமை மு.ப 9.30 மணி

பழைய மாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

தலைவர். (அதிபர்)

## யாழ்.மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கம் (வ-து) ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் - 2018

மேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தை 18.02.2018 அன்று நடத்தத் தீர்மானித்திருப்பதனால் அங்கத்தவர் பிரேரணைகள் இருப்பின் தங்கள் பிரேரணைகளை 01.02.2018 வியாழக்கிழமைக்கு முன் கிடைக்கக் கூடியதாக சங்கக் காரியாலய முகவரிக்கு செயலாளர் என முகவரியிட்டு அனுப்பி வைக்கவும். அத்துடன் அங்கத்தவர்களது பிள்ளைகள் 2017ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை, பல்கலைக்கழக அனுமதி பெற்றிருப்பின் அவற்றின் விவரங்களினையும் சங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்

செயலாளர்
க.செல்வச்சந்திரன்.
10.01.2018

## கடை விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு



யாழ்.நகருக்கு அருகில் 3 கடைகள் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உள்ளன.

071 059 9971

## மரண அறிவித்தல்

### திருமதி கலாவதி பாக்கியநாதன்



அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கலாவதி பாக்கியநாதன் 06.01.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூரன் மாணிக்கம் இராசமணி மற்றும் கமலம்மா (பிரான்ஸ்) தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குலேந்திரன் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பாக்கியநாதனின் அன்பு மனைவியும் இளங்கோதுரை (பிரான்ஸ்), தினேஸ்குமார், மைதிலி (இந்தியா), அனுஷா ஆகியோரின் அன்புத் தாயும் அருந்ததி (பிரான்ஸ்), காலஞ்சென்ற துரைராஜா (SMT), நவமணி, சிவமூர்த்தி (வீடியோ கலாமணி), பத்மாவதி, தனலட்சுமி (இந்தியா), புஸ்பலதா (பிரான்ஸ்), சியாமளா (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), வேலழகன் (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்துரை, தனலட்சுமி (பிரான்ஸ்), செகசோதி, மஞ்சுளாரஜனி, காலஞ்சென்ற செல்வநாயகம், சிவபாதம், புஸ்பராசா (பிரான்ஸ்), சித்திரவடிவேல் (பிரான்ஸ்), நிமால் ஜோன் (பிரான்ஸ்), ரஜிதா (பிரான்ஸ்), சிந்து (பிரான்ஸ்), சந்திரகலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் புருசோத்தமனின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2018) வியாழக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைக்காக அச்சுவேலி வடக்கு, வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மாணிக்கம் சிவமூர்த்தி (சகோதரன்)
இராஜமாணிக்கம் கல்யாண மண்டபம்
வீடியோ கலாமினி 077 305 3080

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(C 5431/15/17)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
16 . 03 . 1937



ஆண்டவன் அடியில்
22 . 12 . 2016

### அமரர் சுப்பையா திவாகரமூர்த்தி

திதி : 10.01.2018

அப்பா என்ற அப்பழுக்கற்ற சொல்
அகராதியிலிருந்து அகன்று ஆண்டொன்றாகியது ஆயினும்
ஆறவில்லை ஆருயிர் தந்தையின் அளவில்லா இழப்பு
மண்ணில் பிறந்தவர்க்கு மரணம் நிச்சயம்தான் என்றாலும்
விதிவிலக்கு என விடுவித்திருக்கக்கூடாதா?
விடையில்லா வினாவினால் விழிகள் பனிக்க விடைகொடுத்து
விண்ணில் விண்மீனாய் வியாபித்திருக்க விடைபெறுகிறேன்.
ஆண்டவன் அடியில் ஆண்டாண்டாய்
அமைதியாய் துயில்வீர்களென்ற அற்ப ஆசையுடன்...

முத்தட்டுமடம்,
கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


குடும்பத்தினர்.

## 2ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
டொன் பொஸ்கோ
பசில் சுரேந்திரன்
(ஆட்பதிவுத் திணைக்களம்)

அன்னை மடியில்
29.12.1972

ஆண்டவன் அருகில்
10.01.2016




"உலகத்தின் கண்களுக்கு – உம்
உருவமது மறைந்தாலும்
உம் அன்பு உறவுகளுக்கு
உம் நினைவு அழியாது ஒருநாளும்"

ஈரவிழிகளுடன் இறைசித்தத்தை ஏற்று நிற்கும்
அ.டொன்பொஸ்கோ (தந்தை),
மனைவி, மகள், சகோதரன், சகோதரி.

## மரண அறிவித்தல்

### ஜெயபாலன் அக்குயனஸ் துரைசிங்கம்

(ஜெயம்)



வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவரும் கற்கோவளத்தில் வசித்து வந்தவருமான ஜெயபாலன் அக்குயனஸ்துரைசிங்கம்(ஜெயம்)அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இக்னேசியஸ் துரைசிங்கம் (சட்டத்தரணி) மாகிறேற் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் கற்கோவளம் காலஞ்சென்ற சோமசுந்தரம்செல்லப்பாக்கியம்தம்பதியரின்மருமகனும் வத்சலா (நிதி) யின் அன்புக் கணவரும் சாமினி, நிரோஜன் (கட்டார்), நிசாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற தனபாலன் (தனம்) மற்றும் குணபாலன் (குணம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ராஜ் இன் மாமனாரும் நிர்மலா (மணி), சிவகணேஸ் (கட்டார்), திருமால், கெங்காதரன் (கட்டார்), சதர்சன் (லண்டன்), நளினி (பிரான்ஸ்), கிருபா (நீர்கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் அருட்தந்தை லூயிஸ் பொன்னையாவின் மருமகனும் அருட் சகோதரிகள் லைசா, கிறேஸ், றெஜினா ஆகியோரின் பெறாமகனும் ரெனிக்சன், அனுஸ்ரன், அகாலமரணமான டனிஸ்ரா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (10.01.2017) புதன் கிழமை பி.ப. 2.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கற்கோவளம் புனித செபஸ்தியார் தேவாலயத்தில் நடைபெறும். இரங்கற்திருப்பலியைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

கற்கோவளம், பருத்தித்துறை.

(CS 12773/15/17)

## மரண அறிவித்தல்

### கந்தசாமி உதயபானு (சேகர்)



ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி உதயபானு (சேகர்) கடந்த திங்கட்கிழமை (08.01.2018) லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தசாமி (ஓய்வு நிலை ஆசிரியர்) திலகவதி தம்பதியரின் கனிஷ்ட்புத்திரனும் காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் புவனேஸ்வரி தம்பதிகளின் அன்புமருமகனும் சுதர்சினியின் அன்புக்கணவரும் சருண்யா, யோஷிகா, வேணுஜா ஆகியோரின் அன்புத்தந்தையும் குகன், மாலதி, சபேசன், உஷா ஆகியோரின் அன்புச்சகோதரரும் அகல்யா, கிருஷ்ணதாசன், நந்தினி, மகாதேவன், இரகுபதீஸ்வரன், ரெங்கநாயகி, பிரபாகரன், ஸ்ரீகௌரி, பிரபாலினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.கந்தசாமி (தந்தை)
கி.மாலதி (சகோதரி, ஓய்வுநிலை உப தபாலதிபர்)

ஏழாலை கிழக்கு,
ஏழாலை.

(cs12779)(8)

# நவஜீவன்ஸ், றேஞ்சர்ஸ் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஜன. 10
சிறி அம்பாளின் கால்பந்தாட்டத் தொடரில் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகம் மற்றும் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.
சிறிஅம்பாளின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கரணவாய் கொலின்ஸ் விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. அபாரமாகச் செயற்பட்ட நவஜீவன்ஸ் அணி 5:1 என்ற கோல் கணக்கில் பெரு வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதின. இதில் 3:1 என வெற்றி பெற்று றேஞ்சர்ஸ் அணி அரையிறுதிக்கு முன்னேறியது. (ம-108)





# உதயசூரியன் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 10
நெடுந்தீவு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்திய துடுப்பாட்டத் தொடரில் பெண்கள் பிரிவில் உதயசூரியன் அணி கிண்ணம் வென்றது.
நெடுந்தீவு மகா வித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய உதயசூரியன் அணி 5 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஜினா 19 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் வனஜா 2 இலக்குகளை வீழ்த்தினார்.
35 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வின்ஸ் அணி 5 பந்துப் பரிமாற்றங்க்ள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 15 ஓட்டங்களை மட்டும் பெற்றது. அதிகபட்சமாக நிலாஜினி 7 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் உதயசூரியன் அணியின் சார்பில் அகிலா, ஜினா ஆகியோர் தலா ஓர் இலக்கை வீழ்த்தினர். (ம-23)

# திக்கம் இளைஞர் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஜன. 10
மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் திக்கம் இளைஞர் அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் அரையிறுதி ஆட்டம் நடைபெற்றது. நாச்சிக்குடா சென்மேரிஸ் அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணி மோதியது.
முதல் பாதியாட்டத்தில் திக்கம் இளைஞர் அணியின் அரிகரன் தனக்கு கிடைத்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்தி கோலாக்க முதல் பாதியாட்டத்தில் திக்கம் இளைஞர் அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.
இரண்டாம் பாதியின் ஆரம்பத்தில் பதிலடி கொடுத்தது நாச்சிக்குடா சென். மேரிஸ். ஆனால் திக்கம் இளைஞர் அணியின் அரிகரன் மிகச் சிறப்பாக இரு கோல்களைப் பதிவு செய்து தனது அணியை முன்னிலைப்படுத்தினார். அதன் பின்னர் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணியினர் பலமுறை முயற்சித்த போதும் கோல் எதனையும் பதிவு செய்ய முடியவில்லை. ஆட்டநேர முடிவில் திக்கம் இளைஞர் அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.
(ம-422)



# கிறிஸ் லின் விலகல்

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் இருந்து கிறிஸ் லின் விலகியுள்ளார்.
ஆஸ்திரேலியக் கழகங்களுக்கு இடையிலான உள்ளூர் ஆட்டத்தில் பங்கெடுத்த போது. காலில் ஏற்பட்ட தசைப்பிடிப்பை அடுத்தே லின் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இருந்து விலகினார். கிறிஸ் லின் விலகியுள்ளதால் மக்ஸ்வெல்லுக்குவாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
(ம)

## இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் வி. கழகத்தின் 23ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த வி. கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது.

**நியூட்டன் வி.க. கால்பந்தாட்டம்**
சமரபாகுநியூட்டன்விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கலைமதி வி.கழக 'ஏ' அணியை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகஅணி மோதவுள்ளது. (ம-23)



கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயத்தில் புதிய கடினப்பந்து ஆடுகளம் இரணைமடு விமானப்படையினரால் அமைக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் கடந்த மாதத்தில் வலயக்கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வரலாற்றில் முதல்தடவையாக கடினப்பந்து துடுப்பாட்டப் பயிற்சிகள் அதிபரினதும் பழைய மாணவர்களதும் வேண்டுகோளுக்கு இணங்க கிளிநொச்சி மாவட்ட பாடசாலை துடுப்பாட்ட பயிற்சியாளரினால் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-21)

## இணுவில் இந்து, சிறிமுருகன் வென்றன

யாழ்ப்பாணம், ஜன. 10
உடுவில் பிரதேச செயலக கிரம சேவையாளர் பிரிவுக்குட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் இணுவில்இந்து விளையாட்டுக் கழக அணியும், பெண்கள் பிரிவில் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியும் சம்பியனாகின.
ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் அண்மையில் இந்த இறுதியாட்டங்கள் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் இணுவில் இந்து விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதியது. இணுவில் இந்து விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிவன் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற செற் கணக்கில் சிறிமுருகன் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)

# மீண்டும் தலைவராக மத்தியூஸ் நியமனம்

ஒருநாள் ஆட்டங்களுக்கான இலங்கை அணியின் தலைவராக மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.
சிம்பாப்வே அணி இறுதியாக இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது ஒருநாள் தொடரைக் கைப்பற்றி மிகப்பெரும் வரலாறு படைத்தது. இந்தத் தொடருக்கு மத்தியூஸ் தலைவராகச் செயற்பட்டிருந்தார். இந்தத் தோல்வியை அடுத்து அவர் தனது பதவியில் இருந்து விலகியிருந்தார்.
மத்தியூஸ் பதவி விலகிய பின்னர் இலங்கை அணிக்கு தரங்க, மலிங்க, கப்புக்கெதர, பெரேரா ஆகியோர் தலைவர்களாக நியமிக்கப்பட்டனர். எந்தத் தலைமையும் பயனளிக்கவில்லை.
இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராக அண்மையில் பொறுப்பேற்ற ஹத்துருசிங்க மத்தியூஸ் மீண்டும் தலைமைப் பதவியை பொறுப்பேற்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இது குறித்து மத்தியூஸிடமும் பேச்சு நடத்தப்பட்டது. இதையடுத்தே அவர் தலைவராக நியமிக்கப்பட்டார்.
எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள பங்களாதேஷ் மற்றும் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடரில் மத்தியூஸின் தலைமையிலேயே இலங்கை களமிறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## படுமோசமான தோல்வியல்ல என்கிறார் அன்டர்சன்

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஆஷஸ் தொடரில் நாம் மோசமான தோல்வியைச் சந்திக்கவில்லை என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அன்டர்சன். ஆஷஸ் தொடரின் ஐந்தாவது ஆட்டம் இங்கிலாந்தின் தோல்வியுடன் நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்தது. அதன் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அன்டர்சன் இவ்வாறு தெரிவித்தார். "நாங்கள் கடந்த 18 மாதங்களாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். நாங்கள் சரியான திசையில் முன்னேறியுள்ளோம். ஒரு தொடரில் இதுபோன்ற மோசமான செயற்பாட்டால் குறை சொல்வதை விரும்பவில்லை. நாங்கள் சிறந்த ஆட்டத்தையே வெளிப்படுத்தினோம். ஐந்து போட்டிகளிலும் நாங்கள் மோசமான தோல்வியைச் சந்திக்கவில்லை. அனைத்து ஆட்டங்களும் ஐந்து நாள்கள் சென்றன. இது முற்றிலும் மோசமான தொடர் என்று சொல்ல முடியாது. பெரும்பாலான இடங்களில் நாங்கள் முன்னேற்றம் அடைந்துள்ளோம் என்பது எங்களுக்குத் தெரியும்" என அன்டர்சன் மேலும் தெரிவித்தார். (ம)

நாங்கள் கடந்த 18 மாதங்களாக முன்னேற்றம் அடைந்துள்ளோம். நாங்கள் சரியான திசையில் முன் னேறியுள்ளோம்.





# மீண்டும் வென்றது நியூசிலாந்து அணி

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் ஆட்டத்திலும் வெற்றிபெற்று தொடரில் 2:0 என்ற அடிப்படையில் தொடரில் முன்னிலை வகிக்கிறது நியூசிலாந்து அணி.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக்கொண்ட தொடர் நியூசிலாந்தில் தற்போது நடைபெற்று வருகிறது. வெலிங்டனில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் நியூசிலாந்து அணி ஏற்கனவே வெற்றிபெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் நெல்சன் மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 246 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஹபீஸ் 60 ஓட்டங்களையும், சடப் கான் 52 ஓட்டங்களையும், ஹசன் அலி 51 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பேர்குசன் 3 இலக்குகளையும், சவுத்தி, அஸ்ரில் இருவரும் தலா 2 இலக்குகளையும், போல்ட், சான்ட்னர் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

மழை குறுக்கிட்டதை அடுத்து நியூசிலாந்து அணிக்கு 25 பந்துப் பரிமாற்றங்களில் 151 ஓட்டங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்டது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான முன்றோ ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தாலும் சக ஆரம்ப வீரர் கப்ரில் தொடர்ந்தும் சிறந்த முறையில் துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். அவர் 50 பந்துகளில் அரைச் சதம் கடந்தார். வில்லியம்சன் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் தொடர்ந்தும் நிலைத்து நின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார் கப்ரில். கப்ரில் இறுதி வரை ஆட்டமிழக்காது 86 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். அவர் ஆட்ட நாயகனாகவும் தெரிவானார். (ம)

# ரகானேயின் நீக்கம் மிகப்பெரும் தவறு

### கெப்னர் அதிருப்தி





தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு ரகானே நீக்கப்பட்டமையும் முக்கிய காரணம் என்று தெரிவித்தார் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் கெப்னர் வெஸ்சல்ஸ்.

"தென்னாபிரிக்க ஆடுகளங்களில் ரகானே சிறப்பாக விளையாடக் கூடியவர். முந்தைய ஆட்டங்களில் சரியாக ஆடவில்லை என்பதற்காக அவரை முதல் டெஸ்டில் நீக்கியது தவறு. இது எனக்கு மிகுந்த அதிர்ச்சியை அளித்தது. அடுத்த 2 டெஸ்டில் ரகானே இடம் பெறுவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

இந்த டெஸ்டில் இந்தியாவின் பந்து வீச்சு மிகவும் நேர்த்தியாக இருந்தது. முன்னணி துடுப்பாட்ட வீரர்கள்தான் சரியாக விளையாடவில்லை. ஆனால் அவர்கள் நன்றாக விளையாடக் கூடியவர்கள். தென்னாபிரிக்கத் தொடருக்கு இந்திய வீரர்கள் சிறந்த முறையில் தயாராகவில்லை. ஆனால் பாண்டியா நல்ல முறையில் செயற்பட்டார்" என்று வெஸ்சல்ஸ் மேலும் தெரிவித்தார். (ம)

## முத்தரப்புத் தொடரில் அணியில் ஸ்ரோக்ஸ்

ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முத்தரப்பு ரி-20 தொடருக்கான இங்கிலாந்து அணியில் ஸ்ரோக்ஸ் இடம்பிடித்துள்ளார்.

இங்கிலாந்து அணி விவரம்- மோர்கன் (தலைவர்), பில்லிங்ஸ், ஜோஸ் பட்லர், குர்ரன், லிம் டாவ்சன், அலெக்ஸ் கேல்ஸ், கிறிஸ் ஜோர்டான், டேவிட் மலன், பிளங்கெட், அடில் ரசீட், ஜோ ரூட், ஜாசன் ரோய், பென் ஸ்ரோக்ஸ், ஜேம்ஸ் வின்ஸ், டேவிட் வில்லி, மார்க்வுட். (ம)



# இணைப்பாட்டங்கள் அமையாதமை தோல்விக்கு முதன்மைக் காரணம்

### இப்படிச் சொல்கிறார் கோக்லி



"தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு நீண்ட இணைப்பாட்டம் ஒன்று அரங்கேறாதமையே காரணம்' என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

தோல்விக்குப் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

'250 முதல் 275 ஓட்டங்களையே தென்னாபிரிக்க அணி இலக்காக நிர்ணயிக்கும் என்று நினைத்தோம். ஆனால் 210 ஓட்டங்களுக்குள் அவர்களைக் கட்டுப்படுத்தியது அற்புதமான முயற்சியாகும். எவராவது ஒருவரின் இன்னிங்ஸ் அல்லது ஒரு இணைப்பாட்டம் சிறப்பாக அமைந்திருந்தால் முடிவு எமக்குச் சாதகமாகவே அமைந்திருக்கும். இந்த டெஸ்ட்டை பொறுத்த மட்டில் முதலாவது இன்னிங்ஸில் கிடைத்த வாய்ப்புகளைச் சரியாகப் பயன்படுத்தியிருந்தால் வெற்றிபெற்றிருக்க முடியும். தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டியது அவசியமானது. பாண்டியாவின் ஆட்டம் சிறப்பாக அமைந்தது. தென்னாபிரிக்காவை தென்னாபிரிக்காவில் வைத்து வீழ்த்துவது கடினமானது என்பதை அறிவோம். அதனால் அடுத்தடுத்த ஆட்டங்களில் நாம் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்த வேண்டும்' என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## சகா சாதனை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் தொடரில் அதிக பிடியெடுப்புக்களை நிகழ்த்தியதன் மூலம், ஒரு டெஸ்ட் ஆட்டத்தில் அதிகமானோரை வெளியேற்றிய இந்திய இலக்குக் காப்பாளர் என்ற அடைவை நிலைநாட்டினார் சகா. நேற்றுமுன்தினம் முடிவுக்கு வந்த இந்த ஆட்டத்தில் சகா ஒட்டு மொத்தமாக 10 பிடியெடுப்புக்களை நிகழ்த்தினார். முன்னதாக கடந்த 2014ஆம் ஆண்டு டோனி 9 பிடியெடுப்புக்களை நிகழ்த்தியமையே சாதனையாக இருந்தது. இந்த நிலையில் குறித்த அடைவை சகா தகர்த்தார். (ம)

## மரண அறிவித்தல்கள்

### முத்துத்தம்பி மங்களேஸ்வரி



கரவெட்டி கிழக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், இல.163, யோகபுரம் கிழக்கு, யோகபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துத்தம்பி மங்களேஸ்வரி கடந்த (08.01.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி கனகம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் சரோஜா அவர்களின் சகோதரியும் காலஞ்சென்ற உதயபானுவின் அன்புத்தாயும் தமிழ்ச்செல்வன் (பிரதேச செயலகம், துணுக்காய் பிரதான முகாமைத்துவ உதவியாளர்), தமிழ்ச்செல்வி (சுற்றாடல் உத்தியோகத்தர், கிளிநொச்சி) ஆகியோரின் சிறியதாயாரும் ரமணி (கிராம அலுவலகர் பிரதேச செயலகம், துணுக்காய்), அமலராசா (திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலகம்) ஆகியோரின் மாமியும் ஈழவேந்தன் (பிரதேசசபை துணுக்காய்), பாரதி (குடும்ப நல உத்தியோகத்தர், முல்லைத்தீவு), கவிதா (கனடா) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2018) புதன்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வவுனிக்குளம் சேமக்காலையில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 12780) (8) தகவல்: தமிழ்ச்செல்வன் குடும்பம் (பெறா மகன்)

---

திருமதி

### மாணிக்கம் (மணியக்கா) செல்லத்துரை



நல்லூர் நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும், திருநெல்வேலி தலங்காவலர் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாணிக்கம் (மணியக்கா) செல்லத்துரை நேற்று (09.01.2018) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இளையதம்பி செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி செல்லத்துரையின் அன்புமனைவியும் புஸ்வதியின் அன்புத்தாயாரும் கீர்த்திதாசன் (தலைமை தபால் திணைக்களம், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்புமாமியும் அபிசனா, அஸ்மிதா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2018) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பதிவாளர் ஒழுங்கை,**
**திருநெல்வேலி கிழக்கு.**
**(தலங்காவலர்கோயிலடி)**

(Cs/12781)(8) **தகவல்: குடும்பத்தினர்**

---

E.S Printers
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
esprintersjaffna@gmail.com
021 492 7471, 021 492 7472

---

### பெக்கோ இயந்திரம் (சிறிய ரகம்) வாடகைக்கு வழங்குதல்

பனை அபிவிருத்திச் சபையின் பாவனையிலுள்ள பெக்கோ இயந்திரம் (சிறியரகம்) வாடகைக்கு விடப்படும். இவ் இயந்திரத்திற்கான சாரதி, போக்குவரத்து மற்றும் எரிபொருள் செலவு உள்ளடங்கலாக மணித்தியாலத்துக்கு ரூபா 2500/= (இரண்டாயிரத்து ஐநூறு) மட்டும் அறவிடப்படும். மேலதிக விவரங்களை 021 222 2034 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக வாகனப் பொறுப்பாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர், பனை அபிவிருத்திச் சபை.**
**தேசிய வீடமைப்புச் செயலகம், கண்டி வீதி, யாழ்ப்பாணம்.** (C5453/15/17)

---

## மரண அறிவித்தல்



### தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை

*(ஓய்வுபெற்ற லிகிதர் லங்கா மணல் கூட்டுத்தாபனம், புல்மோட்டை)*

பலாலி வீதி, கந்தர்மடம், 6 ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வல்லிபுரம்பிள்ளை 08.01.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - இராசம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற சுசீலாதேவியின் பாசமிகு கணவரும் சுதர்சன் (ஆசிரியர் - மு / முத்துஐயன்கட்டு இடது கரை அ.த.க. பாடசாலை) இன் அன்புத் தந்தையும் ஜெயந்தினி (ஏஞ்சல்ஸ் அழகு நிலையம் & பயிற்சியகம்) இன் அன்பு மாமனும் லக்சிகன் (யாழ். மத்திய கல்லூரி), டனிஸ் ஆகியோரின் அருமைப் பேரனும் அசலாம்பிகை, விவேகானந்தன், புவனேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுருநாதன், சிதம்பரநாதன், கணேசன், மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2018) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 12749/14) தகவல்: **வ.சுதர்சன்** (மகன்)

---

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

---

### Win Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும் A/C களும் உங்கள் வீடுகளுக்கு வந்து சிறந்த முறையில் திருத்திக்கொடுக்கப்படும். : **077 964 8942**

---

### வேலையாள்கள் தேவை

யாழ். நகரில் கட்டப்படும் பெரிய கட்டடத்துக்கு மெசினில் கல்லு அடிக்கக்கூடியவர்கள் தேவை.
(மெசினில் அடிக்க பழகியிருக்க வேண்டும்)
071 847 5531

---

### விற்பனைக்கு

புதிதாக கொள்வனவு செய்த BFJ XXXX தொடர் இலக்கம் கொண்ட NS 160 பல்சர் மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.

**தொடர்பு : 077 727 4369**

---

### விற்பனைக்கு

யாழ். K.K.S. வீதியில் பண்டிக்கோட்டுப்பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் K.K.S. முகப்புடன் 2 பரப்பு காணித்துண்டும் 31/2 பரப்பு காணித்துண்டும் 11/2 பரப்பு காணித்துண்டும் 4 பரப்பு காணித்துண்டும் யாழ். கைலாசபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 5 பரப்பில் அமைந்த வீடும் 6 பரப்பு காணித்துண்டும் யாழ். நல்லூர் முருகன் கோவிலுக்கு அண்மையில் கோவில் வீதி முகப்புடன் 5 பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு. **077 723 2535**

---

## மரண அறிவித்தல்

### திருமதி பராசக்தி குமாரவேலு



தோற்றம் : 14.12.1932
மறைவு : 09.01.2018

யாழ். நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.271, கரும்புள்ளியான் நட்டாங்கண்டலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி குமாரவேலு நேற்று (09.01.2018) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வியும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் (சங்கிலி விதானையார் - நெடுந்தீவு)- நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரவேலு அவர்களின் அன்பு மனைவியும், கணேசலிங்கம் (பாண்டியன்குளம்), பரராசலிங்கம் (குணம் - ஆலங்குளம்), காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், புண்ணியலிங்கம், (வவி - முன்னாள் பனங்காமம் பற்று ப.நோ.கூ.சங்க களஞ்சிய பொறுப்பாளர்) மற்றும் துரைலிங்கம் (வட்டக்கச்சி), தவலட்சுமி (அதிபர் - யாழ்/ பாசையூர் சென் அன்ரனிஸ் றோ.க.ம.வி) தவபாக்கியம் (கரும்புள்ளியான்), வசந்தாதேவி (கரும்புள்ளியான்), பாக்கியவதி (வவுனியா), காலஞ்சென்ற நாகலிங்கம் (பாலு - கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், தயாளதேவி, தங்கமணி, வசந்தினி, காலஞ்சென்றவர்களான் லோகேஸ்வரி, பேரின்பம் (கிராம சேவையாளர்) மற்றும் உதயகுமாரி, ஸ்ரீஸ்கந்தராசா, நவம், ரகுச்சந்திரன் (பொது வைத்தியசாலை, வவுனியா), றாதா ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கனகசபை( நெடுந்தீவு), கனகரத்தினம் (நெடுந்தீவு), சதாசிவம் (குழந்தை - நெடுந்தீவு), சின்னத்தம்பி (வட்டக்கச்சி) மற்றும் வைத்திலிங்கம் (தம்பு - மல்லாவி), பொடிசிங்கம் (பாண்டியன் குளம்), காலஞ்சென்ற இராமுப்பிள்ளை (நெடுந்தீவு) மற்றும் கோபாலுப்பிள்ளை (முன்னாள் கணக்காளர் - நெடுந்தீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்) ஆகியோரின் பாசமிகுந்த சகோதரியும், காலஞ்சென்றவர்களான கோமளம் (நெடுந்தீவு), பொன்னம்மா (நெடுந்தீவு), கனகம்மா (ஆசிரியர் - அல்லைப்பிட்டி) மற்றும் முருகேசு (ஆசிரிய ஆலோசகர் P.T. இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.01.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பாலியாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.271, கரும்புள்ளியான்**
**நெட்டாங்கண்டல், மல்லாவி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

077 359 6845 (ஏ.கே.என்.12601) (13.17)

---

### உடன் தேவை

பாமசி / வைத்திய உதவியாளர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

*ROYAL Medical Center*
**454. Hospital Road, Jaffna.**
**021 320 2300**
**077 045 7976**
(c/31686)(12-17)

---

### வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11 kg மேற்பட்ட பொதிகளுக்கு 1 kg க்கான கட்டணம்
UK-550/-
France - 700/-
Germany - 650/-
Swiss - 750/-
Canada - 950/-

ஏனைய நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
பொதிகள் அனுப்பி வைக்கப்படும்

சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிப்புணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**

077 755 4528
3-5 Working Days
DHL aramex SKYNET


---

## மரண அறிவித்தல்

### சு.வ.கணேசன்

(ஓய்வுபெற்ற யாழ். மேல் நீதிமன்ற பதிவாளர், அகில இலங்கை சமாதான நீதவான், பிரசித்த நொத்தாரிசு, அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்)

அன்னை மடியில் : 17.02.1939 ஆண்டவன் அடியில் : 08.01.2018



அனலைதீவைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சு.வ.கணேசன் 08.01.2018 திங்கட்கிழமை இறைபத மெய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வயித்தியநாதன் - தையலம்மை தம்பதியரின் அன்பு மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், திலகத்தின் அன்புக்கணவரும் நிவேதிதா, சுஜீவன், சேந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையும், குலதீரன், வத்சலா, ஆரணி ஆகியோரின் அன்புமாமனும், பீஷ்மனின் அன்புப்பேரனும், குலசேகரம், பூலோகசுந்தரம், அருந்ததி, திலகவதி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற செல்வராணி மற்றும் அருந்தவலட்சுமி, காலஞ்சென்ற குணானந்தன் மற்றும் இராசரத்தினம், லோகமானியதிலகன், சறோஜினிதேவி, தில்லைநாதன், பரந்தாமன், தனம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.01.2018) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது வதிவிடத்தில் (124/1, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

021 221 7931 / 077 616 4287

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.